SUPER VISA
விண்ணப்பங்கள்
416 269 5883
மருத்துவக் காப்புறுதி
647 700 4941

குடிவரவுத் துறை சார்ந்த சட்டத்தரணிகள் சேவைக்கு தமிழில்
பொன்னையா பாலசுப்பிரமணியம் 416.335.3233

இருளிலிருந்து ஒளிக்கு...
# பூபாளம்
www.boobalam.com




Aug 2013 | Monthly
Issue-17

# கொழும்பில் பள்ளிவாசல் மீது தாக்குதல்



கொழும்பில் கடந்த ஞாயிறன்று ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. சில சிங்கள பௌத்த காடையர்களால் மசூதி ஒன்று தாக்கப்பட்டதைத் தொடர்ந்து மறு நாள் கிராண்ட்பாஸ் பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதே வேளையில் இலங்கை அரசு நிலைமையை கட்டுபடுத்த முஸ்லிம் சமயத் தலைவர்களோடும், இஸ்லாமிய அரசியல் தலைமையுடனும் பேசி நிலைமையை அமைதிப்படுத்த விளைகின்றது.

சுமார் நான்கு பேர் வரை இந்த வன்முறைகளில் காயம் அடைந்துருந்தாலும் கூட தீவிரகடும் போக்கான சிங்கள மற்றும் தீவிர இஸ்லாமிய கருத்து உள்ளவர்களிடையே தொடர்ந்தும் பதட்டம் நிலவுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு நகர தெரு விரிவாக்கம் தொடர்பாக சர்ச்சைக்குரிய பள்ளிவாசல் உடைக்கப்பட இருந்ததும் பின்னர் அப் பள்ளிவாசலை வேறு ஓர் இடத்தில் கட்டுவதற்கு அரசாங்கம் உடன்பட்டதும் முன்னைய செய்திகள்.

அரசாங்கம் உறுதி அளித்த புதிய நிலத்தில் இருந்த அரசு மரம் ஒன்றை அகற்றுவது தொடர்பாக பௌத்த தீவிர வாத அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்து இருந்தன.

இதன் விளைவாகவே இந்த பதட்டமும் கை கலப்பும் ஏற்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவராலயம் இந்தக் கலவரம் பற்றி தனது கவலையை தெரிவித்துள்ளது. ”இந்த சம்பவம் இலங்கையில் முஸ்லீம் சமூகத்திற்கு எதிராக அண்மையில் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதை காட்டுவதாகவும் குறிப்பாக பிரச்சினைக்குரிய விடயமான தாய் உள்ளது,” எனவும் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## உள்ளே...


வெலிவேரியா உணர்த்தும் செய்தி


வட மாகாண சபைத் தேர்தல் களம்



யோகர்ணனின் தமிழ் கதை 2


தலைக்கறுப்புக் காட்டாத அஞ்ஞாதவாசம்




## கரிபானாவில் முதல் தமிழ் எம்.பி


நன்றி- சிற்சபைசனின் முகப்புத்தகப் பக்கம்



# "Make Your Dream Home Come True"



**Brampton** $351,900

Semi-Detached, Bed 3+1, Wash 3, Kitchen, Finished basement.



**Brampton** $414,900

Detached, Bed 3, Wash 3, Kitchen, Easy access to all amenities.



**Milton** $389,000

Att/Row/Twnhouse, Bed 3, Wash 3, Kitchen, Finished Basement



**Mississauga** $479,900

Detached, Bed 3, Wash 2, Kitchen, Finished Basement

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE



**Brampton, Exclusive.**

Detached, Bed 4, Wash 4, Kitchen, Finished Basement. Please call.



**Mississauga** $224,500

Condo Apt, Bed 2+1, Wash 2, kitchen, Best location.



**Mississauga** $329,900

Semi-Detached, Bed 3, Wash 2, Kitchen, Affordable.



**Brampton, Exclusive.**

Detached, Bed 4, Wash3, Kitchen, Basement Sep. Entrance, Please call.

- What is new in Real Estate Market?
- Is this the best time to sell or buy our house?
- What's the current market value of our property?
- How could we sell our properties with Minimum or No real estate charges?



**PARAM GNANASWARAN**
REAL ESTATE BROKER

## Call and get the answers from Param G

## 416-230-1107

**RIGHT AT HOME REALTY INC., BROKERAGE**

HOME OFFICE:
401-7045 EDWARDS BLVD.
MISSISSAUGA, ONT.L5S 1X2
PH# 905-565-9200

MAIN OFFICE:
202-895 DON MILLS ROAD
TORONTO, ONT.M3C 1W3
PH# 416-391-3232

Creaa Design

இருளிலிருந்து ஒளிக்கு...
பூபாளம்
www.boobalam.com

# வட மாகாண சபைத் தேர்தல் களம்



## தாயகத்திலிருந்து விஜய்

இலங்கையில் வட மாகாண சபை, வட மேல் மாகாண சபை, மத்திய மாகாண சபை ஆகிய மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல் நடைபெறவுள்ளன. வேட்பு மனுத்தாக்கல்கள் ஒக்டோபர் 01 ஆம் திகதி நண்பகலுடன் நிறைவடைந்த நிலையில், தேர்தல்கள் எதிர்வரும் செப்டம்பர் 21 ஆம் திகதி நடைபெறுமெனத் தேர்தல் ஆணையாளர் அறிவித்திருக்கிறார்.

1987 ஆம் ஆண்டு 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கயைம உருவாக்கப்பட்ட வட கிழக்கு மாகாண சபை 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் 16 ஆம் திகதி உயர் நீதிமன்ற தீர்ப்புக்கமைய வடக்கு, கிழக்கு மாகாண சபைகளாக தனித்தனியாகப் பிரிக்கப்பட்டதையடுத்து நடைபெறும் முதலாவது தேர்தல் இதுவாகும்.

வட மாகாணத்தில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத் தீவு அகிய ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட 7 இலட்சத்து 14 ஆயிரத்து 488 வாக்காளர்கள் 36 மாகாண சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக வாக்களிக்க உள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் 16 உறுப்பினர்களும் வன்னி மாவட்டத்தில் 20 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளதுடன் இரண்டு போனஸ் உறுப்பினர்களும் நியமிக்கப்படுவுள்ளனர்.

தமிழரசுக் கட்சி(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு), ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி உட்பட 11 அரசியல் கட்சிகளும் 08 சுயேட்சைக் குழுக்களும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை வேட்பாளர் தெரிவு பெரும் சர்ச்சையையும் எதிர்பார்ப்புக்களையும் தோற்றுவித்திருந்த நிலையில், பொது வேட்பாளராக ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். தமிழரசுக் கட்சியினால் முதன்மை வேட்பாளராக பெயர் குறிப்பிடப்பட்டிருந்த அக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசா முதன்மை வேட்பாளர் போட்டியிலிருந்து ஒதுங்கிக் கொண்டதனையடுத்து முன்னாள் நீதியரசர் விக்கினேஸ்வரன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி தனித்துப் போட்டியிடலாம் எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்தே போட்டியிடுகிறது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதன்மை வேட்பாளராக ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா போட்டியிடலாம் எனத் தெரிவிக்கபட்டு வந்த போதிலும், அக் கட்சி சார்பில் முதன்மை வேட்பாளராக எஸ். தவராஜாவே போட்டியிடுகிறார். டக்ளஸ் தேவானந்தா "ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைவாக வடமாகாண சபைத் தேர்தலில் நான் போட்டியிடவில்லை" எனத் தெரிவித்திருக்கிறார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முதன்மை வேட்பாளராக இராமநாதன் அங்கஜன் போட்டியிடுகிறார். ஸ்ரீ ரெலோ கட்சியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து இத் தேர்தலில் போட்டியிடுகிறது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இம்முறை தனித்துப் போட்டியிடுகிறது. வடக்கில் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மூன்று மாவட்டங்களில் அக்கட்சி போட்டியிடுகிறது. யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் அக்கட்சி போட்டியிடவில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, வட மாகாணத்தில் முன்னாள் போராளிகள் சிலரை தேர்தலில் களமிறக்கும் எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அவ்வாறானவர்கள் தேர்தலில்



போட்டியிடச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் புலிகளின் ஊடகப் பிரிவு பொறுப்பாளராக செயற்பட்ட தயா மாஸ்டர் போட்டியிடுவார் எனத் தெரிவிக்கப்பட்டு வந்த போதிலும் இறுதியில் அவருடைய பெயரும் வேட்பாளர் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை. அமைச்சரும் கட்சியின் செயலாளருமான சுசில் பிரேம்ஜயந்த், "முன்னாள் போராளிகள் ஐம்பது பேர்வரையில் போட்டியிட விண்ணப்பித்திருந்த போதிலும் அவர்கள் நேர்முகத் தேர்வில் பங்கெடுக்காததால் போட்டியிட அனுமதிக்கவில்லை" எனத்தெரிவித்திருக்கிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில், புலிகளின் வவுனியா மற்றும் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளராகப் இருந்த எழிலனின் மனைவி ஆனந்தி சசிதரன் போட்டியிடுகிறார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, வடமாகாணசபைத் தேர்தலை "தமிழ் மக்களின் தேசிய அரசியலை வட மாகாணத்திற்குள் முடக்கிவிடும்" நடவடிக்கை என விமர்சித்திருப்பதுடன், வட மாகாணச் சபைத் தேர்தலில் போட்டியிடவில்லை. தேர்தல் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், "இத்தேர்தலில் பங்குபற்றுவதா? வாக்களிப்பதா? யாருக்கு வாக்களிப்பது? போன்ற தீர்மானங்களை தமிழ் மக்களின் மனச்சாட்சிக்கு விட்டுவிடுகிறோம்" எனவும் குறிப்பிட்டிருக்கிறது.

வட மாகாண சபைத் தேர்தல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஈ.பி.டி.பிக்கும் இடையிலானதோர் பலப்போட்டியாக அமைந்திருக்கிறது. இந்தியாவும், சர்வதேச சமூகம் வட மாகாண சபைத் தேர்தலை நடாத்த வேண்டும் என வலியுறுத்தல்களை வழங்கி வந்த நிலையில் இத் தேர்தல் நடைபெறுகிறது என்பதனால் இத் தேர்தல் சர்வதேச அவதானிப்பைப் பெற்றுமுள்ளது.

மாகாண நீதிமன்றுகளிலும் சபைகளிலும் வழக்காடுதல்
சத்தியப்பத்திரம் தயாரித்தல்
ஸ்பொன்சர் படிவங்கள் நிரப்புதல்
பிரதிகளை அத்தாட்சிப்படுத்துதல்
மொழிபெயர்ப்புப் பணிகள்
இவை அனைத்திற்கும்
கனக மனோகரன்
சட்டத்தரணி (இலங்கை)
சத்தியப்பிரமாண ஆணையாளர்- கனடா
ஒன்ராறியோ சட்டசபையின் அங்கீகாரம் பெற்ற சட்டவாதி
Legal Counsel Licensed By
The Law Society of Upper Canada
720, Kennedy Road, #311

பூபாளத்தில் விளம்பரம் செய்ய
416.287.6397
boobalam@ymail.com

JUDE ANTHONYPILLAI PROFESSIONAL CORPORATION
JUDE ANTHONYPILLAI LL.B.
Barrister, Solicitor & Notary Public
Tel: 416.332.8547
Fax: 416.332.8379
Email: judelawoffice@rogers.com
Your questions answered! Your options explained!
2390 Eglinton Ave.East, Suite 250, Scarborough, ON. M1K 2P5

Keeth Appliance & Heating, Air conditioning Services
Central Air coditioning, furnace repair and installation,
Fridge/Washers/Dryers, Dishwashers/Stoves
அழையுங்கள் கீத்!
Certified technicians! Reasonable rates! Reliable service!
Keeth
Repair Technician
416.995.3938


BALACHANDRAN MUTHAIAH
Professional Corporation
Balachandran Muthaiah LL.B.
Barrister, Solicitor & Notary Public
Real Estate Law, (Residential/Commercial), Business Law, Family Law, Immigration Law, Estates Law, Last Will, Affidavits, Probate, Translations, etc.
2401 Eglinton Ave. E. Suite 300, Toronto, ON M1K 2M5
Ph: 416.755.5544, Fax: 416.755.5594
e-mail: balalawoffice@gmail.com


HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future Realty Inc. Brokerage
205 - 7 Eastvale Drive,
Markham, ON. L3S 4N8
Dir: 416 - 999 - 5337
Tel: 905 - 201 - 9977
Fax: 905 - 291 - 9229
www.buyandsellwithruby.com
Ruby Thambiah
Sales Representative
'For All Real Estate needs in Brampton please call me.'


கனடிய தமிழ் வழக்கறிஞர்
The Law office of
Raphael Maharaja
Barrister & Solicitor
Tel: 416-847-7077 | Fax: 416-847-7088
GTA SQUARE
5215 Finch Ave, East. Unit 219
Toronto Ontario M1S 0C2 ( Middlefield & Finch )
info@maharajalaw.com
www.maharajalaw.com
Creaa Design

# தேர்தல் வருகின்றது! மீண்டும் ஒரு தேர்தல்!

வட மாகாணத்துக்கான தேர்தல் களம் சூடுபிடிக்க மீண்டும் ஆரம்பித்திருக்கின்றது. சனநாயகத்தின் வேர்களை மீண்டும் ஒரு தடவை குறிவைத்து அரசியல் நடாத்த கட்சிகள் முனைந்துள்ளன.

இந்த நிலையில் தமிழர் கூட்டமைப்பும், மகிந்த அரசின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் இடையே நேரடி போட்டி இருந்தாலும் கூட பல்வேறு அணிகள் அரசியல் மகுடம் சூட்ட தேர்தல் களத்தை பயன்படுத்த முயற்சிக்கின்றன.

முதல் முறையாக தமிழர் கூட்டமைப்பு ”ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு” என நான்கு தசாப்தங்கள் கடந்து தனித் தமிழ் ஈழக் கோரிக்கையை கைவிட்டு அரசியல் நடாத்த முன்வந்திருக்கின்றது. இது அரசியல் ரீதியாக தமிழ் மித வாத அரசியலுக்கு புதிய வழியொன்றை வகுக்க உதவும்.

மறுமுனையில் அரசுடன் கூட்டுச் சேர்ந்து அரசியல் களம் அமைத்துள்ள ஈ பி டி பி கட்சியினர் ”மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி” என்கின்ற பாணியில் இந்தத் தேர்தலை சந்திக்கின்றனர்.

இனப் பிரச்சனைக்கான அரசியல் தீர்வும், 13 ஆவது சரத்தும் இந்தத் தேர்தல் களத்தை நன்கே அலங்கரிக்க உள்ளது மறுக்க முடியாத ஒன்று.

13 ஆவது சரத்து 1987 காலப் பகுதிகளில் இந்தியாவால் அறிமுகப்படுத்தப்பட்டபோது இது இறுதித் தீர்வாகாது என முழங்கிய அரசியல் கட்சிகளும் 13 சக (+) எனக் கூறிவருகின்ற அரசியல் கட்சிகளும் ஒரே களத்தில் தேர்தல் களத்தை நோக்கி ஓடுகின்றன.

தற்போது குறைந்த பட்சம் 13 ஆவது சரத்தையாவது காப்பாற்ற முடியுமா என்கின்ற ஏக்கம் அதிகாரப் பரவலாக்கலை ஆதரிக்கின்ற எல்லோர் மனங்களிலும் இருந்து வெளிப்படுகின்றது.

இந்த தருணத்தில் தேர்தலுக்குப்பின் மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்களும், 13 வது சரத்து பற்றிய விவாதங்களும் முற்றுப் பெறாது என்பதும் வெளிப்படையான உண்மை.

தமிழர்களின் தியாகங்கள் அவர்கள் விட்டுச் சென்ற கனவுகள் ஓர் குறைந்த பட்ச அரசியல் தீர்வின் மூலமாகவேனும் ஈடு செய்யப்பட வேண்டும் என்பது எமது அவா. இத் தீர்வானது சர்வதேச அழுத்தத்தின் மூலமே கிடைக்கும். நாம் சர்வதேச ரீதியாக எம் நேச சக்திகளை இனங்கண்டு தெளிவானதொரு அரசியல் தீர்வை நோக்கி எமது மக்களை வழி நடாத்தும் தலைமையினைக் கட்டி எழுப்புவோம்.

“இது இன்னும் ஒரு தேர்தல் தான்” என நம்மில் பலர் ஏங்கினாலும் கூட துப்பாக்கிகள் ஆண்ட பூமியை இனியாவது சனநாயகம் ருசி பார்க்க விடலாமே என்ற ஏக்கம் எம்முள் இல்லாமல் இல்லை.

வெற்றி காண்பது சனநாயகமாய் இருக்கட்டுமே! அதுவே நமது வேண்டுதல்!

பூபாளம்
www.boobalam.com

பூபாளம் மாத இதழ்
Boobalam Media Group
நிறுவனத்தினரால் ரொறன்ரோ, கனடாவில்
வெளியிடப்படுகிறது.

பிரதம ஆசிரியர்
நேசன்

ஆசிரியர் குழு
ஜேம்ஸ், பரதன், சபேசன், ஜோர்ஜ், நமு
வடிவமைப்பு
ஜீவன், ஆதவன், சிவா, ஜோர்ஜ்

இந்த இதழில்
வெளியாகும் ஆக்கங்களில் உள்ள கருத்துக்களுக்கு
ஆக்கியோரே பொறுப்பு.
அவை பூபாளத்தின் கருத்தைப்
பிரதிபலிப்பனவாய் இருக்க வேண்டிய
கட்டாயம் இல்லை.
ஆக்கங்களின் கருத்துச் சிதைவுறாமல்,
மாற்றங்களைச் செய்யும் உரிமை
ஆசிரியர் குழுவுக்கு உண்டு.
வெளியாகும் விளம்பரங்களுக்கு
விளம்பரதாரர்களே பொறுப்பு.
மொன்றியலில்
விளம்பர, வினியோகத்தொடர்புகளுக்கு
போத்தார் - 514 827 8392

**Chief Editor**
**Nesan**
**Editorial Board**
**Jamesh, Parathan, Sabesan, George, Namu**
**Design**
**Geevan, Aathavan, Siva, George**

**Boobalam is published by**
**Boobalam Media Group**
**1345, Morningside Ave #8,**
**Scarborough, On, M1B 2T3**
**Tel: 416**
**e-mail: boobalam@ymail.com**
**Web:www.boobalam.com**

# இந்தியாவில் மாநிலங்களின் பிரிப்பு பலம் சேர்க்குமா..? பலவீனப்படுத்துமா?

இந்தியாவின் கோதாவரி, கிருஸ்ணா என்ற முக்கிய ஆறுகளை தன்னகத்தே கொண்ட ஆந்திர மாநிலத்திலிருந்து கடல் சாரா மத்திய பகுதிகளைப் பிரித்து தனித் தெலுங்கானா என்ற 29 வது புதிய மாநிலம் அமைக்கப்படுவதற்கான அறிவிப்பை இந்திய மத்திய அரசு ஜூலை 30, 2013 அன்று வெளியிட்டது. இதற்கான பூர்வாங்க வேலைகள் 4 மாதற்திற்குள் முடிவடைந்துவிடவேண்டும் என்று நேர அட்டவணையும் குறித்துள்ளது. தெலுங்கானாவின் தலைநகரமாக தற்காலிகமாக ஹைத்தராபாத் இருக்கப் போகின்றது. இவ் அறிவித்தலைத் தொடர்ந்து இதற்கு ஆதரவாகவும், எதிராகவும் போராட்டங்கள் நடைபெற்று ஓய்திருக்கின்றன?

“Telangana” என்ற சொல் “Trilinga” என்ற சொல்லின் மருவலால் உருவானது. இந்து சமய நம்பிக்கையாளர்களின் அடிக்கோளின்படி கைலேஸ்வரம், சிறீசைலம், தார்க்சர்மா மலைகளில் அமைந்த மூன்று லிங்களால் உருவான சொற்பதம் இது என்றும் சொல்லப்படுகின்றது. Kaleswaram, Srisailam and Draksharama என்று மூன்று மலைகளின் எல்லை புறமாக உடைய தெலுங்கு தேசம் தெலுங்கு என்னும் மொழிவள மாநிலமாக அமைவதால் தெலுங்கான என்ற பெயர் உருவானது.

தெலுங்கான என்ற புதிய மாநிலத்தை அமைத்தல் என்ற கோஷங்களும், போராட்டங்களும் கடந்த 2 வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வந்தன. இதில் ஆந்திர மாநிலத்தின் அரசியல் கட்சிகள் தமது மக்கள் ஆதரவுத் தளத்தை பெருக்கும் நோக்கில் கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்களை நடாத்தி வந்தனர். பெருந்திரளான மாணவர்கள், கூடவே பொதுமக்களும் வீதியில் இறங்கி பிரிப்பதற்கு ஆதரவாகவும், எதிராகவும் போராட்டத்தில் ஈடுபட்டனர் வன்முறையிலும் ஈடுபட்டன. இந்தப் போராட்டங்களின் பின்னணியில் அரசியல் கட்சிகளின் கரங்கள் நிறையவே இருந்தன. இதனைத் தொடர்ந்து இந்திய பாரம்பரிய அரசியல் கட்சிகளில் இருந்து பிரிந்த சிலர் புதிய மாநிலக் கட்சிகளை அமைத்தனர். இது சிறப்பாக ஆந்திர மாநிலத்தை தற்போது ஆண்டுவரும் காங்கிரஸ் கட்சியில் நடைபெற்றது. சிலர் கட்சியில் இருந்து கொண்டே தமது கட்சியின் பொது முடிவுகளுக்கு எதிராக குரல் கொடுக்க, தர்ணா, சாகும்வரை உண்ணாவிரதம் செய்யவும் தவறவும் இல்லை.

ஆனால் இவை எல்லாவற்றிலும் ஒரு பொதுவான போக்கை காணக் கூடியதாக இருந்தது. ஒரு மாநிலத்தை சிறந்த முறையில் நிர்வகிப்பதற்காக புதிய மாநிலங்களை உருவாக்குதல் என்ற கோதாவில் இல்லாமல் தமது அரசியல் செல்வாக்குகளை உயர்த்தி பிடிப்பதற்காகவே இந்த ஆதரவு எதிர்ப்பு, கோஷங்களைப் போராட்டங்களை அரசியல் கட்சிகள் பெரும்பாலும் நடத்தினர் என்பதே அதுவாகும். ஒரு மாநில மக்களின் நலன்களின் அடிப்படையில் சிறந்த நிர்வாக பொறிமுறையை ஏற்படுத்தி மக்களுக்கான சேவையை செய்வதற்காக புதிய நிர்வாக பிரதேசங்களை ஏற்படுத்துதல், அல்லது இணைத்தல் அல்லது எல்லைகளை மீள் வரைவு செய்தல் என்பது நல்லது தான். மாறாக அரசியல் கட்சிகள் தமது செல்வாக்கு தளங்களை நிறுவுவதற்காக மக்கள் நலன்களை கருத்தில் கொள்ளமல் செயற்படல் ஆரோக்கிமானது அல்ல. பின்னையதே பெரும்பாலும் தெலுங்கான அமைவதில் முக்கிய பங்காற்றியது எனலாம்.

கூடவே மொழி, மதம், கலாச்சார விழுமியங்களை மட்டும் கருத்தில் கொண்டு நடாத்தப்படும் பிரிப்புக்கள் இந்தியா போன்ற பல இன, மத மக்கள் இணைந்து வாழும் நாட்டிற்கு ஆரோக்கியம் சேர்க்கும் விடயம் அல்ல. இது பிரிவிவைாதத்தை ஏற்படுத்தி மத, இனக்கலவரங்களை ஒரு நாட்டில் ஏற்படுத்தும். இந்தியாவின் ஒருமைப்பாட்டுடன் கூடிய வளர்ச்சி, முன்னேற்றத்தை சகித்துக்கொள்ள முடியாத உள்ளூர், வெளியூர் சக்திகளில் இதில் தமது கரங்களை ஆளவே பதிக்கவே செய்வர். இதனை சமான்ய மக்கள் புரிந்து கொள வேண்டும். அன்றேல் உலகின் மிகப்பெரிய ஜனநாய நாட்டில் கங்கை காவேரி, ஜமுனா போன்ற பாலாறுகளுக்கு பதிலாக இரத்த ஆறுகள்தான் ஓடும் நிலை ஏற்பட்டுவிடலாம்.

ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களை குறுக்கறுத்து ஓடும் ஆறுகளின் தண்ணீரைப் பங்கிடுதல் என்பது இந்தியாவற்கு தொடர்ந்த தலையிடியாக இருந்துவருகின்றது. இதிலும் சிறப்பாக தென் மாநிலங்களில் இவை மிகவும் அதிகமாக உள்ளது. இதில் மாநிலங்களில் ஆளும் பிராந்தியக் கட்சிகள் தமது மாநிலத்தின் நலன்கள் என்பதை இந்தியாவின் பொது நலன்கள் என்பதற்கு மேலாக தூக்கி பிடித்து இந்தியாவின் உச்ச நீதிமன்னற முடிவுகளைக் கூட நடைமுறைப்படுத்த தயங்கும் மோசமான உறவு முறைகளை தன்னக்கே கொண்டுள்ளன.

கோதவாரி, கிருஸ்ணா என்ற மிகப் பெரிய ஆறுகள் அமையப்போகும் தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம் என்ன இருமாநிலங்களுக்கூடாக பாய்தல் புதிய தலைவலி ஒன்றை இந்திய சந்திக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளியுள்ளது. அமையப் போகும் புதிய மாநிலத்தால் ஏற்படப்போகும் புதிய பாரிய தலைவலியாக இந்தியாவில் உருவெடுக்கலாம்? என்பதில் ஐயம் இல்லை. இவற்றை இந்திய மத்திய அரசு கையாளப் போகின்றது என்பதில்தான் தங்கியிருக்கின்றது புதிய தெலுங்கான மாநிலத்தின் வெற்றி.

(ஈஸ்வர்)

# புதிதாக வீடு வாங்கப் போகிறீர்களா?
# காதல் கண்ணை மறைக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்!

நீங்கள் வாங்குகின்ற வீட்டை குடும்ப சமேதரராய் சென்று பார்வையிடப் போகும் போது நீங்கள் வீட்டைப் 'பெண் பார்க்க' வருவதாக முன்னரே தெரிந்து வீட்டை அலங்காரம் பண்ணி அழகுபடுத்தியிருப்பார்கள். நீங்கள் வீட்டின் அழகில் மயங்கி, 'கண்டேன், காதல் கொண்டேன்' என்று வாங்க முடிவு செய்திருப்பீர்கள்.

ஆனால் அந்த வீட்டின் சுவர்களுக்குப் பின்னால் ஆயிரம் இரகசியங்கள் இருக்கும். கூரைக்குள் ஒரு மிருகக் காட்சிச் சாலையே இருக்கும். கூரையின் மேல் பகுதி உக்கி, மழை நீரை வீட்டுக்குள் வரவழைத்துக் கொண்டிருக்கும். அத்திவாரங்கள் வெடித்து, நீர் நிலக்கீழ்ப் பகுதிக்குள் நுழைந்திருக்கும். ஈரப் பதன் அதிகரித்து, மிகவும் பாதகமான பங்கஸ் வளர்ச்சி இருந்திருக்கும். மின்சார இணைப்புகள் ஆபத்தானவையாக, விதிமுறைகளை மீறி பொருத்தப்பட்டனவாக இருக்கும். எரிவாயுக் கருவிகள் பழையனவாக இருக்கும். கதவுகள் நெளிந்து குளிர் காற்று உள்ளே நுழையும். பல காலமாக எவருக்கும் தெரியாமல் கஞ்சாச் செடிகளை நூற்றுக்கணக்கில் இரகசியமாக வளர்த்த வீட்டை பளபளப்பாக அலங்கரித்து விற்பனைக்கு என விளம்பரப்படுத்தியிருப்பார்கள்.

இதையெல்லாம் மறைத்து, அலங்காரம் பண்ணிய வீட்டின் மேல் வந்த காதல் கண்ணை மறைக்காமல், அவற்றை எப்படிக் கண்டுபிடிப்பீர்கள்?

இதற்குத் தான் வீட்டுப் பரிசோதனையாளர்கள் உள்ளனர். சில நேரம் வீடு (பெண்?) அழகாக இருக்கிறது என்று, வீட்டின் கற்பில் சந்தேகம் கொள்வானேன், அதற்கு பரிசோதனையாளர் வேறு எதற்கு என்று பணத்தைச் சேமிக்கவும் நினைக்கக் கூடும்.

வால்மாட்டில் வாங்கிய இரண்டு டொலர் பொருளை உங்களுக்குப் பிடிக்காவிடில், எந்த விதக் கேள்வியுமின்றி, திருப்பிக் கொடுத்து பணத்தை மீளப் பெற முடியும். ஆனால் இலட்சக்கணக்கில் கொடுத்து வாங்கிய வீட்டை பின்னர் திருப்பிக் கொடுக்க முடியாது.

எனவே வருமுன் காப்போர்களாக, வீடு வாங்குவது என தீர்க்கமாக முடிவு செய்து ஒப்பந்தத்தில் கையொப்பம் இடுவதற்கு முன்பாகவே, வீட்டின் நிலைமையை சுதந்திரமான பரிசோதனையாளர் மூலம் பரிசோதிக்க விடுவதன் மூலம் வீட்டில் உள்ள குறைபாடுகளை அறிந்து கொள்ள முடியும். மோசமானதாயின் வீட்டை வாங்காமல் விடவும், உங்களால் திருத்தப்படக் கூடியதாயின் திருத்த வேலைகளுக்கு ஏற்றவாறு வீட்டு விலையைக் குறைக்குமாறு பேரம் பேசவும் முடியும்.

ஆனால், ஏணியும் வாகனமும், ஒரு பிசினஸ் காட்டும் உள்ள எவரும் தங்களை வீட்டுப் பரிசோதகராகக் கூறி, தகுதியும் அனுபவமும் அறிவும் இல்லாத பலரும் இந்தத் தொழிலில் இறங்கி பணத்தை வாங்கி விட்டு, வீடு நல்ல நிலைமையில் இருப்பதாகக் கூறி, பலரைச் சிக்கலில் மாட்டி விடும் நிலமை ஏற்பட்டுள்ளது. பல வீடு விற்பனை முகவர்களும் தகுதியற்ற வீட்டுப் பரிசோதகர்களைப் பயன்படுத்தி அதிகளவில் வீடுகளை விற்று வருகிறார்கள்.

உங்கள் வாழ்வில் வாங்கும் மிகப் பெரிய முதலீடும் செலவும் நீங்கள் வாங்கும் வீடு தான். இலட்சக்கணக்கான டொலர்கள் செலவிட்டு வாங்கும் வீட்டின் நிலையை அறிந்து கொள்ள, நீங்கள் செலவிடும் சில நூறு டொலர்கள் செலவு அல்ல, முதலீடே!

எனவே அரச அங்கீகாரம் பெற்ற, பதிவு செய்யப்பட்ட வீட்டுப் பரிசோதர்களின் சேவையைப் பெறுவதன் மூலம் நீங்கள் செலவிடும் பணத்திற்கான முழுப்பயனையும் பெறுங்கள்.

ஒன்ராறியோவில் தகைமை பெற்ற பதிவு செய்யப்பட்ட வீட்டுப் பரிசோதகர்களின் விபரங்களை oahi.com என்ற இணைத்தளத்தில் பார்வையிடலாம். அமெரிக்காவில் வீடு வாங்குபவர்கள் ashi.com என்ற இணையத்தளத்தில் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கலாம்.

# போராளி பொன்னுத்துரை



தக்கார் தகவிலர் என்பது அவரவர்

எச்சத்தாற் காணப் படும்.

என்பது வள்ளுவர் வாக்கு. ஒருவன் சமுதாயத்தில் தக்கவனா தகாதவனா என்பதை அந்தச் சமூகம் அவன் விட்டுச் செல்கின்ற எச்சத்தைக் கொண்டே மதிப்பிடுகிறது. ஒருவன் தான் வாழ்ந்த சமூகத்தின் தேவை அறிந்து செயற்பட்டிருந்தால், சமூகத்தில் பலர் பயன்பெறும் வகையிற் பணியாற்றியிருந்தால் அவன் தக்கசெயல் செய்ததாகக் கொள்ளப்பட்டுச் சமூகத்தால் போற்றப்படுகிறான். அவ்வாறு போற்றப்படுபவரே அமரர் பொன்னுத்துரை அவர்களும். சமூக முன்னேற்றம் நாடிப்போராடிய ஒருவர் என்ற வகையில் இவரும் ஒரு போராளி என்றே கருதப்பட்டு மதிப்பளிக்கப்படுகிறார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்" என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்துமறைந்த பெருந்தகையே விசுவலிங்கம் பொன்னுத்துரை அவர்கள். ஒருவன் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பதை விட அவன் எப்படி வாழ்ந்தான் என்பதைக்கொண்டே அவன் பெருமை சமூகத்தால் மதிக் கப்படுகிறது. அவ்வாறு மதிக்கப்பட்டவர்களே காலாகாலமாகப் போற்றிப்புகழப்படுகிறார்கள்.

இன்று எமது போற்றுதலுக்கு இடமாக இருக்கும் பொன்னுத்துரை அவர்களும் "வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே" என்ற பாரதியின் அடிகளுக்கு ஏற்ப வாழ்ந்தவர் என்பது அவருடன் பழகிய அனைவருக்கும் தெரியும்.

அன்ன சத்திரம் ஆயிரம் நாட்டுவதிலும், ஆலயம் பதினாயிரம் அமைப்பதிலும் வரும் புண்ணியத்தை விட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தலே சிறந்த தெய்வப்பணி என்பதை மனதார நம்பிய அமரர் அதற்கேற்பவே தமது ஒவ்வொரு செயற்பாடுகளையும் முன்னெடுத்துச் சென்றார். விடுதலை வேட்கையோடு செயற்பட்டவேளையிலும்சரி அதை விட்டு ஒதுங்கி இருந்தபோதும்சரி அடிமட்ட மக்களுக்கு ஆதரவுக்கரம் நீட்ட அவர் பின்நின்றதில்லை. தானுண்டு தன்குடும்பமுண்டென்று ஒரு குறுகிய வட்டத்துள் நின்று என்றும் சிந்திக்காத பெருந்தகையே குமரன், பொன்னுக்கிளி, பொன்னண்ணா என்று சேர்ந்தோரால் அழைக்கப்பட்ட பொன்னுத்துரை அவர்கள்.

1954இல் பிறந்த குமரன் அவர்கள் "பொதுப்பணியென்றாற் கோவிற்பணி" என்றுகாணப்பட்ட கிராமியவழக்கத்தை உடைத்தெறிந்து சமூகப்பணியிற் தன்னை இணைக்க முன்வந்தமை அவரது முற்போக்குச் சிந்தனையின் வெளிப்பாடே என்று துணிந்து கூறலாம். தனது இளம்வயதிலேயே காந்தீய இயக்கத்தில் இணைந்து கீழ்மட்ட மக்களுக்காகப் பாடுபடத் தொடங்கியதிலிருந்து இறுதிவரை தான்சார்ந்த இனத்திற்காகவும், மொழிக்காகவும், தனது ஊருக்காகவும் அப்பழுக்கற்ற பணிகளை ஆற்றியவரே அமரர் மதிப்பிற்குரிய பொன்னுத்துரையவர்கள்.

அன்று இளைஞர் பேரவையில் ஒரு உறுப்பினராகச் சேர்ந்துகொண்ட பொன்னுத்துரை அவர்கள் பொதுவுடமைக் கருத்துகளால் கவரப்பட்டுப் "புளொட்" இயக்கத்திற் தன்னை இணைத்துக் கொண்டார். அவரது விடுதலை உணர்வும், விசுவாசமான உழைப்பும் அவரைத் தமிழீழ மக்கள் கழகத்தின் மத்தியகுழு உறுப்பினராக உயர்த்தியதோடு காலப்போக்கில் தமிழீழ மக்கள் கழகத்தின் அரசியற்துறைப் பொறுப்பாளராகவும் மாற்றியது. நேர்மையும் கொள்கைப்பிடிப்பும் கொண்ட குமரன் அவர்கள் தான்சார்ந்த அமைப்பின் தலைமையுடன் ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாகச் சந்ததியார் அணியிற் தன்னை இணைத்துக்கொண்டார். எந்த அணியில் இருந்தாலும் அந்த அணியை மக்கள் பணிநோக்கி நகர்த்த வேண்டுமென்னும் உயரிய நோக்கோடு செயற்பட்ட அவர் செயற்பாடுகள் மாற்றுக் கொள்கை கொண்டவர்களால் குரோதக் கண்கொண்டு நோக்ககப்பட்டது வேதனைக்குரிய விடயமே.

அந்தக் கருத்து முரண்பாடு காரணமாக அவர் 1987இல் அவரது திருமணப் பதிவிற்கு முதல் நாளன்றே மாற்றமைப்பினராற் கடத்தப்பட்டார். பிறருக்குத் தீங்கு நினைக்காத பெருந்தகையான அவர் பலரின் தலையீட்டால் ஒருமாத காலத்தின்பின் விடுவிக்கப்பட்டார் என்பது அன்று நம்பமுடியாத ஒரு செய்தியாகவே பேசப்பட்டது.

எந்தச் சூழலிலும் தன்னை

13ம் பக்கம் பார்க்க...

வீடு வாங்குபவர்களின் கவனத்திற்கு !

உங்கள் வீட்டை பரிசோதிப்பவர்கள் - **Home Inspectors Ontario** வில் பதிவு செய்யபட்டவர்களா என அறிய **www.oahi.com**

தராதரம் பெற்ற பரிசோதகர்களின் - **Certified Home Inspectors** விபரங்களை தெரிந்து கொள்ள **www.ashi.org**

# உயிர் பிழைக்குமா இந்த "ஊனக் குழந்தை"?

நடைபெறவுள்ள வடமாகாணசபைத் தேர்தலானது வட மாகாண மக்களுக்கோ ஈழத் தமிழர்களுக்கோ மட்டுமன்றி இலங்கை வாழ் அனைத்து சிறுபான்மை மக்களுக்கும் மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்க்கமானதொரு தருணமாக அமைகிறது.

சிறுபான்மை மக்களுக்கு 13ம் திருத்த சட்டத்தின் மூலம் இலங்கை அரச யாப்பில் உத்தரவாதம் செய்யப்பட்ட மிகச் சொற்ப அளவிலான அரசியல் அதிகாரங்களைக்கூட முற்று முழுதாக இல்லாதொழிப்பதற்கான வாய்ப்பைத் தேடும் இன்னொரு கபடத்தனமான எத்தனமாக இந்த தருணத்தை பயன்படுத்த முயற்சிக்கிறது பேரினவாதம்.

இலங்கை அரச யாப்பின் பிரகாரம் சிறுபான்மை யினருக்கென உத்தரவாதம் செய்யப்பட்ட அரசியல் உரிமைகளையும் அதிகாரங்களையும் நீக்கிவிடுவதற்கான மறைமுகமான பல்வேறு வழிமுறைகள் அதனுள்ளேயே இருப்பினும் தெளிவானதும் நேரடியானதுமான வழிமுறைகள் இரண்டு காணப்படுகின்றன.

அவற்றிலொன்று சரத்து 154G (2) மற்றையது சரத்து 82 (5). முதலாவது வழிமுறையானது மக்களால் தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாகாண சபைகளினது ஒத்துழைப்புடன் மேற்கொள்ளபடக்கூடியது. இரண்டாவது வழிமுறை பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் மேற்கொள்ளபடக்கூடியது. ஏனைய வழிமுறைகளில் முக்கியமானதொன்று சர்வசன வாக்கெடுப்பு மூலமானது.

*13ம் திருத்த சட்டமூலம் கொண்டுவரப்பட்டு*

*ஒரு ஞானக் குழந்தையின் வரவுக்காக ஏங்கித் தவித்த ஈழத் தமிழர்களுக்கு வரலாற்றுத் தாய் ஈன்றளித்த ஒரேயொரு "ஊனக் குழந்தை" 13வது திருத்த சட்டம். அதன் பேறுகாலத் துயருக்கான வாழும் சாட்சிகள் நாம்.*

இன்று வரையான 26 வருட காலப் பகுதியில் இத்திருத்தத்தினால் உத்தரவாதம் செய்யப்பட்ட அற்ப சொற்ப அதிகாரங்களைக்கூட மீள அபகரித்து விடுவதற்கான பல்வேறு முயற்சிகளிலும் பேரினவாதமானது தொடர்ந்து வெற்றி கண்டு வந்திருக்கிறது. உளசுத்தியுடனும் அறிவுபூர்வமாகவும் அரசியல் பிரச்சினைகளை அணுகத்தக்க சக்திகளது குரல்வளைகள் நெரிக்கப்பட்டிருந்த யுத்த சூழ்நிலைகளை அது சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டது. இறுதியாக, நடைபெறவுள்ள வட மாகாண சபைத் தேர்தலை ஜனநாயக வழிமுறைகளில் தனது இலக்கை அடைவதற்கான முக்கிய தருணமாக பேரினவாதமானது கைக்கொள்ள முனைகிறது.

பாராளுமன்ற சட்டங்கள் மூலமாகவும், அதிகார சபைகள் போன்ற அரச நிறுவனங்களை நிறுவி அவற்றிற்கு மாகாண அதிகாரங்களைத் தாரை வார்ப்பதனூடாகவும், மத்திய அரசுக்கென ஒதுக்கப்பட்ட விடயங்களில் மாகாண அதிகாரங்களை மேவுகின்ற விதமாக மத்திய அரசின் அதிகாரங்களை விரிவாக்குவதனூடாகவும், குறிப்பாக மாகாண அதிகாரங்களிலேயே மூல அதிகாரமான காணி அதிகாரங்களை குறிவைத்து செயற்படுவது என்பது ஒரு புறம் நிகழ்ந்துவர, வட கிழக்கு மாகாணங்களின் குடிப்பரம்பலில் தொடர்ச்சியான திட்டமிட்ட மாற்றங்களை ஏற்படுத்துவதனூடாக சிறுபான்மை மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தில் மாற்றங்களை ஏற்படுத்ததல் என்பது இன்னொரு புறம் நிகழ்ந்துவருகிறது. இவ்வாறு மாகாண அதிகாரங்களைக் களைவதற்கான பல்வேறு வழிமுறைகளையும் பயன்படுத்திக்கொண்டு வருகிறது இந்தப் பேரினவாதம்.

மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தபட்டு மிக குறுகிய காலத்தினுள் துரித மாகாவலி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் செயற்படுத்தபட்ட வெலிஓயா திட்டம் (மகாவலி L வலயம்) முதலாக மிக அண்மைக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட சம்பூர் அனல்மின்வலுத் திட்டம் மற்றும் திருகோணமலை நகரின் எல்லையான மூன்றாம் கட்டை பகுதியிலிருந்து வடக்கே திரியாய் வரையான நீண்ட கடலோர நிலங்களை சுற்றுலா அபிவிருத்தி வலையமாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை பிரகடனம் செய்தமை வரையான இந்த அதிகார சபைகள் எனப்படும் சதிகார சபைகளினால் அரங்கேற்றபட்ட எண்ணற்ற திட்டங்களை அடுக்கிக்கொணடே போகலாம். இவை மகாண சபைகளின் அதிகாரமான காணி அதிகாரத்தின் மீதான ஆக்கிரமிப்பு முயற்சிகளுக்கான மிகச் சில உதாரணங்களாகும்

பாராளுமன்றத்தையும் நிறைவேற்று அதிகாரத் தையும் பயன்படுத்தி பேரினவாதம் மேற்கொண்ட எண்ணற்ற தொடர்ச்சியான முயற்சிகள் ஒருபுறமிருக்க, இலங்கை இந்திய ஒப்பந்தத்தினதும் 13ம் திருத்த சட்டத்தினதும் அச்சாணியாக அமைந்திருந்து வட-கிழக்கு மாகாணங்களில் வாழும் சிறுபான்மை இனங்களுக்கான அதிகாரத்தின் அடிப்படையான அம்சமாக அமையப்பெற்ற மகாண இணைப்பு என்ற விடையத்தை நீதித்துறையின் துணையுடன் இல்லாதொழித்தது பேரினவாதம்.

"திவி நெகும" சட்டமூலம் விடயத்தில் நீதித் துறையின் ஒரு பகுதி பேரினவாதத்தின் அப்பட்டமான அரச யாப்பு மீறலை அனுமதிக்க மறுத்த ஒரே காரணத்துக்காக உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியையே தூக்கி எறிந்தது இந்தப் பேரினவாதம்.

அரசாங்கமென்பது பாராளுமன்றம், நிறைவேற்றுத் துறை, நீதித்துறை என்ற மூன்று வெவ்வேறு முகங்களை கொண்டிருந்தாலும், பேரினவாதம் என்பது இலங்கையில் அனைத்தும் இணைந்த ஒரே முகமாகும். அது அதன் இலக்கில் தெளிவாகவுள்ளது தனது இலக்கை எட்டுவதற்காக எந்த வழிமுறையையும் கைக்கொள்ள அது தயாராகவுள்ளது. அதன் நகர்வுகளை கேள்விக்குட்படுத்தாத விதமாக இலங்கையின் அரசியல், சமூக சூழலைகளை அது பதப்படுத்திப் பேணிவருகிறது. சர்வதேச மற்றும் பிராந்திய அரசியல் சூழ்நிலைமைகளை கையாள்வதில் தேர்ச்சியடைந்துள்ளது. இலங்கையின் ஆட்சி மாற்றங்கள் பேரினவாதக்தின் நிகழ்ச்சி நிரலில் மாற்றங்களை ஏற்படுத்தாதபடி அது நிறுவனமயமாகியுள்ளது. அதன் முகத்திரையை விலக்கி உண்மையை மக்களுக்கு உணர்த்தவல்ல அனைத்து சக்திகளையும் அது குறுந்தேசியவாதத்தின் துணையுடன் அழித்தொழித்துள்ளது.

"திவி நெகும" சட்டமூலம் மற்றும் தலைமை நீதியரசர் பணிநீக்கம் ஆகிய விடயங்களின் அடிப்படை யாயமைந்தது வடமாகாண சபையேயாகும். அந்த மாகணசபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அவையின் ஒப்புதலின்றி மாகாண அதிகாரங்களில் கணிசமான அதிகாரங்களைப்பறித்தெடுத்து உருவாக்கபட்ட "திவி நெகும" சட்ட முலத்தை எதிர்த்தது உச்ச நீதிமன்றம். இங்கு இலங்கை அரச யாப்பின் 154 G (2) இன் பிரயோகம் கேள்விக்கு உள்ளானது. ஏனைய அனைத்து (8) மாகாணசபைகளின் ஒப்புதல் இருந்த போதிலும் வடமாகாண சபையில் மக்களால் தேர்ந்தெடுக்கபட்ட அவை ஒன்று இல்லாத காரணத்தால் அவ்வாறானதொரு அவையின் ஒப்புதல் இன்மையால் சட்டமுலம் வலுவாக்கபடுவதை உச்ச நீதிமன்றம் தடுத்தது. எனினும் குறுக்கு வழிகளில் வெற்றியை தேடிக்கொண்டது பேரினவாதம்.

விளைவுகளிலிருந்தே செயல் அளவிடப்படுதல் வேண்டும். இன்னும் சில வாரங்களில் நடைபெறவுள்ள வடமாகண சபைத் தேர்தலில் பேரனவாதத்திற்கு துணை நின்று, மாகாண சபைகளுக்கு வழங்கபட்டுள்ள அற்ப சொற்ப அதிகாரங்களையும் பறித்தெடுக்க கங்கணம் கட்டி நிற்கிற பேரினவாதத்திற்கு துணை போகக்கூடிய அவை ஒன்று வட மாகணத்தில் அமையுமானால் அதன் விளைவு என்ன?

நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலினுடைய விளைவு இலங்கையின் ஏனைய அனைத்து மாகாண சபைத் தேர்தல் விளைவுகளிலிருந்தும் முற்றிலும் மாறுபட்ட விளைவைத் தரவல்லது. 13ம் திருத்த சட்டத்தினால் சிறுபான்மையினருக்கு உத்தரவாதம் செய்யப்பட்டு இன்று எஞ்சியிருக்கிற சொற்ப அதிகாரங்களையும் பேரினவாதம் பறித்தெடுப்பதற்கு துணைபோகக்கூடிய மாகாண அரசு ஒன்று உருவாகுமானால் அது வடமாகாண மக்களுக்கும் சபைக்கும் மடடுமல்ல இலங்கையில் பரந்து வாழுகின்ற அனைத்து சிறுபான்மை மக்களது உரிமைகளுக்கும் ஆப்பு வைக்கின்ற விளைவைத் தரும்.

ஒரு ஞானக் குழந்தையின் வரவுக்காக ஏங்கித் தவித்த ஈழத் தமிழர்களுக்கு வரலாற்றுத் தாய் ஈன்றளித்த ஒரேயொரு "ஊனக்" குழந்தை 13வது திருத்த சட்டம். அதன் பேறுகாலத் துயருக்கான வாழும் சாட்சிகள் நாம். வரலாற்றுத் திருடர்களின் துணையுடன் பேரினவாதம் அக்குழந்தையின் ஊனத்தை பேணுவதிலும் அதன் இயல்பான வளர்ச்சியைத் தடுப்பதிலும் முற்றுமுழுதான வெற்றியை ஈட்டியிருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் எம்முன் உள்ள பணி குறைந்த பட்சம் குற்றுயிராகவுள்ள இக்குழந்தையையாவது மீட்டு வளர்த்தெடுப்பதுவாகும்.

இன்று எமது சமகால வரலாற்றின் இன்னுமொரு அதிமுக்கியத்துவம் வாய்ந்த தருணத்தில் ஈழத் தமிழர்கள் மீதும், இலங்கையில் அனைத்து சிறுபான்மை மக்களின் மீதும், இலங்கையின் ஒடுக்கப்பட்ட சிறுபான்மை மக்கள் அனைவரினது உரிமைகளுக்காகவும் உயிர் நீத்த அனைத்து மனிதர்கள்மீதுமான தனது ஆழ்ந்த கரிசனையை பூபாளம் இந்த இதழில் பதிவு செய்து கொள்கிறது என்பதுடன் உலகளாவி வாழும் ஈழத்தமிழர் சமூகத்தின் அறிவார்ந்த சிந்தனைப் பாகம் ஒன்றிணைந்து எதிரகாலம் நோக்கி ஆக்க பூர்வமாக செயற்பட முன்வர வேண்டுமெனவும் கோரி நிற்கிறது.

நேசன்


**உங்கள் விருந்தினர் 20 பேரா? 2000 பேரா? கவலை வேண்டாம்!**

iCatering
IT'S THE REAL FUSION

பல்கலாசாரச் சமையற்கலையில் பல்லாண்டு அனுபவமுள்ளவரால்
உங்கள் ஆரோக்கியத்தை முதன்மையாகக்கொண்டு வீட்டில்
தயாரிக்கப்பட்ட பல்சுவை உணவு உங்கள் வீடு தேடி வரும்!

1079 MIDLAND AVE, SCARBOROUGH

(416) 836 7760 (416) 615 1079

# வெலிவேரியா உணர்த்தும் செய்தி



வெலிவேரிய சம்பவம் தொடரும் சம்பவங்களுக்கான சமிக்ஞை ஆகும். வடக்குக் கிழக்கு தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் இந்த அரசாங்கம் துரோகம் செய்யக்கூடியது. இந்தத் துரோகங்களைப் பாதுகாப்பதற்கு எந்த எல்லை வரையும் தனது அதிகாரக் கரங்களை நீட்டத் தயாராக உள்ளது. எத்தனை உயிர்களை பலியெடுக்கவும் பின் நிற்காது.

இலங்கை அரசிடம் நீதி கேட்டு போராட்டம் தொடங்கியவுடன் உயிர்கள் காவு கொள்ளப்படும் என்பது வரலாறு. வடக்கு - கிழக்கு வாழ் மக்கள் மேற்கொண்ட போராட்டம் எத்தனை உயிர்களைப் பலி கொண்டது, அகதிகளாக்கியது என்றும் 'போரும் வாழ்வும்' எவ்வாறு அவர்கள் மீது திணிக்கப்பட்டது. என்பதெல்லாம் நமக்கு தெரிந்தவை.

ஆனால் அடிப்படை உரிமைகளுக்காக போராடும் சாதாரண மக்களின் உயிர்களை பலியெடுக்கும் அரச பயங்கரவாதம் எங்கும் வியாபித்து நிறுவனப்பலம் பெற்றுள்ளமையை அவ்வவ்போது பல சம்பவங்கள் உணர்த்தி வருகின்றன.

அன்று ஓய்வூதிய ஆர்ப்பாட்டத்தில் ரொசான் சானகவின் உயிர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கட்டுநாயக்க வர்த்தக வலயத்தில் பிரிந்தது. அதேபோல இன்று சுத்தமான நீர் வேண்டும் என்று நீதி கேட்ட ஆர்ப்பாட்டத்தில் 16வயது நிரம்பிய மாணவனான அபிலதினேஷ் ஜயவர்த்தனவின் உயிர் கம்பஹா - வெலிவேரிய பகுதியில் பலியாகியுள்ளது. தொடர்ந்து அப்பகுதியில் தாக்குதலுக் குட்பட்ட இருவரின் உயிரையும் பின்னர் எடுத்துள்ளது. ஆக மூவரின் உயிர் பறிபோயுள்ளது. இந்த உயிர்களை பறிகொண்ட போராட்டம் மக்களின் சுத்தமான நீர் வேண்டும் என்பதற்கான அடிப்படை உரிமைப் போராட்டமாகும்.

வெலிவேரியா சம்பவம் தென்னிலங்கை வாழ் சிங்கள மக்களை நடுங்க வைத்துள்ளது. எங்களுக்கே இப்படியென்றால் 'வடக்க கிழக்கில் என்ன நடந்திருக்கும்?' என்பதன் உண்மை நிலையை ஓரளவு உணர்ந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் உருவாகியுள்ளது.

சுத்தமான குடிநீர் வேண்டுமென கொழும்பு - கண்டி வீதியில் மக்கள் தொடர்ந்து சிலநாட்களாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். கம்பஹா மாவட்டத்தில் உள்ள ரதுபஸ்வல, சிவ்ரதமுல்ல, ஊறுவல, நெதுன்கமுவ, வெலிவேரிய, இம்புல்கொட, கதுருவத்த, மல்வது ஹரிபிரிய, மால்காதென போன்ற பத்துக்கும் மேற்பட்ட கிராம மக்களினால் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டு வந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கிராமமக்கள் மட்டுமல்ல விகாராதிபதிகளும் ஒன்று திரண்டனர். இதைவிட பிக்கு ஒருவர் உண்ணாவிரதப் போராட்டத்திலும் குதித்திருந்தார். இவ்வாறு மக்கள் போராட்டத்தில் குதிப்பதற்கு காரணம் என்ன? தமக்கு குடிநீர் வேண்டும் எனும் கோரிக்கையை முன்வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏன் ஏற்பட்டது? பயன்பாட்டில் இருந்த குடிநீருக்கு என்ன நடந்தது? இது போன்ற பல்வேறு கேள்விகளுக்கு பதில் தேட வேண்டியுள்ளது.

1988ஆம் ஆண்டு இறப்பர் தொழிற்சாலையொன்று ஆரம்பிக்கும் பணி நடைபெற்றது. அதற்காக ரதுபஸ்வல பிரதேசத்திலுள்ள ஒரு இடம் தெரிவு செய்யப்பட்டது. இந்த றப்பர் தொழிற்சாலைக்கென நீரைச் சுத்திகரித்து வெளியேற்றும் இயந்திரம் பொருத்தப்பட்டது. இங்கு ஒரு இயந்திரத்திற்கே ஆரம்பத்தில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி சிந்திக்கும் நிலையில் சம்பந்தப்பட்டவர்கள் இருக்கவில்லை.

சுத்திகரித் வெளியேறும் நீர் 15 ஏக்கருக்கு பரவிச்செல்லும். அந்தளவிற்கு பாரிய பரப்பு இங்கு தேவை. வெளியேற்றப்படும் நீர் கழிவு நீராகும். அதுவும் உயிராபத்துமிக்க இரசாயனம் கலந்த கழிவுநீர். ஆனால் இன்று அத்தகைய நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் ஐந்து அங்கு பொருத்தப்பட்டுள்ளன. இதனால் பாரதூரமாக உள்ளன.

இவ்வாறு பாயும் கழிவுநீர் நிலத்திற்குள் சென்று கிணற்று நீருடன் கலக்கிறது. சுத்தமான குடிநீர் பெற முடியாத சூழல் உருவாக்கப்படுகிறது.

இதனால் ஏற்படக்கூடிய அபாயங்களை உணர்ந்த மக்கள் இது தொடர்பில் எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்தனர். இதன் உச்சமாக சுத்தமான குடிநீர் வேண்டும் என்பதற்கான போராட்டத்தில் மக்கள் தன்னியல்பாக குதித்தனர்.

குறித்த பிரதேசத்தில் மக்கள் பாவனைக்காக சுமார் 300 கிணறுகள் வரை இருக்கின்றன. இதில் சுமார் 60 கிணறுகள் இறப்பர் தொழிற்சாலையைச் சுற்றியுள்ளன. அவற்றில் எட்டுக் கிணறுகள் முழுமையாகப் பயன்படுத்த முடியாதளவிற்கு நச்சுப் பொருட்கள் கலந்துள்ளன. இதனால் பயன்பாடின்றி கிணறுகள் மூடப்பட்டு விட்டன.

இதுவரை காலமும் இந்தத் தொழிற்சாலை பற்றிய தகவல்கள் இரகசியமாகவே இருந்துள்ளன. வெலிவேரியாவில் நடந்த போர்க்களக் காட்சிகள் செய்திகள்தான் இந்தத் தொழிற்சாலை பற்றிய தகவல்களை வெளியுலகுக்கு கொண்டு வந்துள்ளது.

உலக சுகாதார நிறுவன அறிக்கையின்படி நீரின் பீ.எச் (ரீ) பெறுமானம் 6-7 வரை இருக்க வேண்டும். ஆனால் தற்போது இந்த கிராமங்களில் உள்ள கிணறுகளில் நீரின்ரீ பெறுமானம் 3-4 ஆக இருக்கிறது. அதாவது இந்த நீர் அமிலத் தன்மையை அடைந்துள்ளது. இந்த நச்சு நீரையே பல கிராம மக்கள் பயனபடுத்தி வந்துள்ளனர்.

இதனால் நீரிழிவு புற்றுநோய், அங்கவீனக் குறைபாடுகள் என பரம்பரையைப் பாதிக்கும் நோய்களால் பலர் பாதிக்கப்பட்டுள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இறப்பர் தொழிற்சாலை எனக் கூறப்படும் இங்கு கையுறைகளே பிரதானமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. வின்குரோஸ் என்ற பெயரைக் கொண்ட இறப்பர் கையுறை தயாரிக்கும் இத்தொழிற்சாலையானது ஹேலிஸ் நிறுவனத்துக்கு சொந்தமானது எனத் தெரியவருகிறது. இந்நிறுவனத்தின் அதிக பங்கினை இலங்கையின் கோடீஸ்வரர் எனக் கூறப்படும் தம்மிக்க பெரேரா பெற்றுள்ளதனால் இவரே இந்த தொழிற்சாலைக்கு உரிமையாளராக இருக்கிறார்.

இவர் குலப்பு ஆராய்ச்சிகே தொன் தம்மிக பெரேரா என்ற பெயரைக் கொண்டவர். இவரே சம்பத் வங்கியின் தலைவரும் ஆவார். மேலும் கெசினோ வியாபாரியும், 40 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களின் பங்குதாரரும் ஆவார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இத்தொழிற்சாலை அரசுக்கு சொந்தமானது என ஜே.வி.பி யின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். அரச சேவை ஓய்வூதியத்திட்ட நிதி அரச வங்கியின் நிதியைக் கொண்டு இந்நிறுவனம் இயங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் பாதிப்புக்கு உள்ளாகும் மக்கள் இந்தத் தொழிற்சாலை மூடப்பட வேண்டும் தமக்கு சுத்தமான குடிநீர் வேண்டும். முதலான பிரதான கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் குதித்தனர். பத்து நாட்களுக்கும் மேலாக கொழும்பு - கண்டி வீதி மறிக்கப்பட்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலைமையைச் சமாளிக்க இப்பகுதியில் இராணுவம் குவிக்கப்பட்டது.

தற்போது நடந்து முடிந்த இறுதி யுத்தத்தின் (முள்ளிவாய்க்கால்) 58வது இலங்கை இராணுவப் பிரிவில் கடமை புரிந்த பிரிகேடியர் தேசப் பிரிய குணவர்த்தன மற்றும் ஷியாமல டி.சில்வா ஆகியோர் தலைமையில் படையினர் கொண்டு வரப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த இராணுவப் படையணியே போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டது. மிகவும் மிலேச்சத்தனமான தாக்குதல்களால் மக்கள் படுகாயமுற்றனர். 50க்கும் மேற்பட்டோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர். அப்பாவியான மாணவன் ஒருவன் அந்த இடத்திலே உயிர்விட்டான். பின்னர் சிகிச்சை பலனின்றி இருவர் உயிர்விட்டனா. இன்னும் சிலர் நிலை கவலைக்கிடமாகவே உள்ளது.

தற்போது இந்த விவகாரம் தேசியப் பிரச்சினையாக மாறியுள்ளது. சுத்தமான குடிநீர் கேட்ட மக்களுக்கெதிராக இராணுவத் தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது? இவர்களுக்கு யார் உத்தரவு கொடுத்தது? யாரைப் பாதுகாக்க வெலிவேரியாவில் மக்கள் தாக்கப்பட்டனர்? கொலை செய்யப்பட்டனர்? இதனால் யார் நன்மை பெறப்போகிறார்கள்? போன்ற கேள்விகள் இயல்பாக எழுகின்றன.

இதுவரை இலங்கை இராணுவம் தமிழ் மக்களுக்கு எதிராக மட்டுமே துப்பாக்கியை திருப்பியுள்ளனர்? என்ற நம்பிக்கையை வெலிவேரியா சம்பவம் மாற்றியுள்ளது. சிங்கள மக்களுக்கு எதிராகவும் அந்தத் துப்பாக்கிகள் அதிகாரம் திரும்பும் என்பதை நிரூபித்துள்ளது.

மூவரின் உயிர் பலியான பின்பு சுத்தமான நீரை நீர்த்தாங்கி மூலம் வழங்க அரச தரப்பினர் முயற்சிகளை தற்காலிகமாக மேற்கொண்டுள்ளனர். தொழிற்சாலையும் மூடப்பட்டுள்ளது. இராணுவம் இப்பிரதேசத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. என்றாலும் பிரச்சினைக்குரிய இந்தத் தொழிற்சாலை நிரந்தரமாக மூடப்படுவதற்கான கொள்கைத் தீர்மானம் எதுவும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இலங்கை அரசின் தன்மையில் சனநாயகமும் சர்வாதிகாரமும் ஒன்றோடொன்று கலப்புற்றுச் சங்கமமாகிய செயன்முறையில் தான் மையம் கொண்டுள்ளது. தற்போது வரை இலங்கை அரசியலில் சர்வாதிகாரம் ஓர் முக்கிய அம்சமாகவும் இயல்பாகவும் உள்ளது. இதற்கேற்பவே பாராளுமன்ற சனநாயகமும் அமைந்துள்ளது.

வடக்கு - கிழக்கு மலையக மக்கள் மட்டுமல்ல தென்பகுதிவாழ் சிங்கள மக்களையும் நசுக்கவும் ஒடுக்கவும் தயங்காத 'அதிகார வர்க்கம்' இலங்கையில் நிலைபெற்று விட்டது. இதற்கேற்பவே இலங்கை அரசின் தன்மை மீளுருவாக்கம் பெற்றுள்ளது.

வெலிவேரிய சம்பவம் தொடரும் சம்பவங்களுக்கான சமிக்ஞை ஆகும். வடக்குக் கிழக்கு தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் இந்த அரசாங்கம் துரோகம் செய்யக்கூடியது. இந்தத் துரோகங்களைப் பாதுகாப்பதற்கு எந்த எல்லை வரையும் தனது அதிகாரக் கரங்களை நீட்டத் தயாராக உள்ளது. எத்தனை உயிர்களை பலியெடுக்கவும் பின் நிற்காது.

-சூர்

# CELL TEL MOBILITY

For all your cellphone and accessory needs...

We sell new & used cellphones, Pagers and accessories for:

ROGERS WIRELESS, FIDO, TELUS MOBILITY, BELL MOBILITY
MOBILICITY, PUBLIC MOBILE, WIND MOBILE, CHAT-R

## 16th Anniversary Special !!!

**Anniversary Sale**



Iphone 5 Data cable

From **49¢**

Reg. $19.99

***Offer Valid between August 1st 2013 To August 31st 2013.***
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.

**Anniversary Sale**




iPhone 5 Cases

From **49¢**

Reg. $9.99

***Offer Valid between August 1st 2013 To August 31st 2013.***
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.

**Anniversary Sale**



iPhone Headset

From **49¢**

Reg. $19.99

***Offer Valid between August 1st 2013 To August 31st 2013.***
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.



- Car charger
- Leather case
- Head sets
- Home charger
- Clear case
- Bluetooth headset
- Bluetooth dongle
- Bluetooth Mirror
- Data cables
- Batteries
- Screen Protector
- Memory Card




**Call Toll free:- 1.877.312.5123** ***SHOP ONLINE*** @ www.celltelmobility.com

## CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER



NOKIA, MOTOROLA, SONY ERICSSON, SAMSUNG, LG
HTC,BLACKBERRY,iPHONE.

***Display,Antenna Replacement and all other Repairs (Software & Hardware).***



| | | | | |
|---|---|---|---|---|
| 2637 Eglinton Ave. East,<br>Eglinton Ave/Midland Rd<br>**416.266.6818** | 4-1415 Kennedy Rd<br>Kennedy Rd/ Ellesmere Rd<br>**416.315.3380** | 5A - 1162 Morningside Ave<br>Morningside Ave/ Sheppard Ave<br>**416.281.2355** | 5C - 2950 Birchmount Rd<br>Birchmount / Finch Ave<br>**416.495.7776** | 49 - 30 Karachi Dr<br>Markham Rd / 14 th Avenue<br>**905.201.4859** |

# மாதாந்த எரிவாயுச் செலவைக் குறைத்து பணத்தைச் சேமியுங்கள்

நீங்கள் வீட்டுச் சொந்தக்காரராக இருந்தால் மாதாந்தம் தவறாமல் கட்டணம் செலுத்த வேண்டிய விடயங்களில் முக்கியமானது எரிவாயு. பெரும்பாலும் சமையலுக்கு எரிவாயு பாவிப்போர்கள் குறைவாக இருந்தாலும், வீட்டைச் சூடாக்க மட்டுமன்றி, குளிப்பதற்கும், சமையலறைப் பாவனைக்கும், உடைகளைத் துவைக்கவும் பயன்படுத்தும் கொதிநீரைச் சூடாக்கவும் எரிவாயு பயன்படுத்தப்படுகிறது. குளிர்காலம் முழுவதும் வீட்டைச் சூடாக்க மட்டுமன்றி, கோடை காலத்தில் நீரைச் சூடாக்கவும் எரிவாயு தேவைப்படுகிறது.

உங்கள் எரிவாயுக் கட்டணத்தில் கணிசமான பகுதி நீரைச் சூடாக்குவதற்குப் பயன்படுகிறது. இந்தச் செலவை நீங்கள் குறைக்க விரும்புகிறீர்களா?

நிலக்கீழ் அறையில் பெரிய இடத்தைப் பிடித்துக் கொண்டு, நீர்கொதி கொள்கலன் ஒன்று 24 மணி நேரமும் நீரைக் கொதிக்க வைத்துக் கொண்டே இருக்கிறது. நீங்கள் கொதிநீரைப் பாவிக்கிறீர்களோ இல்லையோ, நீரை மாறாமல் ஒரே வெப்பநிலையில் வைத்திருக்க, தாங்கியில் உள்ள நீரின் கொதிநிலை குறையக் குறைய, எரிவாயு எரிந்து அதைக் கொதிக்க வைத்துக் கொண்டே இருக்க வேண்டும். இந்தத் தாங்கிகளிலிருந்து வீடு பூராவும் செல்லும் கொதிநீர்க் குழாய்கள் தகுந்த முறையில் வெப்பம் வீணாகாமல் மூடப்படா விட்டால், குழாய்கள் ஊடாக நீரின் வெப்பம் விரயமாகும்.


அத்துடன் யாராவது குளித்தால், மீண்டும் நீர் சூடாகும்வரை அடுத்துக் குளிப்பவர் காத்திருக்க வேண்டியும் ஏற்படலாம்.

பல வீடுகளில் இந்தத் தாங்கிகளை எரிவாயு நிறுவனங்கள் வாடகைக்கே விட்டிருக்கின்றன. இதனால், மாதாமாதம் இந்த தாங்கிகளுக்கு வாடகை மட்டுமன்றி, அவற்றைப் பராமரிப்பதற்காகவும் இந்த நிறுவனங்கள் பல நூற்றுக்கணக்கான டொலர்களை அறவிடுகின்றன. எம்மில் பலர் இந்த விடயங்களை எரிவாயு நிறுவனம் அனுப்பும் மாதாந்தக் கட்டணச்சீட்டில் கவனிக்கத் தவறுகின்றனர்.

எரிவாயுப் பாவனைக்கும் கொதிகலன் வாடகைக்கும் நீங்கள் அனாவசியமாக விரயமாக்கும் பணத்தைச் சேமிக்க வழி உண்டு.

பெரிய இடத்தைப் பிடித்து, 24 மணி நேரமும் நீரைக் கொதிக்க வைத்து சேமிக்கும் தாங்கிக்குப் பதிலாக, நீங்கள் பயன்படுத்தும் நேரத்தில் மட்டும் நீரைக் கொதிக்க வைக்கும் தாங்கியில்லாத நீர்கொதி கலன்கள் பாவனைக்கு வந்திருக்கின்றன. Tankless or On Demand water heaters எனப்படும் இந்த கொதிகலன்கள் பெரிய இடத்தைப் பிடிக்காமல், வெறுமனே சுவரிலேயே பொருத்தப்படக் கூடியன. நீங்கள் கொதிநீர் பாவிக்கும் நேரத்தில் மட்டும் இவை மிகவும் வேகமாக நீரைச் சூடாக்குகின்றன. இருபது லீட்டர் நீரை ஒரு நிமிடத்திற்கு ஐம்பது பாகை சதம அளவால் அதிகரிக்கக் கூடிய திறன் உள்ள தாங்கிகள் உள்ளன.

நீரைச் சூடாக்க இவை குறைந்தளவு எரிவாயுவையே பயன்படுத்துவதாலும், நீரைக் தொடர்ந்து கொதிநிலையில் வைக்க வேண்டிய தேவை இல்லாததாலும் எரிவாயுச் செலவு குறைகிறது.




சாதாரண தாங்கிக்கு சுமார் 12 சதுர அடி பரப்பளவு தேவைப்படுகிறது. இந்த தாங்கியில்லா கொதிகலன்கள் சுவரில் பொருத்தப்படுவதால் உங்கள் நிலக்கீழ் அறையில் பெரியளவு இடம் வீணாக்கப்படாமல் தவிர்க்கப்படுகிறது. அதையும் விட, இந்தத் தாங்கிகளை நிலக்கீழ் பகுதியில் தான் பொருத்த வேண்டும் என்றில்லை. விரும்பினால் இந்தக் கருவிகளை வீட்டின் எந்தப் பாகத்திலும், கூரைப் பகுதி உட்பட, பொருத்த முடியும்.

இந்தத் தாங்கியிலிருந்து எரிந்த பின் வரும் புகையை வெளியேற்ற, வீட்டில் உள்ள வழமையான புகை போக்கியைக் கூடப் பயன்படுத்த வேண்டியதில்லை. சுவரில் துவாரம் ஒன்றை ஏற்படுத்தி குழாய் மூலமாக கழிவு வாயுக்களை வெளியேற்றலாம்.

இந்த வகையான தாங்கிகளைப் பொருத்த ஆரம்பச் செலவு அதிகமாக இருந்தாலும், இவற்றுக்கான பராமரிப்புச் செலவு குறைவாகவும், இவை பயன்படுத்தும் எரிவாயு குறைவாக இருப்பதாலும் நீண்ட காலப் பாவனையின் போது நீங்கள் பணத்தைச் சேமிக்க முடியும். அதை விட, இந்த தாங்கிகளை நீங்கள் சொந்தமாகவே வாங்குவதால், இவற்றுக்கு நீங்கள் வாடகை எதுவும் செலுத்தவும் தேவையில்லை.

சாதாரண தாங்கிகளின் ஆயுட்காலம் பத்து வருடங்கள் மட்டுமே. ஆனால், தாங்கியில்லா நீர்கொதிகலன்கள் இருபது வருடத்திற்கு மேலாகப் பயன்படக் கூடியவை. அத்துடன் இவற்றின் உதிரிப்பாகங்கள் இலகுவாக மாற்றப்படக் கூடியன என்பதால் சுலபமாகத் திருத்தப்படக் கூடியதுடன், நீண்ட காலம் பயன்படுத்தப்படக் கூடியன.

இருந்தாலும், சில விடயங்கள் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. உங்கள் குடும்பத்தின் பாவனைக்கேற்ற கொள்ளளவு கொண்ட தாங்கிகளை நீங்கள் தெரிவு செய்ய வேண்டும். ஒரே நேரத்தில் எத்தனை பேர் பயன்படுத்தலாம் என்ற விடயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அந்த எண்ணிக்கைக்கு தகுந்த அளவிலான தாங்கிகளைத் தெரிய செய்ய வேண்டும். பணத்தை மிச்சம் பிடிக்க வேண்டும் என்று சிறிய தாங்கிகளைப் பொருத்தினால், பலர் ஒரே நேரத்தில் பயன்படுத்த முடியாமல், பாதிக் கொண்டே குளிப்போர், குளிர்நீரில் நடனடமாட வேண்டியும் ஏற்படலாம்.

2. வழமையாக நீர் கொதிக்க வைக்கும் பாத்திரங்களில் படியும் கல்சியம் போன்ற படிவுகள் இந்த கருவிகளிலும் படிவதால் வருடாந்தம் அவை துப்புரவாக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால், சூடாக்கும் கம்பிகளில் கல்சியம் படிந்து, இந்த தாங்கிகளின் திறன் குறைந்து நீரைக் கொதிக்க வைக்க அதிகளவு எரிவாயு பயன்படும் என்பது மட்டுமன்றி, அதன் ஆயுட்காலமும் குறையக் கூடும்.

3. உங்களுடைய எரிவாயு விநியோக நிறுவனத்தில் தாங்கிகளை வாடகைக்குப் பெறுகிறீர்கள் ஆயின், அவர்களைத் தொடர்பு கொண்டு, வாடகையை நிறுத்துவது, பழைய தாங்கியை அவர்களிடம் எப்படிச் சேர்ப்பது என்பதை அறிந்து கொள்ளுங்கள். இல்லாவிட்டால் அவர்கள் உங்களிடம் தொடார்ந்தும் வாடகையை அறவிட்டுக் கொண்டே இருப்பார்கள். சிலநேரங்களில் நீங்களே அவர்கள் சொல்லும் இடத்தில் பழைய தாங்கிகளை கொண்டுபோய்க் கொடுக்கலாம். அல்லது அவர்கள் உங்கள் பழைய தாங்கியை ஒரு சிறுதொகைப் பணம் அறவிட்டு எடுத்துச் செல்வார்கள்.

4. இந்தக் கருவியை நீங்கள் பொருத்த முடியாது. இதற்கு அனுமதிப் பத்திரம் பெற்ற தொழில்நுட்பவியலாளர்களே இவற்றைப் பொருத்தவும், பராமரிக்கவும் முடியும். இதற்கான சரியான அனுமதிப்பத்திரங்களும் அனுபவமும் பெற்ற தொழில்நுட்பவியலாளர்கள் பூபாளத்தில் விளம்பரம் செய்கிறார்கள். அவர்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம், முழுமையான விபரங்களை அறிந்து கொள்வதுடன், மிகவும் மலிவாக அவர்களின் சேவையைப் பெற முடியும்.

## Canadians for Peace

### சமாதானத்திற்கான கனடியர்கள்

### ஊடக அறிக்கை

இலங்கையில் தமிழ் பேசும் மக்களை பேரழிவுக்குள்ளாக்கிய யுத்தம் முடிவுற்று, நான்காண்டுகள் கடந்த நிலையிலும் அம்மக்களின் ஏக்கங்களும் பெருமூச்சுக்களும் தொடர்ந்து கேட்ட வண்ணமே உள்ளது. விரைவில் இவர்களது வாழ்வில் நிம்மதி ஏற்படக் கூடிய வாய்ப்புகளும் எட்டாக்கனியாகவே உள்ளது. இந்த அவல நிலைமைக்கான காரணங்கள் பல.

அவற்றின் முதன்மையானதும் முக்கியமானவைகளும் தற்போதைய அரசாங்கத்தின் இனவாதப் போக்கும் தமிழ்ப் பேசும் மக்களை சரியான திசையில் வழிநடத்த பொறுப்புள்ள தலைமை இல்லாமையே ஆகும்.

இனவாதத்தை இனவாதத்தால் ஒருபோதும் வெற்றி கொள்ளவே முடியாது. அது பகைமையை மேலும் வளர்க்குமே ஒழிய, புரிந்துணர்வை வளர்க்காது. சமாதானத்தை உருவாக்காது. சமாதானத்திற்கும் ஒற்றுமைக்கும் இனங்களின் மத்தியில் புரிந்துணர்வு அவசியம். இதற்கான முன்னெடுப்புகள் இலங்கையிலும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் மிக அரிதாகவே காணப்படுகிறது. இனப்பிரச்சனை, பயங்கரவாதம் என்ற காரணங்களைக்காட்டி இறுக்கமாக்கும் சட்டமூலங்களைக் கொண்டு சிறுபான்மை இனங்களுக்கு எதிராக மட்டுமல்லாமல்லாமல் சிங்கள பெரும்பான்மை மக்கள் மீதும் இலங்கை அரசு எதேச்சாதிகாரதைச் செலுத்துகிறது என்பதற்கு நல்ல உதாரணம் வெலிவேரியா.

துரதிர்ஷ்ட வசமாக புலம் பெயர் நாடுகளில் மேற்கொள்ளப்படும் அனேக அரசியல், கலாசார நிகழ்வுகள் இன ஐக்கியத்திற்கு ஊறு விளைவிக்கும் வகையிலேயே அமைந்துள்ளன. இவற்றின் தாக்கங்கள் எதிர்மறையாகவே இலங்கையில் பிரதிபலிக்கின்றது. குறிப்பாக "புனர்வாழ்வு" பெற்ற முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீண்டும் கைது செய்யப்படல் அல்லது தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தல், வடகிழக்கில் அரச படைகளின் தொடர்ச்சியான, அளவுக்கதிகமான பிரசன்னத்தை நியாயப்படுத்தல் போன்றவற்றிற்கு புலம் பெயர் தமிழர்களின் இவ்வாறான செயற்பாடுகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ உதவுகின்றன.

18ம் பக்கம் பார்க்க..

# 13வது திருத்த அரசியலும் வடமாகாணசபைத் தேர்தலும்

## தாயகத்திலிருந்து துரைமடன்

*சிறுபான்மை தேசிய இனங்களின் அரசியல் உரிமைகள் நியாயாபூர்வமான அரசியல் அபிலாசைகள் என்று வரும்போது சிங்கள அரசியல் சமூகத்தின் பெரும் பகுதிக்கும் சிங்கள பௌத்த கடும்போக்கு சக்திகளுக்கும் இடையே அடிப்படையில் பலத்த வேறுபாடுகள் எதுவும் இல்லை.*

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமையை நாம் எளிமையாக ஒற்றைப் பரிமாணத்திற்குள் வைத்து மதிப்பிட்டு விட முடியாது. இங்கு பல்வேறு சிக்கல்களும் முரண்களும் தன்னளவில் நாளுக்குநாள் மீளுருவாக்கம் செய்யப்படும் விரிந்த களமாக உள்ளது. பொதுவாக பல்லினப் பண்பாட்டின் சூழமைவின் தேசியத்துவம் எழுச்சி பெறாத காரணத்தினால் பன்மைத்துவப் புரிதல் எங்கும் மேவி விரிவாக்கம் பெற முடியாமல் உள்ளது.

இனத்துவச்சாயல் அனைத்தையும் உள்வாங்கியவாறு நிலைபேறாக்கம் அடைந்துவிட்டது. இதற்கு எதிராக அரசியலாளர்கள் அரசியல் கட்சிகள் புதிய அரசியல் கலாசார உணர்திறனின் வெளிப்பாடுகளாக உயர்வு பெறாமல் குறுகிய நிலையில் இயக்கம் கொள்கின்றன. இந்தப் பின்புலத்தில்தான் வடமாகாண சபைத் தேர்தலைச் சுற்றிவரும் அரசியல் ஓட்டங்களையும் கருத்தியல் பிரச்சினைகளையும் புரிந்துகொள்ள வேண்டும்.

அண்மையில் 37 பௌத்த அமைப்புக்கள் ஒன்றிணைந்து மாகாண சபைமுறைக்கு எதிரான தேசிய கூட்டமைப்பு என்ற இயக்கமொன்றை ஆரம்பித்திருந்தன. அரசியல் அமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்பதும், வடமாகாண சபைக்கு தேர்தலை நடத்துவது என்ற தீர்மானத்தை இடைநிறுத்த வேண்டும் என்பதும் இந்த இயக்கத்தின் பிரதான கோரிக்கைகள். இக்கோரிக்கைகளை உடனடியாக அரசாங்கத்தினால் நிறைவேற்ற முடியாவிட்டால், வடமாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக நிறைவேற்ற வேண்டிய ஐந்து நிபந்தனைகளை அரசாங்கத்திடம் இந்த இயக்கம் முன்வைத்திருக்கிறது. அவை பின்வருமாறு:

- மாகாண சபைகளுக்குரிய பொலிஸ் அதிகாரங்களை இரத்து செய்ய வேண்டும்.

- காணி அதிகாரங்களை இரத்து செய்ய வேண்டும்.

- மாகாணங்கள் இணைந்து தனித்தனியாக செயற்படுவதற்கு அனுமதிக்கும் ஏற்பாட்டை அகற்ற வேண்டும்.

- மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கம் செய்யப்பட்ட விவகாரங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் சட்டமூலம் எதையும் நிறைவேற்ற வேண்டுமானால், அதற்கு முன்னதாக சகல மாகாண சபைகளிலும் சம்மதத்தை பெற வேண்டும் என்றிருக்கும் ஏற்பாட்டை பெரும்பான்மையான மாகாண சபைகளின் சம்மதம் என்று மாற்றம் செய்ய வேண்டும்.

- மாகாண சபைகளுக்கு பணிப்புரைகளை மத்திய அரசாங்கம் வழங்குவதற்கு அனுமதிக்கக் கூடிய சட்ட ஏற்பாடு ஒன்றை அரசியலமைப்பில் புகுத்த வேண்டும்.

இவ்வாறு நிபந்தனைகளை மேற்குறித்த இயக்கம் முன்வைத்திருந்தது. இன்று பரவலாக்கம் செய்யப்பட வேண்டியது நிர்வாக அதிகாரங்களே தவிர, அரசியல் அதிகாரங்கள் அல்ல என்பது மாகாண சபை முறைக்கு எதிரான தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு என்றும் பிரகடனம் செய்யப்பட்டிருக்கின்றது.

பௌத்த அமைப்புக்களுடன் இணைந்து இந்த தேசிய கூட்டமைப்பை உருவாக்கிய தனிநபர்களில் பேராசிரியர்கள் நளின் டி சில்வா, குணதாச அமரசேகர, சட்டத்தரணி எஸ்.எல்.குணசேகர ஆகியோரும் அடங்குகின்றனர். இவர்கள் எல்லோருமே இதுகாலவரையில் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் இணக்கத் தீர்வொன்றை காண்பதற்கென கூறிக்கொண்டு, முன்வைக்கப்பட்டிருக்கக் கூடிய எந்தவொரு அதிகார பரவலாக்க யோசனைகளையும் கருணக்கடூரமாக எதிர்த்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது நாட்டில் மூள வைக்கப்பட்டிருக்கும் மாகாண சபைகளுக்கு எதிரான பிரச்சார இயக்கத்தில் தங்களுக்கும் ஒரு இடம் தேடிக்கொள்ளும் முகமாக, மாகாண சபை முறைக்கெதிரான தேசிய கூட்டமைப்பை உருவாக்குவதற்கு இந்தப் பிரமுகர்கள் முன்னின்று உதவியிருக்கிறார்கள். இங்கு நாம் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில், இந்த பௌத்த அமைப்புகளும் பிரமுகர்களும் மாகாண சபை முறையை மாத்திரம் எதிர்ப்பவர்கள் அல்லர். மாறாக இலங்கையில் வாழக்கூடிய சிறுபான்மை தேசிய இனங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகள் என்று கூறப்படக்கூடியவற்றில் குறைந்தபட்சமானவற்றில் கூட எந்தவொன்றையும் இவர்கள் ஏற்றுக்கொள்ள தயாரில்லாதவர்கள். இவர்களின் கடந்தகால அரசியல் செயற்பாடுகள் இதற்கு தெளிவான சான்றுகளாக விளங்குகின்றன.

இன்று மாகாண சபை முறைக்கும் அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்திற்கும் எதிரான பிரச்சாரங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. குறிப்பாக இலங்கை இந்திய ஒப்பந்ததிற்கு எதிரான கருத்துகள் உணர்வுகள் வெளிப்படுகின்றன. இவை யாவும் அடிப்படையில் சிறுபான்மை தேசிய இனங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளுக்கு விரோதமான நச்சுப் பிரச்சாரங்களே தவிர வேறொன்றும் இல்லை.

மாகாண சபை முறைக்கு எதிரான தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் முன்வைத்திருக்கும் ஐந்து நிபந்தனைகளைப் பொறுத்தவரை, அரசாங்கத்திற்குள் இருக்கக்கூடியவர்கள் வேறு தொனிகளில் தென்னிலங்கையில் பிரச்சாரப்படுத்தியிரக்கிறார்கள். எடுத்துக்காட்டாக சிங்கள கடும் போக்குக் கொள்கைகளை கொண்ட தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவர்களுடன் அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்களும் இதில் அடங்குவர். வடமாகாண சபைக்கான தேர்தல் குறித்து பேச்சுகள் எழுந்த ஆரம்பக் கட்டத்திலேயே இவர்கள் இந்த நிபந்தனைகளின் தொனியிலான கருத்துக்களை முன்வைக்கத் தொடங்கியிருந்தார்கள். இன்று மாகாணசபை முறைக்கு எதிரான தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்டிருக்கக்கூடிய நிலைப்பாட்டுக்கும் அரசாங்கத்திற்குள் இருக்கக்கூடிய கணிசமான பிரிவினரின் நிலைப்பாட்டிற்கும் இடையே எந்த வேறுபாடும் இருப்பதாக தெரியவில்லை.

சிறுபான்மை தேசிய இனங்களின் அரசியல் உரிமைகள் நியாயாபூர்வமான அரசியல் அபிலாசைகள் என்று வரும்போது சிங்கள அரசியல் சமூகத்தின் பெரும் பகுதிக்கும் சிங்கள பௌத்த கடும்போக்கு சக்திகளுக்கும் இடையே அடிப்படையில் பலத்த வேறுபாடுகள் எதுவும் இல்லை. தற்போது இந்தப் போக்குகளையும் அரசியல் ஓட்டங்களையும் சற்று பின்னுக்குத் தள்ளிவிட்டு வடக்கு, வடமேல், மத்திய மாகாணங்களுக்கு தேர்தல் வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது.

வடக்கு, வடமேல், மத்திய மாகாணங்களுக்கு வரும் செப்டெம்பர் மாதம் 21ம் திகதி தேர்தல் நடைபெறுமென தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். இந்த மாகாண சபைகளுக்கான நியமனப் பத்திரங்கள் கடந்த முதலாம் திகதி தாக்கல் செய்யப்பட்டு விட்டன. இந்த மூன்று மாகாண சபைகளுக்கும் மொத்தம் 147 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். ஆனால் மொத்தமாக 3785 பேர் தேர்தல் போட்டிக் களத்தில் உள்ளனர். இந்தத் தேர்தலில் வடக்கு மாகாண சபைத் தேர்தல்தான் தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தற்போது அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்ற கோசங்கள், வடமாகாண சபை தேர்தலுக்கு முன்னதாக மாகாண சபைகளுக்கு இருக்கின்ற காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற கூச்சல்கள் முதலானவை அடங்கிப் போயிருக்கின்றன. 13வது திருத்தத்திலோ அல்லது மாகாண சபைகள் சட்டத்திலோ எவ்வித மாற்றத்தையும் செய்யாமலேயே வடமாகாண சபைக்கான மற்றும் வடமேல் மத்திய மாகாணத்திற்கான தேர்தல் நடைபெறுகின்றது.

தற்போது நடைமுறையில் இருக்கக்கூடிய அதிகாரப் பரவலாக்கல் ஏற்பாட்டில் மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வீதிக்கு இறங்கியவை எதிரணிக் கட்சிகள் அல்ல. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கின்ற கட்சிகள்தான் வீதியில் இறங்கிப் போராடியுள்ளன. இப்போ திடீரென்று அமைதி ஏற்பட்டுள்ளது. இதற்கான காரணம் என்ன?

இங்கு இரண்டு நிகழ்வுகள் முக்கியம் பெறுகின்றன. ஒன்று, ஜனாதிபதியின் இளைய சகோதரரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ அண்மையில் புதுடில்லிக்கும் விஜயம் மேற்கொண்டார். அடுத்து இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டார். இந்த இருநிகழ்வுகளின் பின்புலத்தில்தான் அமைதி ஏற்பட்டிருக்கிறது. இதுவொன்றும் தற்செயலானதல்ல. விரிவாக்கம் பெறும் யதார்த்த நிலவரத்துடன் தற்போது இசைந்து போவதற்கு அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது போலத் தெரிகிறது. மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் எப்போது ஏறும் என்று தெரியவில்லை. ஆனால் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுநலவரசு நாடுகளின் உச்சி மகாநாடு முடிவடையும்வரை இந்த வேதாளம் ஏறுவதற்கான சாத்தியமில்லை என்று நம்பலாம்.

சமீபத்தில் ஆய்வறிவாளர் பேராசிரியர் சுமணசிறி லியனகே அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தை திருத்துதல், இன்றைய ஆட்சியின் நெறிகெட்ட தன்மையென விமர்சித்திருந்தார். அதாவது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உடன்படிக்கையொன்றின் அங்கமாக 1987ஆம் ஆண்டில் இலங்கை அரசியல் அமைப்புக்கு கொண்டுவரப்பட்ட 13வது திருத்தத்தை மாற்றியமைப்பதில் தங்களுக்கிருக்கும் உறுதிப்பாட்டை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சாவும் அவரது நெருங்கிய சகாக்களும் வெளிக்காட்டியிருக்கிறார்கள். இதன் தாக்கங்களும் எதிர்விளைவுகளும் எவ்வாறாக இருந்தாலும் இந்த முயற்சி தற்போதைய அரசாங்கத்தின் அப்பட்டமான நெறிகெட்ட தன்மையை நிரூபிக்கிறது என பேராசிரியர் விரிவாக குறிப்பிட்டிருக்கிறார்.

1987ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு பதவியிலிருந்த சகல அரசாங்கங்களினாலும் நடைமுறையில் ஏற்கெனவே தளர்வுறச் செய்யப்பட்ட 13வது திருத்தத்தை மேலும் பலவீனப்படுத்துவது பாரிய அரசியல் தவறாக அமையும். இந்த அரசியல் தவறு இதுவரை வரலாற்று ரீதியில் எதிர்கொண்ட எதிர்விளைவுகளை விட இன்னும் பன்மடங்காகவே இருக்கப்போகிறது. இதனை சில சிங்கள புத்திஜீவிகள் எச்சரிக்கைத்

துணிவுடன் கருத்துரைக்கின்றனர். 26 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே கைசாத்திடப்பட்ட உடன்படிக்கையின் அங்கமாகவே அரசியலமைப்புக்கான 13வது திருத்தம் கொண்டு வரப்பட்டது.

தமிழ் விடுதலை இயக்கங்கள் உட்பட தமிழ் அரசியல் கட்சிகள் உடனான பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் தொடர்ச்சியான ஆலோசனைக் கலப்புகளின் பின்னரே இந்த உடன்படிக்கைக்கு வந்தன. 13வது திருத்தமென்பது பல்வேறு தரப்புகளின் முரண்பாடான நலன்களையெல்லாம் கவனத்தில் எடுத்து நீண்ட ஆலோசனைக் கலப்புகள் - பேச்சு வார்த்தைகள் செயன்முறைகளின் விளைவாக கொண்டுவரப்பட்டது. இலங்கை சுயாதிபத்தியம் கொண்ட ஒரு நாடு ஆகவே இந்த அரசியல் அமைப்பை மாற்றுவதற்கான சகல உரிமைகளும் அதற்கு இருக்கிறது என்ற வாதம் மிகப் பலவீனமானதாகும். இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்புலத்தில் உள்ள அரசியல் சூழமைவு, அரசியல் நலன்கள், எதிர்பார்ப்புகள் முதலானவற்றை கவனத்தில் எடுக்கத் தவறியதன் விளைவாக முன்வைக்கப்படும் குறுகிய சந்தர்ப்பவாத நலன் சார்ந்த வாதம் இதுவாகும்.

இங்கு இன்னொரு உண்மையையும் நாம் குறித்துக்கொள்ள வேண்டும். அதாவது இரண்டு அல்லது அதற்கும் கூடுதலான நாடுகள் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளும் போது அந்த நாடுகள் சகலதுமே உலக ஒழுங்கில் தங்களது சுயாதிபத்திய அந்தஸ்தைப் பேணுமுகமாக அந்த உடன்படிக்கையை ஏற்றுச் செயற்படுவதற்கு சம அளவிற்கு கடப்பாடு கொண்டவை எனலாம். எனவே ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் அதிகாரத்திற்கு வருகிற அரசியல்வாதிகளின் விறுப்பு வெறுப்புகளுக்கு இசைவாக அத்தகைய உடன்படிக்கைகள் ஒருதலைப்பட்சமாக மீறக்கூடியவை அல்ல. இதனைக் கவனத்தில் கொள்வது மிகவும் அவசியமானது என்பதையும் பேராசிரியர் லியனகே தெளிவாக எடுத்துரைக்கின்றார். இச்சிந்தனையை சமகால நோக்கில் இன்னும் நாம் ஆழமாக பரிசீலிக்க வேண்டும்.

இலங்கை இந்த உடன்படிக்கையில் சம்பந்தப்பட்ட ஏனைய தரப்புகளான இந்தியா மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசிக்காமல் அதை இல்லாமல் செய்வதென்பது முற்று முழுதாக நெறிகெட்ட ஒரு காரியமாகும். அப்படிச் செய்தால் இலங்கை சர்வதேச அரங்கில் இன்னும் தனிமைப்பட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் 13வது திருத்தத்தை மேம்படுத்துவதற்கு ‘‘13+'' நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சாவும் அவரது அரசாங்கமும் இந்தியாவுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் நாட்டு மக்களுக்கும் அறிவித்து வந்தன என்பதையும் நாம் இங்கு குறித்துக்கொள்ள வேண்டும். இலங்கை அரசாங்கம் ‘‘13+'' என்பதை ஒருவகையில் பேசாப்பொருளாக கவர்ச்சிப்பொருளாக ஏமாற்றும் வெற்றுச் சொல்லாக மட்டுமே பயன்படுத்தி வந்தது. ‘‘13+'' என்றால் என்ன என்பது பற்றி யாருக்கும் விளக்கம் தெரியாது. 13ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்யும், அரசியல் நீக்கம் செய்யும் முயற்சிகள் பலவாறு நிகழ்ந்து வரும் சந்தர்ப்பத்தில் ‘‘13+'' குறித்து விளக்கம் கூற முடியுமா என்பதும் சந்தேகம்தான்.

ஆனால் ‘‘13+''என்பது அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் பொறுத்தவரை 13வது திருத்தம் ஓ இரண்டாவது சபை என்றுதான் அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளரான அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல ஒருதடவை கூறியிருந்தார். இந்த வகையாக 13ஐ வரைவிலக்கணப்படுத்துவது இலங்கை தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வை காண்பதற்கு போதுமானதா என்றுகூட சிலர் கேள்வி கேட்கின்றனர். 13வது திருத்தமே தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வாக அமையாது என்று கருத்துரைக்கும் போக்கு தமிழ்ச் சூழலில் வழுவாக உள்ளது.

இலங்கையில் நிலவுவது தேசிய இனப்பிரச்சினையல்ல. அது பயங்கரவாதப் பிரச்சினைதான் தற்போது புலிப்பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டு வந்தபின்னர் நாடு முழுமையாக பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து மீட்கப்பட்டு விட்டது என்று அரசியல் நீக்கஞ் செய்யப்பட்ட வெற்றுச் சொல்லாடல்களின் அணிவகுப்பும் பரவலாக வெளிப்படுகிறது. இந்நிலையில் 13ஐ தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக காண்பதற்கு போதுமானதாக அமைந்துள்ளதா? அல்லது அதனை போதுமானதாக்குவதற்கு நம்மிடம் உறுப்படியான பொருத்தமான அணுகுமுறைகள் கண்டறியப்பட்டுள்ளதா? என்பதெல்லாம் விடைகாண வேண்டிய கேள்விகள்.

ஆனால் 13வது திருத்தத்தை தளர்வுறச் செய்வதற்கான சிந்தனைகளும் நடவடிக்கைகளும் சமகால இலங்கை அரசியல் கலாசாரத்தின் அடித்தளமாக அமைந்திருப்பதை மறுப்பதற்கில்லை. 13வது திருத்தத்தை இல்லாமல் செய்வதென்பது அரசாங்கம் அதன் அயல் நாட்டுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையை மீறுவது ஆகும். இன்னொருபுறம் தனது சொந்த மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளையும் மீறும் துரோகச் செயலாகும். இப்படிப்பட்ட அரசாங்கம் தொடர்ந்து அதிகாரத்தில் இருப்பதற்கான தார்மீகப் பலம் கொண்டதா? அல்லது தார்மீக அடிப்படை ஏதாவது கொண்டிருக்கிறதா? என்பதனை இலங்கை அரசின் தன்மை மீது நாம் எழுப்ப வேண்டிய அறக் கேள்வியாகும். நடைபெறும் வடமாகாண சபைத் தேர்தல் மேற்குறித்த அரசியல் பிரச்சினைகளை எடுத்துரைக்கும் களமாக அல்லது மாற்றங்களை உருவாக்கும் படிநிலைகளை கண்டுபிடிப்பதற்கான தேர்தலாக நடைபெறுமா? அவ்வாறு அதனை மாற்றியமைப்பதற்கான பலம் தமிழ்ச் சூழலில் உள்ளதா? தமிழர் தரப்பு எவ்வாறான நகர்வுகளில் வியூகங்களில் இந்த தேர்தலை எதிர்கொள்ளப் போகின்றது? இவை வினாக்களல்ல நாம் உடனடியாக பதில் கண்டடைய வேண்டிய களங்களும் கூட. ■

# கனடாவில் பரதநாட்டிய அரங்கேற்றம்



*அஞ்சலி ஈஸ்வரமூர்த்தி இன் பரதநாட்டிய அரங்கேற்றம்*

ஆகஸ்ட் மாதம் 10 ம் திகதி City Playhouse Theater, Toronto இல் அஞ்சலி ஈஸ்வரமூர்த்தியின் பரதநாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது. ஆரம்பமுதல் இறுதிவரை அரங்கம் நிறைந்த நிகழ்வாக இந்நிகழ்சி நடைபெற்றது. 10 வருடங்களுக்கு மேலான பரதநாட்டியப் பயிற்சிகளில் ஈடுபட்டுவரும் அஞ்சலி தனது பதின்நான்கு வயது ஆரம்பத்திலேயே தனது குரு திருக்கலாலயம் நாட்டியக் கல்லூரி இயக்குனர் திருமதி திருமகள் ரவீந்திரனிடம் கற்ற கலையை மிகச் சிறப்பாக சபையோர் முன்னிலையில் ஆடற்கலை மூலம் நிருபித்து இருக்கின்றார். நிகழ்ச்சியின் ஆரம்ப முதல் இறுதிவரை அரங்கினுள் ஆடல், பாடல், இசைப் பிரவாகம், கை தட்டல் என்ற சத்தங்களைத் தவிர வேறு எதனையும் கேட்க முடியாத அளவிற்கு நிகழ்சியை மிவும் ரசிக்கத்தக்கவகையிலும், திறமையாகவும், முழுமையாகவும் வெளிப்படுத்திருந்தார் நாட்டிய நங்கை. மிக நீண்ட உருப்படியான வர்ணம் இவ்வளவு நேர்த்தியாக, திறமையாக அமைந்து எல்லோராலும் ரசிக்கத்தக்கதாக மிகவும் அருமையாக அமைந்திருந்தது. அனைத்து உருப்படிகளும் கடினமான அசைவுகளைக் கொண்டிருந்தும் இவற்றை தனது தேர்ச்சியான ஆடற்கலை மூலம் சபையோரிடம் வெளிப்படுத்தி இருந்தார் அஞ்சலி. ஆடற்கலையிற்கான உடையமைப்புகள் மிக அழகாக, நேர்த்தியாக அமைந்திருந்தது பரதத்திற்கு மேலும் சிறப்பூட்டியது. பக்கவாத்திய இசை வழங்கிய கலைஞர்கள் திறமை வாய்ந்த இளம் கலைஞர்கள் பலரை உள்ளடக்கி கூடவே அனுபவம் நிறைந்த கலைஞர்களையும் உள்ளடக்கி இருந்தது. ஆதிரை சிவபாலன் ரோஷான் இன் குரல் வளம் பரதநாட்டித்திற்கு மிகவும் சிறப்பூட்டியது. புலவர் ஈழத்து சிவானந்தன் பிரதம விருந்தனராக கலந்து சிறந்ததொரு உரையை நிகழ்த்தியிருந்தார். இதற்கு சிகரம் வைப்பது போல் அமைந்திருந்தது கலாநிதி அழகானந்த நாத் இன் மதிப்பீட்டுரை. ஒரு முழுமையான இனிய பரதநாட்டிய அரங்கேற்றத்தை பார்த்து ரசித்த திருப்தியில் ரசிகர்கள் மண்டப வாயிலை வாழ்த்துக்களுடன் விட்டகன்றதை பார்க்கக் கூடியதாக இருந்தது.





LIBERTY ORTHODONTIC CENTRE

Dr. Arun Rajasekaran
BSc, DDS, MS, CertOrtho, FRCD (Canada)
Certified Specialist in Orthodontics
பற்களை சீரமைப்பதில் விஷேட நிபுணத்துவம் (Specialist) பெற்றவர்

We offer Free Consultations
Practice Limited to Orthodontics
No Refferal Needed from Your Dentist
Evening and Weekend Appointments Available



Before... After...




We are located in the HSBC building
Free underground parking available

905.948.8556
3601 Highway 7 East, Unit 501, Markham, ON, L3R 0M3

Creating Beautiful Smiles For Tomorrow!



# பார்வையாளர்களை பரவசத்தில் ஆழ்த்திய செல்வி ஜனனி தயாபரனின் பரதநாட்டிய அரங்கேற்றம்.

கலைக்கோவில் நுண்லைக்கல்லூரி அதிபர் "பரதகலாகுலநிதி" ஸ்ரீமதி வனிதா குகேந்திரன் அவர்களின் மாணவி செல்வி ஜனனி தயாபரனின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த சனிக்கிழமை 10.08.2013 ல் சீனக்கலாச்சார மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது . மண்டபம் நிறைந்த பார்வையாளார்களுடன் மாலை 5.40மணியளவில் ஆரம்பமாகிய அரங்கேற்றம் 9.45மணியளவில் இனிதே நிறைவுபெற்றது. அன்றை நிகழ்வில் பக்கவாத்திய கலைஞர்களாக நட்டுவாங்கம் :- ஸ்ரீமதி வனிதா குகேந்திரன். பாட்டு :- ஸ்ரீமதி லசந்தி ராஜ்குமார். மிருதங்கம் :- ஸ்ரீ குகேந்திரன் கனகேந்திரம் வயலின் :- ஸ்ரீ வு.C பாலமுரளி கடம் :- யோனாத்தன் இராஜநாயகம் ஆகியோர் கலந்து மிகச்சிறப்பாக தத் தம் கடமைகளைச் செய்தனர்.

மனிதன் மனிதப் பண்புடன் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டி வருகின்றான். இவ்வரிய கலைகளில் குறிப்பிடத்தக்கவற்றைத் தம் சிறு பருவம் முதல் பயின்று சிறந்த அரங்கேற்றமாக அமைந்தர்ர் செல்வி ஜனனி தயாபரன்.

மங்களவிளக்கேற்றல், தமிழ்த் தாய் வாழ்த்து, கனேடிய தேசிய கீதம், மௌன அஞ்சலி என்பன இடம்பெற்றன. தொடர்ந்து அரங்க பூஜை இனிதே நிறைவேறியது.

தொடர்து தனது நடன நிகழ்வை ஆரம்பித்த ஜனனி. தோடயமங்களம், புஸ்பாஞ்சலி, அலாரிப்பு, ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம் கீர்த்தனம், பதம், கவித்துவம், தந்தையர் புகழ், தில்லானா, மங்களம் எனச் சிறப்பாக முன்னெடுத்துச் செல்லப்பட்ட பரதநாட்டியக் கச்சேரியில் பார்வையாளர்களின் கரவொலியின் மத்தியில் சிறிய தாரகை போன்று அரங்கில் பிரகாசித்தாள் ஜனனி. மாதா , பிதா, குரு, தெய்வம் என தெரிவாகியிருந்த பாடல்கள் அனைத்தும் சபையோரை மெய்சிலிர்க்க வைத்தது.

தொடர்ந்து இசைநிகழ்வின் சிறப்பு அதிதியாக வருகை தந்திருந்த திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள், இளம் தலைமுறையினர்களுக்கு கலைகளின் முக்கியத்துவம் பற்றியும், அதில் பெற்றாரின் பங்களிப்புப் பற்றியும், உரையாற்றினார்.

தொடர்ந்து நடன நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த திரு கனக மனோகரன் அவர்கள் ஜனனிக்கு இக் கலையைச் சிறப்பாகக் கற்பித்த தாயாரையும், குரு ஸ்ரீமதி. வனிதா குகேந்திரனின் திறமையினையும் பக்கவாத்திய கலைஞர்களின் பங்களிப்பையும் வர்ணித்தார்.

மாணவி கௌரவிக்கப்பட்டதுடன் கற்ற சபை முன்னிலையில் சான்றிதழும், கோடயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். கலையில் தம் திறமையைக்காட்டிய இம்மாணவி நன்றியுரையை ஆங்கிலத்திலும் சிறப்பாக வழங்கி அனைவரினது உள்ளத்தினையும் மகிழ்வித்தனர்.

பார்வையாளர்கள் ஏவ்வித சலிப்புமின்றி ஒரு வித்தியாசமான அனுபவமாக இரசக்கக்கூடிய வண்ணம் இருந்தது எனக் குறிப்பிட்டதை அவதானிக்க முடிந்தது.

நிகழ்வு இறையருளினால் இனிதே நிறைவேறியது.

**கலைரசிகன்**

## போராளி பொன்னுத்துரை...

மாற்றிக்கொள்ள விரும்பாத குமரன் அவர்கள் தொடர்ந்தும் ஈழத்தில் இருப்பது உயிராபத்தை ஏற்படுத்தும் என்று அறிந்ததால் வெளிநாடு புறப்பட்டார்.

வெளிநாடு வந்தபோதிலும் தனது கொள்கைப் பிடிப்பிலிருந்து சற்றும் தளராதவராகவே காணப்பட்டார். மொழிஉணர்வும், இனஉணர்வும் அவரை ஒரு சமூகப் பற்றாளனாகவும், சமூகத் தொண்டனாகவும் மாற்றியதென்றால் மிகையாகாது. அமைப்புகளிடையே ஏற்பட்ட மோதல்களாலும், உடைவுகளாலும் அமரரை இயக்கச் செயற்பாடுகளிலிருந்து ஒதுக்கி வைத்தனவேதவிர பொதுப் பணியிலிருந்து புறந் தள்ளிவைக்கவில்லை.

புலம்பெயர்ந்த மண்ணில் முன்னெடுக்ககப்பட்ட இனவெழுச்சிப் போராட்டங்களிலெல்லாம் தன்னை இணைத்துக் கொண்டதன்மூலம் தனது உள்ளார்ந்த விடுதலை உணர்வை வெளிப்படுத்தி நின்றார். மாற்றியக்கங்கள் நடத்திய மொழிசார்ந்த செயற்பாட்டுக் கூட்டங்கள் பலவற்றிற்கும் அழையாத விருந்தாளியாகச் சென்ற இவர் அங்கெல்லாம் ஒற்றுமையின் முக்கியத்துவத்தை எடுத்தியம்பியது அவரது நசிந்துபோகாத மனத் துணிவையும், நெகிழ்ந்துபோகாத இனபற்றையும் வெளிக்காட்டியது.

போரின் தாக்கத்தாலும், இடப் பெயர்வாலும் சிதைந்து சின்னாபின்னப்பட்ட மாதகல் மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தவேண்டுமென்று அயராது பாடுபட்டவரே பொன்னுத்துரை அவர்கள். அதற்காகப் பிரான்சில் மாதகல் நலன்புரி சங்கம் ஒன்றை அமைத்து அதனூடாகப் பல பணிகளை முன்னெடுத்துச் செயற்பட்டார். மாதகல் மாணவர் களின் கல்வி வளர்ச்சியிலும், பாடசாலைகளின் உயர்ச்சியிலும், குடிநீர் வசதிசெய்து கொடுக்கும் திட்டத்திலும் முழுமூச்சுடன் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். வெளிநாடு வந்ததும் தாம்பிறந்து வாழ்ந்த மண்ணைமறக்கும் பலரையும் அணுகி அவர்கள் கடமையை அவர்களுக்கு உணர்த்தித் தான்சாார்ந்த சங்கத்தின் செயற்பாடுகளில் அவர்களை விரும்பி ஈடுபட வைத்தபெருமை அமரர் பொன்னண்ணாவையே சாரும்.

சுவிஸ், டென்மார்க், இங்கிலாந்து போன்ற நாடுகளிலெல்லாம் மாதகல் நலன்புரி சங்கங்களை அமைக்க ஒழுங்குகளை மேற்கொண்டதோடு அவற்றையெல்லாம் கனடா மாதகல் நலன்புரி சங்கத்துடன் ஒன்றிணைந்து இயங்கவும் வழிசமைத்தார். இவரது இந்த முயற்சி மாதகலில் ஏற்படுத்திய மாற்றங்களை மாதகல் மக்கள் அனைவரும் அறிவர். மாதகலின் கல்வி வளர்ச்சியே மாதகலின் சமூக வயர்ச்சியை ஏற்படுத்துமென்று நம்பிய பொன்னுக்கிளி அவர்கள் அதற்காகப் பல செயற்திட்டங்களுக்குத் தான் தலைமை தாங்கிய பிரான்ஸ் மாதகல் நலன்புரி சங்கத்தினூடாக உதவினார். இந்த வரிசையில் மாதகலில் தரமான முன்பள்ளியொன்று அமைக்கப்படவேண்டுமென்ற கனவோடும் உழைத்தார். அவரது கனவு நனவாகு முன்பே அவர் இயற்கையெய்தியது மாதகல் மக்கள் மட்டில் ஒரு பாரிய இழப்பாகவே பார்க்கப்படுகிறது.

இவரது இழப்பென்பது ஒரு சாதாரண இழப்பல்ல இது பாரிய இழப்பாகும். இவர் ஏற்படுத்திய வெற்றிடத்தை இன்னொருவரால் நிறைவு செய்யமுடியுமா என்றுகேட்கும்வகையிற் தனது தனித்துவமான பணிகளால் தனக்கென்று ஒரு இடத்தை அனைவர் மத்தியிலும் ஏற்படுத்திவிட்டார். அமரரின் விருப்பப்படியே அவரை நேசிக்கும் அனைவரும் மனிதநேயம் காப்பவராகவும், மக்கள் சேவை செய்பவராகவும் தம்மை மாற்றிக்கொள்ளத் திடசங்கற்பம் செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்வோம்.

**மாதகலான்**




PEEL
TAE-KWON-DO
“Independent studies show that martial arts can improve mental focus, Increase attention span, and the ability to make better decisions”
ONE WEEK
TRIAL SPECIAL
$10
Creaa Design
CORE CENTRE
4525 Ebenezer Road. Unit 25
Brambton ON LP6 2K8
905 913 2571
170 Boviard Drive West. Unit 9
Brambton ON L7A 1A1
905 840 5268


HomeLife Today Realty Ltd., Brokerage
Independently Owned and operated
Higer Standard Agents,,, Higher Results
HOMELIFE
HIGHER STANDARDS
Parathan Navaratnam
Sales Representative
Business: 416-298-3200 Direct: 647-524-7655
Creaa Design
210- 31 Progress Ave., Toronto ON. M1P 4S6

# தமிழ் கதை 2

## யோ.கர்ணன்

அம்மான் அண்ணை நெடுகலும் இந்த பாட்டை பாட, அவன் கேட்டிருக்கிறான். அந்தாள் பாடுவதை வைத்து, அப்பவே மனதிற்குள் ஒரு சமன்பாட்டை கண்டடைந்திருந்தான். அதாவது, இயக்கம் எப்படி யாழ்ப்பாண சண்டையை செய்ய போகிறது என்பதிற்கான பதில் இந்த பாடலிலும், அவர் பாடுவதிலும் ஒளிந்திருக்கிறதென்பது அவனது உறுதியான எண்ணமாக இருந்தது.

ரைகர்ஸ் யாழ்ப்பாணத்திலிருக்கும் நாற்பதினாயிரம் சிங்களப் படைகளையும் உயிருடன் பிடித்து வைத்துக் கொண்டு, பேரம் பேசி தமிழீழத்தையடையப் போகிறார்களா அல்லது நாற்பதினாயிரம் சடலங்களை வைத்துக் கொண்டு, பேரம் பேசி தமிழீழத்தையடையப் போகிறார்களா என உலகின் திசையனைத்திலுமிருந்த தமிழ் அரசியல் ஆய்வாளர்கள் தலையைப்பிய்த்துக் கொண்டிருந்த பொழுதது.

ஏ 9 வீதியில் செம்மணியிலிருக்கும் யாழ்ப்பாணம் வரவேற்கிறது என்ற வளைவின் கீழாக மாலதிபடையணிப் பிள்ளைகளும், ஜெயந்தன் படையணிப் பொடியளும் நிற்கும் புகைப்படங்கள் ஈழநாதம் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தன. படத்தின் கீழே "வந்த வழி நாம் நடந்து வாசல் புக வேண்டும். எங்கள் வயல்வெளிகள் மீண்டுமினி அழகொளிர வேண்டும்" என்று தடித்த எழுத்தில் எழுதப்பட்டிருந்தது. உலகெங்கிலுமுள்ள தமிழ் ஊடகங்களனைத்திலும் அந்த படம் மறுநாள் பிரசுரமானது. யாழ்ஒளிக்கும் அந்த வரி நல்ல விருப்பம்.

தொன்னூற்றைந்தாம் வருடம் நடந்த சூரியகதிர் நடவடிக்கையில் இயக்கம் யாழ்ப்பாணத்திலிருந்து தந்திரோபாய பின்வாங்கல் செய்து வன்னிக்கு வந்தது. அப்பொழுது இந்த பாட்டு வெளிவந்திருந்தது. அம்மான் அண்ணை நெடுகலும் இந்த பாட்டை பாட, அவன் கேட்டிருக்கிறான். அந்தாள் பாடுவதை வைத்து, அப்பவே மனதிற்குள் ஒரு சமன்பாட்டை கண்டடைந்திருந்தான். அதாவது, இயக்கம் எப்படி யாழ்ப்பாண சண்டையை செய்ய போகிறது என்பதிற்கான பதில் இந்த பாடலிலும், அவர் பாடுவதிலும் ஒளிந்திருக்கிறதென்பது அவனது உறுதியான எண்ணமாக இருந்தது. இயக்கம் இயக்கச்சியில் கைவைக்குமா, நாகர்கோயிலில் கைவைக்குமா, மேவிப்போய் பருத்தித்துறையிலோ, பலாலியிலோ தரையிறங்கி அடிக்குமா என்றெல்லாம் குழம்ப வேண்டியதில்லை. கிளாலி பக்கம் எங்காவது இறங்கி, தென்மராட்சியை கைப்பற்றி அப்படியே ஒதுக்கி கொண்டு ரவுணுக்கு போக, ஓட்டமற்றிக்காக குடாநாட்டில இருக்கிற ஆமிக்காரர் எல்லோரும் பலாலிக்குள் ஒதுங்குவினம். அப்பிடியே பலாலியை சுற்றி பால்ராஜ் அண்ணையை வைத்து ஒரு "ஸ்ரோங்கான லைன்" போட்டுவிட்டு, சரண்டர் பண்ணுற ஆட்கள் வாங்கோ என ஸ்பீக்கர் கட்டி அறிவிக்கிறது. இரண்டு நாள் அவகாசம் கொடுத்துவிட்டு பிறகு கெமிக்கல்ஸ் பாவித்துவிட்டால் விசயம் சரி. இப்படித்தான் நடக்குமென மனதிற்குள்ளாக நினைத்தான். இப்படி அவன் நம்பியதற்கு, நாங்கள் கிளாலி வழியாகத்தான் பின்வாங்கி வந்தோம் என்பது மட்டுமே காரணமாக இருந்ததென நினைக்க வேண்டாம். நாங்கள் இப்பொழுது தரைவழியாகத்தான் சண்டையை தொடங்க வேண்டும் என்றெல்லாம் கிடையாது. குடாரப்பில் அதனை நிருபித்தும் விட்டோம். தவிரவும், முதல் சண்டை எப்பொழுதும் ஆக்ரோசமாகத்தானே இருக்கும். கிளாலிதான் அதற்கு சரியான இடமாக இருக்கும். சனம் இல்லாத ஏரியா.

யாழ்ப்பாணச்சண்டை தொடங்கியதிலிருந்து புலிகளின் குரலில், "புலிகள் மீண்டும் யாழ்ப்பாணத்திற்குப் படையெடுப்பினம்" என்ற பாட்டை திரும்பத் திரும்ப ஒலிபரப்பினார்கள். நிறைய வருடங்களிற்குப்பிறகு "பறக்குதடா யாழ் கோட்டையிலே எங்கள் புலிக்கொடி" என்ற பாட்டையும் கேட்டான். ஏனெனில் யாழ் நகரிலிருந்து போராளிகள் நின்ற அந்த வளைவு சரியாக ஐந்து கிலோமீற்றர்கள் தூரத்திலேயே இருந்தது. ஐந்து கிலோமீற்றர்கள் என்பது சாதாரண ஓட்டக்காரன் ஒருவன் பதினாறு நிமிடங்களில் அடையும் தூரம். ஓட்டுசுட்டானில் தொடங்கி நான்கு மாதமாக விடாமல் ஆமிகாரரை துரத்தி ஓடுவதற்கேதுவான உடல்நிலையை கொண்டிருந்த போராளிகளினால், அந்த தூரத்தை பன்னிரண்டு தொடக்கம் பதின்னான்கு நிமிடங்களில் அடைவதற்கான சாத்தியங்களும் இருந்தன.

எல்லாச்சனங்களும் இயக்கப் பொடியளும் காற்றில் மிதக்கிற ஒரு பீலிங்கில்தான் அந்த நாட்களில் திரிந்தார்கள். எல்லோருடைய கண்களிலும் பெரியதொரு கனவு விரிந்திருந்தது. பூமியை துளைத்துக் கொண்டு விரியும் மரக்கன்றொன்றுடன் அந்நாட்களை ஒரு ஆய்வாளர் ஒப்பிட்டிருந்தார். அதுவும் சனங்களிற்குள் திரியும் அரசியல்த்துறைக்காரர் ஓவராக கலர்ஸ் காட்டுகினம் என யாழ்ஒளி அபிப்பிராயப்பட்டான். வோக்கி சுப்பரொட்டை இழுத்துவிட்டுக் கொண்டு சும்மா தேவையில்லாமல் வீதியில் ஓடித்திரிகிறார்கள் என தனது பொறுப்பாளருடன் கதைக்கும் பொழுது ஒருமுறை குறைபட்டும் கொண்டான்.

அப்பொழுது தான் "இராணுவச்சமநிலை" என்றொரு சொல் பரவலாக தமிழ்சனங்கள் வாசிக்கிற பேப்பர், பார்க்கிற தொலைகாட்சிகள், கேட்கிற வானொலிகளில் அடிபட ஆரம்பித்தது. உண்மையை சொன்னால், அந்த சொல்லின் சரியான விளக்கம் ஆரம்பத்தில் இவனுக்கு தெரிந்திருக்கவில்லை. ஈழநாதம் பேப்பரின் நடுப்பக்கத்தில் சண்டை தொடர்பான வண்ண புகைப்படங்களுடன் நீண்டதொரு கட்டுரையொன்று அந்த நேரம் பிரசுரமாகியிருந்தது. கட்டுரையின் முதல் மற்றும் கடைசி வசனங்களாகத்தான் இராணுவசமநிலை என்ற சொல் இருந்ததென்று இல்லை. கிட்டத்தட்ட ஒன்றுவிட்டதொரு வாக்கியத்தில் அந்த சொல்லிருந்தது. இதனைவிட இன்னொரு முக்கியமான விடயமும் கட்டுரையில் இருந்தது. அதாவது, இலங்கையரசுடன் சேர்ந்து சர்வதேசசமூகம் தமிழீழ விடுதலையை தாமதப்படுத்தினாலும், இந்த போராட்டம் நீர்த்து போகாது. இன்னும் ஐம்பது வருடங்கள் என்றாலும் போராட்டம் ஈடுகொடுத்து நிற்குமாம். இதனை படித்த பொழுது இவனிற்கு உற்சாகம் வெடித்து கிளம்பியது. கட்டுரையை எழுதியவரை ஒருமுறை சந்தித்தால் என்ன என்ற ஐடியா தோன்றியதும், உடனடியாக புதுக்குடியிருப்பு கிளம்பினான். புதுக்குடியிருப்பிலுள்ள ஈழநாதம் அலுவலகத்தில் விசாரித்தால் அவரை சந்திக்கலாம் என்று நினைத்தான்.

முகாமிலிருந்து வெளியில் சென்றுவர அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவனாக அவனுமிருந்ததினால் பிரச்சனையிருக்கவில்லை. கடந்த மூன்று மாதமாகதான் நிர்வாக வேலைக்கு மாற்றப்பட்டிருந்தான். முன்னர் பாதுகாவலன் வேலை. இரண்டும் அவனிற்கு ஒன்றுதான். ஒரு நிமிடம் ஓயாத வேலை. முன்னரெனில் ஜக்கற் கோள்சர் கட்டியபடி தொடர்ந்து ஆறுமணித்தியாலச் சென்ரி வரும். இடையில் இரண்டு மணித்தியாலம் ஒய்வு. பிறகு சென்ரி. தொடர்ந்து ஜக்கற் கட்டுவதால் சிலருக்கு சற்று கூன் வேறு விழுகிறது. இப்பொழுது ஜக்கற் கட்டத் தேவையில்லை. ஆனால் ஒரு நிமிடம் ஓயாமல் மோட்டார்சைக்கிளில் ஓட வேண்டியிருந்தது. முகாமிலுள்ள அனைவருக்கும் உணவு ஒழுங்குகள், பராமரிப்புப் பொருள் ஒழுங்குகள், ஆயுத உபகரண ஒழுங்குகள் என அனைத்தையும் நிர்வாக செக்சனிலிருந்த இரண்டொருவரும் ஓடியோடி செய்ய வேண்டியிருந்தது. எப்படியோ அண்ணையோட நிற்கிறன் என்பதில் அவனிற்கு பிடிபடாத பெருமையிருந்தது.

புதுக்குடியிருப்புச் சந்தியிலிருக்கும் ஒரு கடையின் முன்னால் ஈழநாதம் பேப்பர்கள் தொங்கிக் கொண்டிருந்தன. ஈழநாதம் பார்த்தால் ஏதாவது தெரியாத புதினங்கள், படங்கள் இருக்கலாம். அப்படியொரு புதினம் இல்லையென்றால் கூட பரவாயில்லை. உள்பக்கத்தில் நல்ல நல்ல வெற்றிக்கவிதைகள் இருக்கும். புதுவை அண்ணையும், சா.வே ஐயாவும் கட்டாயம் எழுதியிருப்பார்கள். அது இல்லையென்றால் கூட பரவாயில்லை. கட்டுரை எழுதியவரை காண செல்லும் பொழுது பத்திரிகையுடன் செல்வதாக இருக்கட்டும் என ஒரு பேப்பர் வாங்கினான்.

கடைக்காரனிற்கு இவனைப்பார்த்ததும் இயக்கம் என்பது தெரிந்து விட்டது. நன்றாகச் சிரித்தான். இவன் மெதுவாகத் தலையாட்டினான்.

"தம்பி... ஆரோட நிக்கிறீங்கள்... ரவுணுக்க அடிக்கடி கண்ட முகமாத் தெரியயில்லை"

"கடாபியண்ணையோட நிற்கிறன்..". முன்னரெனில் உண்மையை சொல்லியிருக்க மாட்டான். அரசியல்த்துறையென்றோ, பொறியியல்த்துறையென்றோ பொய் சொல்லியிருப்பான். ஆனால் இந்த நாட்களில் சும்மா ஊருக்குள் பிரச்சாரம் வைச்சுக் கொண்டும், ஒன்றும் தெரியாமலும் இருக்கிற அரசியல்துறைகாரர், ஏதோ தாங்கள்தான் முழு இடத்தையும் அடிச்சுப்பிடிச்ச ஆட்கள் மாதிரி கலர்ஸ் காட்டிக் கொண்டு திரியினம். காரணமேயில்லாமல் மோட்டார் சைக்கிளில குறுக்கும் நெடுக்குமாக ஓடித் திரியினம். இவ்வளவு பெரிய வேலை செய்யிற நாங்கள் மட்டும் என் விசரங்கள் மாதிரி இருக்க வேணும். இல்லாததையா சொல்லுறன். உள்ளதைதானே சொல்லுறன் என நினைத்துக் கொண்டான். "அடடடா.. அதுதானே பார்த்தன்... வெளியால காணயில்லை என்டதும் நான் நினைச்சனான்.. ஏதோ பொறுத்த இடத்திலதான் இருக்கிறியள் என்டு. அதுசரி தம்பி, உங்களிற்குத்தானே வடிவாகத் தெரியும். அரசியல்த்துறைகாரரிட்ட கேட்டால் ஈழநாதம் பேப்பரில வந்ததைதான் வாசிச்சுப் போட்டு சொல்லுவாங்கள்.

தம்பி...என்ன மாதிரி உங்கால யாழ்ப்பாணத்துப்பக்க நிலைமை... கிட்டடியில ஊருக்கு போகலாம் போல"

"ஓமண்ணை...எங்களிற்கு வரலாற்றில கிடைக்காத ஒப்பற்ற தலைவர் கிடைச்சிருக்கிறார்... அவற்ற தீர்க்கதரிசனமான வழிநடத்தலில கிட்டடியில தமிழீழம் கிடைக்கும்"

"ஓம் தம்பி.. உப்பிடியே நீர் சொன்ன மாதிரியேதான் இன்டையான் பேப்பரிலயும் கிடக்குது"

வழியெல்லாம் சீட்டியடித்தபடி சென்றான். மோட்டார்சைக்கிள் அக்சிலேற்றறை இன்னும் இன்னும் முறுக்கிக்

கொண்டேயிருந்தான். நடந்தும், சைக்கிளிலுமாக எதிர்ப்பட்டுக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரையும் யாழ்ப்பாண ஆமியாகவும், அவர்களை மிதித்தெறிந்தபடி மோட்டார்சைக்கிளில் ஆமி காம்பை உடைத்துக் கொண்டு செல்வது மாதிரியும் கற்பனை பண்ணிக் கொண்டான். இந்த நினைப்பே ஒரு ஆவேசமான சுகத்தை உண்டு பண்ணிக் கொண்டிருந்தது.

புதுகுடியிருப்பு சந்தி கடக்க ஈழநாதம் அலுவலகம் வந்தது. வரிப்புலி உடுப்புடன் ஒரு பொடியன் வந்ததும் பேப்பர்காரரும் வலு மரியாதையாக நடந்து கொண்டார்கள். நேராக பொறுப்பாளரின் அலுவலகத்திற்கு கூட்டி கொண்டு போனார்கள். அலுவலக நாற்காலிக்குள் புதைந்து பாதி தூக்கத்திலிருந்த பொறுப்பாளனிடம், தன்னை பற்றிய மேலோட்டமான அறிமுகத்தை சொன்னதுமே, காலில் சக்கரம் பூட்டிக் கொண்டவன் போலானான். என்ன சொன்னாலும் “அண்ணையின்ர ஆக்கள்” என வாய் நிறைய சொல்லியபடியிருந்தான். தேத்தண்ணீருக்கு ஓடர் போட்டாலும், “அண்ணையின்ர ஆள் வந்திருக்கிறார். அந்த மாதிரி பிளேன்ரி கொண்டு வாங்கோ” என்றான். அச்சுகூடத்தை பார்க்க வேண்டும் என்றதும், “அண்ணையின்ர ஆளிற்கு எல்லா செக்சனையும் வடிவாக காட்டுங்கோ” என்றான். இராணுவசமநிலை கட்டுரை எழுதியவரை பார்க்க வேண்டும் என்றதற்கும், “அண்ணையின்ர பொடியளை சுணங்க வைக்க கூடாதென்டதற்காக இப்பவே ஏற்பாடு செய்யலாம்.. ஏனென்டால் அவர் உள்ளுக்கதான் நிற்கிறார். கட்டுரை தர வந்தவா” என்று, உள்ளே அழைத்து சென்றான்.

இவனுடன் வந்து கொண்டிருந்த பொறுப்பாளன் தட்டச்சு பகுதி என எழுதப்பட்டிருந்த கதவை தள்ளிக் கொண்டு வேகமாக உள்நுழைந்தான். சட்டென வேகம் எடுத்து இவனைவிட நான்கைந்து அடிகள் இடைவெளியெடுத்து கொண்டான். யாரோ ஒருத்தி தட்டச்சு செய்து கொண்டிருக்க, அவளிற்கு பின்னால் உட்கார்ந்திருந்து ஏதோ திருத்தம் சொல்லிக் கொண்டிருந்த மனிதரின் அருகில் சென்று காதுக்குள் எதுவோ சொன்னார். இவன் அவ்விடத்திற்கு போகவும், அவர் கதிரையைவிட்டு எழுந்து சிரித்தபடி திரும்பவும் சரியாக இருந்தது. “வாங்கோ” என்றபடி ஒரு அடி முன்னால் வந்து கை தந்து, “நான்தான் ஆய்வாளர் அணங்கன்” என்றார். ஆள் நெடுநெடுவென்று நல்ல உயரமாக, நல்ல வெள்ளையாக இருந்தார். இப்படியாக சற்றும் எதிர்பாராதவிதமாக ஒரு தமிழ்அரசியல் ஆய்வாளரை நேருக்கு நேராக சந்தித்து கொண்டான். பலதையும் பத்தையும் கதைத்துவிட்டு புறப்படும் பொழுது, “சைபர் ரீமோ” என கேட்டார். இவன் சிரித்தான். மந்துவிலுள்ள தனது வீட்டிற்கு அடுத்தவாரம் கட்டாயம் வர வேண்டுமென கேட்டு கொண்டார்.

வார கடைசியில் அவரது வீட்டிற்கு சென்றான். ஆனால் இதில் ஒரு பிரச்சனை இருந்தது. என்னதான் இயக்க பத்திரிகையில் அரசியல்கட்டுரைகள் எழுதினாலும் ஆளும் பொதுசனம்தானே. பொதுசனங்களின் வீடுகளிற்கு போக கூடாதென்பது அவன் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயமான விதி. சொந்தகாரரர் வீடுகளிற்கு போனதற்கே மாதக்கணக்கில்கடாபியண்ணைபலரை அடைத்திருக்கிறார். இந்த பிரிவிற்கு வந்தபோது, இயக்கம் படித்துபடித்து சொல்லி தந்த விசயம்- ஆசாபாசங்களை ஒதுக்கி வைத்து விடுங்கள் என்பதே. இயக்கம் போறடி போக்காக ஒரு விசயத்தை சொல்லமாட்டுதுதானே. ஏழெட்டு மாதங்களின் முன் நடந்த சம்பவமொன்றை பாருங்கள். இப்பிடித்தான் ஒரு பொடியன்- பரதன்- வழங்கல் பொருட்களை எடுக்க புதுக்குடியிருப்பு சந்தைக்கு போய் வந்து கொண்டிருந்தான். போன இடத்தில் கடையில் நின்ற இளம்பெட்டையொருத்தி இவனுடன் வலிய வலிய வந்து சிரித்து கதைத்து பழக்கத்தை ஏற்படுத்தி விட்டாள். காய்ந்த மாடு கம்பில விழுந்த மாதிரி முகாமில் “கல்லு வெட்டி” கொண்டு திரிந்தவன், ஒரு பொம்பிளை கிடைத்தால் விடுவானா. அவளது வீட்டிற்கு போய்வரத் தொடங்கிவிட்டான். நிதானம் தப்பியிருந்த தருணமொன்றில் மெல்லமெல்ல விசயங்களை சொல்லி விட்டான். அவள் சாதாரணமாகதான் கேட்டிருக்கிறாள் “தலைவரின்ர காம்ப் புதுக்குடியிருப்புக்கையோ இருக்குது” என. இவனுக்கு பெருமை பிடிபடவில்லை. தனது பிடிக்குள் இருந்தவளிடம் தன் பற்றிய பிரமையை உண்டாக்க உள்ளதை உள்ளபடி கதைத்து விட்டான். தான் சொல்லும் இரகசியங்களை யாரிடமும் சொல்லகூடாதென அவன் சொன்ன போது, அவனது வலதுகாதை மெதுவாக கடித்து சிணுங்கினாள். பிறகு அடுத்த கேள்வியையும் வெகு சாதாரணமாகத்தான் கேட்டிருக்கிறாள்- “அப்ப.. நீங்கள் கொண்டு போற இந்த மரக்கறியளையா தலைவர் மாமாவும் சாப்பிடுறவர்”.

இதற்கடுத்ததாக நடந்ததெதுவும் சாதாரண காரியங்கள் அல்ல. இது நடந்து பதினைந்தாவது நாள், முகாமின் பின்பக்கமாக “கிளியரிங்” போன பொடியள் சில தடயங்களை கண்டனர். உடனடியாகவே, காட்டை சல்லடையிட்டதில் ஐந்துபேர் கொண்ட ஆழஊடுருவும் அணியொன்று சிக்கியது. ஒருவன் அகப்பட்டான். மற்றவர்கள் பறந்து விட்டனர். பிறகென்ன சங்கிலி தொடராக பலர் உள்ளுக்கு போனார்கள். பரதனும், கடைகார பெட்டையும் போனவர்களில் அடக்கம்.

ஆனாலும் இதெல்லாம் நடந்தது இறுக்கமான நேரத்தில். இந்த வெற்றிக்காலத்தில் இயக்கமும் சில பிரச்சனைகளை கண்டும் காணாமலும் விடத் தொடங்கிவிட்டது. ரட்ணம் மாஸ்ரரின் புலனாய்வுப் பொடியள் தங்களுக்கு தெரிந்த வீடுகளிற்குப் போய் சண்டைக்கதைகளை கதைத்துக் கொண்டிருப்பார்கள். கண்காணிப்பிற்கு நிற்கமாட்டார்கள் எனப்பட்டது. வீதியில் யாரும் இருக்கவுமில்லைதத்தான். ஒழுங்கைக்குள் திரும்பி விட்டான்.

அணங்கனுடன் யாரோ ஒரு நடுத்தர வயதானவர் உட்கார்ந்து கதைத்து கொண்டிருந்தார். கொஞ்சம் வயதானவர். தகதகவென அப்படியே எம்.ஜி.ஆரின் நிறத்திலிருந்தார். இரத்த சிவப்பு நிறத்தில் ரீசேர்ட் அணிந்திருந்தார். முன்னால் வழுக்கை விழுந்திருந்தது. பக்கங்களிலும் பின்னாலுமிருந்த தலைமுடியை நீளமாக வளர்த்திருந்தார். அதுவே ஒரு வினோதமான தோற்றத்தை உண்டாக்கியது. தாடியும் கழுத்தை கடந்து வளர்ந்திருந்தது. ஆளின் எடுப்பு சாய்ப்புகளை பார்க்க வெளிநாட்டிலிருந்து வந்தவர் போலிருந்தது. வெளிநாட்டிலும் இப்படி சாமியார் மாதிரி திரியிற ஆட்கள் இருக்கினம் என்பது இவனுக்கு சரியான ஆச்சரியமாக இருந்தது. இவன் உட்கார்ந்ததும் அசாதாரண மௌனம் நிலவியது. எம்.ஜி.ஆர் வாயை திறக்கமாட்டேன் என பலவந்தமாக உதடுகளை இறுக மூடிக் கொண்டிருந்தது மாதிரிப்பட்டது. இவன் அவரை பார்த்து “வணக்கம் ஐயா” என்றான். முகத்தை தாழ்த்தி கண்ணாடிக்கு மேலால் இவனை பார்த்து தலையசைத்தார். அப்பொழுதும் உதடுகளை திறந்தாரில்லை.

நிலமையை சகஜமாக்குவதற்கு அணங்கன் எவ்வளவோ முயன்று கொண்டிருந்தார். இவனது சுகநலன்களை விசாரித்தார். பிறகு அவர் பக்கம் திரும்பி, புதுக்குடியிருப்பு வெக்கை எப்படி என்றார். எம்.ஜி.ஆர் சேர்ட் கொலரை சற்று தூக்கி “உஸ் உஸ்” என ஊதிக் கொண்டார். தனது வருகையை அவர் விரும்பியிருக்கவில்லை போல என்று இவன் நினைத்தான்.

அணங்கனும் கொஞ்சநேரம் சங்கடத்தில் நெளிந்தார். பிறகு எப்பிடியோ சமாளித்து கொண்டு, “ஆள் பிரச்சனையில்லாத பொடியன். எங்கட பொடியன்தான். ஒன்றுக்கும் பயப்பிடத் தேவையில்லை” என்றார்.

இவனுக்கோவெனில் கடுமையான குழப்பம். நான் என்ன பிரச்சனை தருவன் என இந்தாள் பயப்பிடுது. ஏதோ, தலைவரை உயிரோட பிடிக்க வந்த இந்தியன் றோகாரரர் மாதிரி எதற்காக இந்தாள் வெருளுது என குழம்பத் தொடங்க, அணங்கன் சிரித்தபடி அவரை பார்த்தபடி, அவரை இவனுக்கு அறிமுகப்படுத்தினார். அவரது முகத்தையே சிரித்தபடி பார்த்து கொண்டு இவனுடன் கதைத்ததன் மூலம், எம்.ஜி.ஆரிற்கு நம்பிக்கையூட்ட முனைகிறார் என்றுபட்டது.

“இவர் மிஸ்டர் கனகவேல்” என தொடங்க, எம்.ஜி.ஆர் இடைமறித்து “அது பெற்றவர்கள் வைத்த பெயர். நானாக வைத்த பெயர் வன்னியன். யாழ் மையவாதத்திற்கு எதிராக வைச்சது” என்றார். இவனுக்கென்றால் ஒன்றும் விளங்கயில்லை. “யாழ் மையவாதம்” என்ற சொல்லை முன்னப்பின்ன கேள்விப் பட்டேயிருக்கவில்லை. தனக்கு தெரியாமல் யாழ்ப்பாணத்திற்குள் அப்படியொரு குக்கிராமம் இருக்குமோ என்றும் நினைத்தான். அது எங்கேயிருக்கிறது, எப்படியிருக்கும் என ஒன்றுமாக விளங்காமலிருக்க, அணங்கன் ஒரு நமுட்டு சிரிப்புடன் தொடர்ந்தார். “வெளிநாட்டிலயிருந்து வந்திருக்கிறார். ஆள் ஒரு விமர்சகர். கொஞ்சம் லெப்ற் சாய்வுள்ளவர். அதை ஒருதருக்கும் சொல்லாமல் வந்து நிற்கிறார். தெரிஞ்சால் இயக்கம் சுட்டுப்போடும் என்று ஆள் பயப்பிடுது. அதுதான் உம்மோட கதைக்க பஞ்சிப்பட்டவர். இயக்கத்தை பற்றி புத்தகமொன்று எழுதப் போறாராம்.. அதுதான் தகவல் சேகரிக்க என்னட்ட வந்தவர்” என்றார். இயக்கம் சுடும் என இந்தாள் எதற்காக பயப்பிடுது என்றது இவனுக்கு விளங்கவேயில்லை. இவனறிந்தவரையில் இயக்கத்திற்கு பிரச்சனையாக இருப்பது இலங்கைஆமியும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஒன்றிரண்டு குழுக்களும்தான். முந்தி இந்தியன் ஆமியுடன் பிரச்சனையிருந்தது. இப்பொழுது இல்லை. இப்பொழுது அவர்களை தொப்புள் கொடி உறவாகத்தான் பார்க்கிறார்கள். இதை தவிர்த்தால் வேறு ஆபத்தானவர்கள் இருப்பதாக இவனிற்கு தெரிந்திருக்கவில்லை.

“இயக்கம் உங்களையெல்லாம் சுடாது. பயப்பிடாதையுங்கோ” என்றான்.

“உமக்கு தெரியாது. பிரபாகரன் அறிஞ்சானென்டால் என்னை உடனே மண்டையில போட சொல்லுவான்” என்றவர், தொண்டையை கனைத்தபடி கீழ்குரலில் “இவர்.. மிஸ்ரர் அணங்கன்.. என்னை விமர்சகர் என்டு உம்மட்ட அறிமுகப்படுத்தினவர்.. அது பாதிதான் உண்மை. நான் விமர்சகர்தான். அது யூரோப்பில. இங்க விமர்சகர் கிடையாது. ஏன் சொல்லும்” என இவனது முகத்தை பார்த்தார்.

இவனுக்கோவெனில் ஒன்றும் விளங்கவில்லை. இன்றைக்கு முழுவியளம் சரியில்லை என்பது மட்டும் விளங்கியது. சிரித்துக் கொண்டிருந்தான்.

“நான் இஞ்ச விமர்சகர் கிடையாது. மாற்றுகருத்தாளன்”

இவனிற்கு தலைசுற்ற தொடங்கியது. மாற்றுஇயக்கம் என்பதை அறிந்திருந்தவன், மாற்று கருத்தாளன் என்பதை அறிந்தேயிருக்கவில்லை. அனேகமாக மாற்றுஇயக்கத்திற்கு சப்போர்ட்டான ஆட்களை அப்படி சொல்கிறார்கள் போல என நினைத்துக் கொண்டான். தமிழில் தனக்கு தெரியாமல் இத்தனை சொற்கள் உள்ளனவே என ஆச்சரியப்படவும் தொடங்கினான்.

அணங்கன் கதையை வேறு திசைக்கு மாற்றுவதற்கு முயன்றிருக்க வேண்டும். “அதுசரி.. முழுக்க பிடிச்சுப் போட்டுத்தான் நிற்பாட்டுவியள் போல. பொடியள் ஆக்ரோசமாக சண்டை பிடிச்சுக் கொண்டு போறாங்கள். நான் நினைக்கிறது சரியென்றால்” என பீடிகைபோட்டவர், சில விநாடிகள் மௌனமாக இருவரது முகங்களையும் உற்றுபார்த்தார். கண்களை விரித்து தலையை மேலும்கீழும் ஆட்டியபடி “இந்த சண்டையின்ர முடிவில் உலகத்தில் புது சுதந்திரநாடொன்று தோன்றும். வன்னியின் சிற்றாறுகளையும் குளக்கட்டுகளையும் ஒட்டி உருவான சின்னசின்ன பட்டினங்களிலிருந்து உருவான தமிழ்வீரமும், தியாகமும் இதனை சாத்தியப்படுத்தியுள்ளது. ஒரு யுகமாக அகதியாக அலைந்து

திரிந்தவர்கள் எழுதும் புதிய வரலாறிது. பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டதே நடைபெறுகின்றது. அதிகமேன், காசியண்ணை சொன்னதே நடைபெறுகின்றது" என உதடுகளை விரிக்காமல் கண்களை விரித்து சிரித்தார். இவனும் சிரித்தான்.

பிறகு மெதுமெதுவாக கதை சூடுபிடிக்க தொடங்கியது. பேச்சின் இடையே, வன்னியன் இயக்கம் பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினார். பயிற்சி முகாம்களில் மூளை சலவை செய்யப்படுகிறதா, கரும்புலிகளிற்கு போதைமருந்து வழங்கப்படுகிறதா, சண்டைக்கு போக முதல் சாராயம் தரப்படுமா என்றெல்லாம் கேட்டார். இவன் விழுந்துவிழுந்து சிரித்து கொண்டிருந்தான். அவர் ஒரு மாதிரி பார்க்க, "இல்லையண்ணை.. இரண்டேயிரண்டு சன்லைற் சவுக்காரம்தான் மாத பட்ஜட். அதில உடுப்பே சலவை செய்ய காணாது. பிறகெங்க மூளை சலவை செய்யிறது" என்றான்.

முதலாவது சந்திப்பில் அணங்கனுடன் அவ்வளவு சகஜமாக இவன் கதைத்திருக்கவில்லை. அப்பொழுது கதைக்காமல் விட்ட பல விடயங்களை இப்பொழுது கதைத்தான். அவரிடம் கேட்டுவிட வேண்டுமென மனதிற்குள் கிடந்து அரித்து கொண்டிருந்த விசயமொன்றிருந்தது. அது பற்றி விபரமாக கதைத்தான். அதாவது, இன்னும் ஐம்பது வருடமென்றாலும் போராட்டம் வீரியமாக நடக்குமென அவர் எழுதியது இவனிற்கு குழப்பமாக இருந்தது. இயக்கம் திரும்ப திரும்ப சொல்ற விசயம், நாங்கள் தலைவரின்ர காலத்தில தமிழீழத்தை எடுத்தால்தான் உண்டு. அல்லது கதை கம்மாரிசாகி விடும். ஆரம்பத்தில், இரண்டாயிரத்தில் தமிழீழம் கிடைத்துவிடும் என்ற பரவலான அபிப்பிராயமிருந்தது. ஆனால் கிடைக்கவில்லை. அதனால் ஒன்றும் பாதகமில்லை. இப்பொழுதும் வெற்றியின் விளிம்பில்தான் நிற்கிறோம். இந்தாளின் கதைப்படி பார்த்தால், இன்னும் ஐம்பது வருசம் போராட்டம் இழுபடுமென்றால், தலைவர் நூறு வயதிலும் ஓடியாடி திரிய வேணுமே. ஆனாலும் அரசியல் ஆய்வாளரொருவர் சும்மா எழுத மாட்டார் அல்லவா. ஏதாவது அரசியல் பொருளாதார காரணங்கள் இருக்கலாமென நினைத்து, காரணத்தை கேட்டான். அணங்கன் வேறுவிதமாக கதைத்தார்- "அப்படி எழுதியதற்கு வலுவான காரணங்களுண்டு. ஐம்பதல்ல அறுபது வருடங்களிற்கும் இந்த போராட்டம் தாக்கு பிடிக்கும்" ஏனெனில் அவ்வளவு காலத்திற்கும் தலைவர் உயிர் வாழ்வார்" என புன்னகைத்தார். தலைவர் அவ்வளவு காலம் வாழ்வார் என்பது இவனிற்கும் சந்தோசமாகதான் இருந்தது. அந்த சந்தோசத்திலிருந்து மீள்வதற்குள்ளேயே, குஞ்சனை தெரியுமா என கேட்டார். எந்த குஞ்சனை கேட்கிறார் என புரியாமல் பார்க்க, இவனது பிரிவில் இருந்த குஞ்சன் என, ஆளடையாளங்களை சொன்னார்.

நன்றாக தெரியுமென்றான். குஞ்சனும் இவனும் நீண்ட காலமாக ஒன்றாக இருந்தார்கள். குஞ்சன் நல்ல பொடியன். ஆனால் மூதேசி. ஒரேயொரு கெட்ட குணம், வாய் ஓயாமல் கதைப்பான். வாய் ஓயாமல் கதைக்க விசயமும் வேணுமே. இடையிடையே வாய்க்கு வந்த மாதிரியெல்லாம் கதைத்து விடுவான். இப்பிடித்தான் ஒரு முறை, அவனது உறவினரொருவரின் மரணவீட்டிற்கு இருவரும் போயிருந்தனர். இவனை முன்னால் வைத்துக் கொண்டே வயதானவரொருவருக்கு கதையளந்து கொண்டிருந்தான். வாரமொருமுறை தலைவர் இரவில் மாறுவேடமிட்டு நகர்வலம் வருவார், கூட்டங்களில் கலந்து கொள்வது ஒரிஜினல் தலைவர் இல்லை. சமநேரத்தில் அவரால் எட்டு இடங்களிற்கு சமூகமளிக்க முடியும். ஏனெனில் அப்படி வருவதெல்லாம் ரூப்ளிகேற் தலைவர். அவரை போன்ற சாயலுடைய எட்டுபேரை அங்கே வைத்துள்ளார்கள் என. இரண்டு வருசத்துக்கு முதல் அவனிற்கு சின்ன பிரச்சனையொன்று வந்தது. சின்ன பிரச்சனையென்றும் சொல்ல முடியாதுதான். இயக்கம் அதனை பெரிய பிரச்சனையாகத்தான் பார்த்தது. தன் மீதிருந்த "கறளை" தீர்த்து கொள்ள, பொறுப்பாளர் செய்த சூழ்ச்சி என அவன் சொல்லி திரிந்தான். இறுதியில் பிரிவு மாறச் சொல்லி கேட்கப்பட அவன் மறுத்துவிட்டான். வீட்டிற்கு போகுமாறு அனுப்பிவிட்டார்கள். பிரிவுமாறச் சொல்லி கேட்கப்படுவதற்கு முன்னரான ஒன்றரை வருடங்களும் காலில் சங்கிலியிடப்பட்டு அடைத்து வைக்கப்பட்டிருந்தான்.

குஞ்சன் தன்னிடம் சொன்ன தகவல்களின் அடிப்படையிலேயே அந்த கட்டுரையை எழுதியதாக சொன்னவர், "தலைவர் அவ்வளவு காலமும் உயிர்வாழ்வார் என நம்புகிறன். ஏனெனில் அவர் இரவில் பத்து இடியப்பங்களைதானே சாப்பிடுகிறாராம். உணவுகட்டுப்பாடு ஆயுளை நீட்டிக்க நல்ல வழி. காலையில் நடக்கிறாராம். காற்றோட்டமாக உட்கார்ந்திருக்கிறாராம். சனிக்கு சனி எண்ணை தேய்த்து குளத்தில் நீச்சலடிக்கிறாராம்" போராளிகளுடன் மகிழ்ச்சியாக இருக்கிறாராம்.. இப்படியான சூழலில் வாழும் மனிதனொருவன் நீண்டகாலம் உயிர்வாழ்வார் என நம்பலாம். அதனால்தான் அவ்வளவு காலமும் போராட்டம் நீடிக்கும் என எழுதினேன்" என்றார்.

இவ்வளவற்றையும் கேட்டபடி ஆச்சரியம் தீராமல் உட்கார்ந்திருந்தான். தனக்கு ஏன் இப்படியெல்லாம் தோன்றவில்லையென்ற கவலையும் வராமலில்லை. விரைவில் தானும் ஒரு கட்டுரை எழுதிபார்த்துவிட வேண்டுமென்ற ஆசை கிளர்ந்தது. முடியும் என்றுதான் நம்பினான்.

இப்படியாக கதை விரிந்து விரிந்து சென்று கொண்டிருந்தது. இதற்குள் இன்னொன்றையும் இரகசியமாக கவனித்து கொண்டான். வன்னியன் இவர்கள் கதைப்பதை மிக அக்கறையாக அவதானித்து கொண்டிருக்கிறார். என்றாலும் இவன் வெட்கப்படாமல் பலதையும் பத்தையும் கதைத்தான். முக்கியமாக ஒரு மாற்றுகருத்தாளனை முன்னால் வைத்துக் கொண்டு, வெட்கப்பட்டுக் கொண்டிருந்து தலைவரின் மானத்தை வாங்க விரும்பவில்லை. சற்றே குரலை உயர்த்தி, கதைக்கத் தொடங்கினான்.

சந்திரிக்கா எவ்வளவு முட்டுக்கட்டை போட்டாலும், எல்லாவற்றையும் உடைத்துக் கொண்டு முன்னேறி வெற்றியின் விளிம்பிற்கு வந்துவிட்டோம். சந்திரிக்காவின் இரும்பு கோட்டையான ஆனையிறவையும் வீழ்த்தி, தமிழீழத்திற்கான நுழைவாயிலில் நிற்கின்றோம். இப்பொழுது பாருங்கள், யாழ்ப்பாணத்திற்கான பாதையை திறக்கவிடாமலிருந்த சந்திரிக்கா தலைவரிற்கு முன்னால இறங்கிவந்திட்டா. ஏ9 வீதியும் திறக்கப் போகிறது என சொல்லிக் கொண்டிருக்க ஆவேசம் வந்தவராக அவனை நோக்கி விரலை நீட்டி "ஸ்ரொப்.. ஸ்ரொப்" என்றபடி துள்ளியெழுந்தார்.

சட்டென நிதானமிழந்து பின்னர் சுதாகரித்திருக்க வேண்டும். நீட்டிய விரல் நடுங்கிக் கொண்டிருந்தத. மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கியத. கண்களை மூடிக் கொண்டார். நிதானத்திற்கு திரும்புவதற்காக இருக்கலாம். இப்படியொரு நிலையில் அவரை பார்க்க, ஏதோ நாடகங்களில் நடிப்பவரைப் போல தோன்றியது. உடனடியாக கோபம் தணிந்திருக்க வேண்டும். எதுவும் பேசாமல் திரும்பவும் உட்கார்ந்து கொண்டார்.

இவனிற்கு மண்டைக்குள் சுள்ளென்று கோபம் ஏறிவிட்டது. வரிப்புலி உடுப்போட இருக்கிற போராளியொருவனிற்கு விரலைநீட்டிக் கொண்டு அடிக்க வந்திருக்கிறார். பொறுப்பாளரே போராளிக்கு அடிக்க கூடாதென தலைவர் கடுமையான ஓடர் போட்டிருக்கிறார். இந்த கிழவனின் உறண்டல் வேலைகளிற்கு சும்மா விடக்கூடாதென நினைத்தான். அலகை பொத்தி ஒன்று போடலாமா என்று யோசித்துவிட்டு, போராளிகள் ஒழுக்கமானவர்களாக இருக்க வேண்டுமென்ற இயக்கத்தின் ஓடரை மனதில் கொண்டு சாந்தமானான்.

வன்னியன் கண்களை திறக்கவேயில்லை. கதிரையில் நன்றாக உடலை பொதித்து உட்கார்ந்து அண்ணாந்து கூரையை பார்த்து கொண்டிருந்தவர், பெருமூச்சொன்று விட்டபடி, "ஆணாதிக்கமும், பாசிசத்தின் கூறுகளும் எல்லா மட்டங்களிலும் ஆழஊடுருவி சிதைக்கின்றன" என முணுமுணுத்தார்.

அவர் கதைக்க தொடங்கிய பின்னரும் உட்கார்ந்திருந்தால், கட்டாயம் அவரிற்கு தான் அடித்து விடுவேன் என நம்பினான். வந்த இடத்தில் எதற்கு வீண்பிரச்சனைகள் என புறப்பட தயாரானான். முற்றத்தில் நின்ற மோட்டார்சைக்கிளை ஸ்ரார்ட் செய்ய, அணங்கன் பின்னால் ஓடிவந்தார். நடந்த சம்பவங்களிற்காக தனது வருத்தத்தை சொல்வதற்காக இருக்கலாம். தனக்கொரு சந்தேகமிருப்பதாகவும் அதனை தீர்த்து வைத்துவிட்டு செல்லுமாறும் கேட்டவர், தலைவர் பத்து இடியப்பங்கள்தான் சாப்பிடுவாரா என்று கேட்டார். இவன் ஓம் என்றும் இல்லாமல், இல்லையென்றுமில்லாமல் ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு வந்துவிட்டான்.

அதற்கு பின்னால் வந்த இரண்டுநாளும் இவனிற்கு மண்டையை குடைந்து கொண்டிருந்தது. யோசிக்க யோசிக்க வன்னியனின் போக்குவரத்துகள் அவ்வளவு நல்லதாக இருக்கவில்லையென்பது பட்டது. சந்திரிகா பற்றி கதைத்தால் கோபப்படுகிறார், ஆழஊடுருவி சிதைத்தழிக்கிறதென்கிறார். ஆழஊடுருவும் படையணிதான் இப்பொழுது இயக்கத்திற்கு பெரிய பிரச்சனையாக இருக்கிறது. இந்த மனுசனிற்கு அவர்களுடன் தொடர்பிருக்குமோ? இயக்கத்தால தனக்கு பெரிய பிரச்சனையிருக்குதுதான், ஆனாலும் சுளிச்சுக் கொண்டு வந்து நடு வன்னிக்குள்ள நிற்கிறன் என ஆமி இன்ரலிஜன்ற் மாதிரி கதைக்கிறார். ஒன்றில் லூசனாக இருக்க வேணும், அல்லது விசயகாரனாக இருக்க வேணும். எது என்பதுதான் தெரியவில்லை. இதற்குள் தன்னை மாற்றுகருத்தாளன் என்று வேறு பகிரங்கமாக சொல்கிறார். இந்தாள் இந்தியனின் றோவாக இருக்குமோ என்றும் குழம்பினான்.

இயக்கம் கண்ணுக்குள் எண்ணை விட்டுகொண்டு கண்காணிக்கிற புதுக்குடியிருப்புக்குள்ளயே வந்து தங்கியிருக்கிறதை பார்க்க, தலைவரின்ர இருப்பிடத்தைதான் அறியிறதுக்கு முயல்கிறார் என்ற சந்தேகமும் வந்தது. அந்த புதுக்குடியிருப்பு கடைகாரி மூலம் செய்த பிளான் பிழைத்தததற்கு பிறகு, இந்தாள் மூலம் ஆரம்பித்திருக்கிறார்களோ? அப்படியிருந்து, அவர்கள் தகவல் அறிந்து கொண்டால் நானும் குற்றவாளியாகிவிடுவேனல்லவா? விசயத்தை அறிந்து இயக்கம் இவர்களை தூக்கினால் என்னையும் தூக்குமல்லவா? பரதன் மாதிரி தெரியாமல் துரோகத்திற்கு துணைபோன குற்றவாளியாகி விடுவேனா?

இதையெல்லாம் யோசிக்க யோசிக்க பீதியும் நடுக்கமும் ஏற்பட்ட அதேவேளை, புதியபுதிய யன்னல்களும் அவனுள் திறந்தபடியே இருந்தன. அப்படியானால் அணங்கன்? அவரும் உடந்தையா? கடாபியண்ணையுடன் நிற்கிறேன் என்பது தெரிந்ததனால்தான் தன்னை வீட்டுக்கு வரச் சொல்லி, அந்த உறண்டல் மனுசனுடன் கதைக்க ஏற்பாடு செய்தாரா? இந்த கணக்குகள் சரியாக இருந்தால், நான்தான் எவ்வளவு பிழை செய்துவிட்டேன். அரசியல்துறைகாரர் கலர்ஸ் காட்டுகிறார்கள் என, நானும் உள்ளதை சொல்லி ஈழநாதம் அலுவலகத்திற்கு போனது எவ்வளவு பெரிய பிழை. இதெல்லாம் இயக்கத்திற்கு தெரிந்தால் என்ன நடக்கும்? இரகசியம் பாதுகாக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டை மீறியிருக்கிறேனே என தலையை பிய்த்து கொண்டு அலைந்தான்.

அன்று முழுவதும் தூக்கம் வரவில்லை. இயக்கத்திற்கு மாபெரும் துரோகம் செய்துவிட்டேன் என்ற குற்ற உணர்ச்சியில் புளுங்கியபடி கிடந்தான். இவங்கள் இப்பிடி எத்தனை இயக்கப்பொடியளை ஏமாற்றி கதைவிட்டு இரகசியங்களை அறிந்தார்களோ, தன்னைகூட பின்தொடர்ந்திருக்கலாம். முகாமின் பாதைகளை தெரிந்து கொண்டிருக்கலாம். நாளைக்கு

அண்ணை போய்வாற பாதையில் கிளைமோர் வைத்தார்கள் என்றால் என்ன முடிவு என குழம்பியபடி படுத்திருந்த போதுதான் அந்த ஐடியா தோன்றியது.

இந்த விசயத்தை இயக்கத்திடம் சொல்வதில்லை. நான் விட்ட பிழைக்கு நானே பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டும். தனியாக சென்று அனைத்தையும் முறியடிக்க வேண்டும். பிறகு வந்து கடாபியண்ணையிடம் சொல்லி மன்னிப்பு கேட்பது. மிச்சத்தை அவரே முடிவெடுக்கட்டும். சின்ன பிழை விட்டிருந்தாலும் பரவாயில்லை. பனிஸ்மன்ற் தருவார். எனக்கொரு பாடமாக அமையட்டும். இப்படியான விசயங்கள் போராளிகளை புடம்போட உதவும். எது எப்படியோ இரண்டு காட்டி கொடுக்கும் துரோகிகளை பிடித்து கொடுத்தால் இயக்கத்திற்கு நல்லதுதானே. எனது சிறு தவறு பேரழிவொன்றை தடுக்கப் போகிறது.

மறுநாள் காலையில் எழும்பிய பொழுது இவனில் ஒரு நிதானம் தென்பட்டது. எல்லா விடயங்களையும் மெதுவாகவும் நிதானமாவும் செய்தான். ஒவ்வொரு அடியையும் நிதானமாக எடுத்து வைத்தான். ஒவ்வொரு கண்ணிமைத்தலையும் உறுதியாக இமைத்தான். ஏதோ ஓர்மம் புகுந்திருக்க வேண்டும். மிக நிதானமாகவும், உறுதியாகவும் புறப்பட்டான். ஒருவேளை தான் கரும்புலியாக இருந்திருந்தால், வெடிக்கும்நாளில் இப்படித்தான் செயற்பட்டிருப்பேன் என தனக்குள் நினைத்தும் கொண்டான். வழங்கல்பகுதி முகாமிற்கு செல்வதாக பொறுப்பாளரிடம் கூறிவிட்டு புறப்பட்டான். புறப்படும் பொழுது மறக்காமல் பிஸ்ரலை எடுத்து தோள்பைக்குள் வைத்து கொண்டான். ஏதும் பிசகென்றால் வன்னியனை சுட்டென்றாலும் பிடிப்பதென்ற முடிவுக்கு வந்திருந்தான்.

நேராக அணங்கன் வீட்டிற்கு சென்றான். தோள்பையை கையில் வைத்து கொண்டான். வாயை பாதி திறந்து, கையால் மூடி வைத்து கொண்டான். அவசரமெனில் சுணங்காமல் பிஸ்ரலை எடுக்க வேண்டுமல்லவா. இவனை கண்டதும் அணங்கன் ஓடி வந்தார். ஓடிவரும்பொழுது நெற்றியில் வெடிவைத்தால் எப்படியிருக்குமென யோசித்து பார்த்தான். “நீர் போனது எனக்கு சரியான கவலை. திடீரென்று இப்பிடி போயிருக்கத் தேவையில்லை. இவங்கள் உப்பிடித்தான். சும்மா கதைச்சு கொண்டிருப்பாங்கள்.. விசயமில்லை” என்றவர் இவனை உள்ளே கூட்டிப் போய் உட்கார வைத்தார்.

பத்திரிகைகளில் எழுதும் ஆட்கள் வலு விண்ணர்களாக இருக்க வேண்டும். இப்படி கதைத்து கதைத்தே ஆட்களை கவிழ்த்து விடுவார்கள். நிதானத்தை இழந்துவிட கூடாதென மனதிற்குள்ளாக சொல்லிக் கொண்டிருந்தான்.

அவருடன் மெல்லமெல்ல இவனும் கதை குடுத்து பார்க்க முயன்று கொண்டிருந்தான். நாட்டு பிரச்சனை எந்த திசையில் போகும். தலைவரின் அடுத்த அடி எப்பிடியிருக்கும். தமிழீழத்தை புத்தளத்துடன் நிறுத்தலாமா நீர்கொழும்புவரை நீட்டலாமா என்ற மாதிரி கதைத்தான். அடுத்த இரண்டு வருடங்களில் தமிழீழம் உறுதி என அணங்கன் அடித்து சொன்னார்.

பேச்சின் இடையில் வன்னியன் எங்கேயென கேட்டான். அவர் பெரிதாக சிரித்துவிட்டு, அந்தாளின்ர பழைய கூட்டென ஒருவர் மாட்டுப்பட்டிருக்கிறாரெனவும், இருவரும் தவறணை தவறணையாக ஏறி கள்ளுக் குடித்துவிட்டு றோட்டு றோட்டாக விழுந்து கிடக்கிறார்கள். இயக்கத்தை பற்றி செய்ய வெளிக்கிட்ட ரிசேச்சும் தொடங்கின மாதிரியே நிற்குதென மேசையில் கிடந்த சிறிய குறிப்பு புத்தகத்தை காட்டினார்.

இவனிற்கு சட்டென மூளைக்குள் ஓராயிரம் மின்னல் வெட்டியது. பொக்கிசம் கண்முன்னால் கிடக்கிறது. இதனை எடுத்துவிட்டால் சரி. துரோகிகளை கூண்டோடு அள்ளலாம். எப்படி எடுப்பது என்பதுதான் பிரச்சனை. பிஸ்ரலை அணங்கனின் தலையில் வைத்து எடுக்கலாம். அப்படி எடுத்தால், பொக்கிசத்தை கொண்டு போகும் போது ஆளையும் கொண்டு போக வேண்டும். பொக்கிசத்தை மட்டும் கொண்டுபோனால் கிடைத்த அவகாசத்தில் எல்லோரும் தப்பிவிடலாம். ஆனால் கண்டபடி சனத்தில் கைவைக்க முடியாது. அதுவும் இவையெல்லாம் தங்கள் பிரிவின் வேலையில்லையென நிறைய யோசித்து ஒரு முடிவிற்கு வந்தான். அதாவது குறிப்பு புத்தகத்தை அணங்கனிற்கு தெரியாமல் எடுப்பது.

கதைத்து கொண்டிருந்துவிட்டு இவனிற்கு தேனீர் எடுத்து வர உள்பக்கமாக அவர் போனபோது சட்டென எழுந்து, குறிப்பு புத்தகத்தை திறந்தான். முதல்தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் கொஞ்சம் எழுதப்பட்டிருந்தது. இப்பொழுது அதனையெல்லாம் வாசிக்க அவகாசமில்லை. சத்தம்வராமல் தாளை கிழித்து நான்காக மடித்து சட்டை பைக்குள் வைத்து கொண்டான். பிறகு எதுவும் நடவாததை போல கதிரையில் உட்கார்ந்து ஜன்னலிற்கு வெளியில் பார்த்துக் கொண்டிருந்தான்.

அணங்கன் தேனீருடன் வந்தார். இவனிற்கு அளவிற்கதிகமாக வியர்க்கத் தொடங்கியது. திடீரென எதற்காக இப்படி வியர்க்கிறதென அவர் அதிசயப்பட்டார். சூடாக எதையாது பருகினால் தனக்கு வியர்ப்பது வழக்கமென பொய் சொன்னான். சற்று நேரத்திலெல்லாம் விடைபெற்று புறப்பட்டான்.

மோட்டார்சைக்கிளில் ஏறியதில் இருந்து மனது பரபரத்தபடியேயிருந்தது. துரோகிகளின் திட்டத்தை படித்து தெரிந்து கொள்வதில் தாமதம் ஏற்படுவதை தாங்கி கொள்ள மனம் நிறைய சிரமப்பட்டு கொண்டது. விரைவாக மோட்டார் சைக்கிளை முறுக்கினான்.

ஆளரவம் குறைந்த இடமொன்றில் மோட்டார்சைக்கிளை நிறுத்தினான். கைகள் பரபரக்க சட்டைக்குள்ளிருந்த காகிதத்தை எடுத்து பிரித்தான். பரபரப்பில் காகதிதத்தை விரிக்க சற்று சிரமப்பட வேண்டியிருந்தது. சிறிய எழுத்துக்களில் தாளின் அரைபகுதியில் எழுதப்பட்டிருந்தது.

தமிழீழ விடுதலைபுலிகள் என தலைப்பிட்டு தடிப்பாக அடிக்கோடிடப்பட்டிருந்தது. அதன் கீழ், தலைவர்- பிரபாகரன் என எழுதியிருந்தது. அடுத்ததாக, இரண்டாவது தலைவர் என எழுதி இடைவெளிவிடப்பட்டிருந்தது. குறிப்புகள் என தலைப்பிடப்பட்டிருந்த பகுதியில் ஒரேயொரு குறிப்பு மட்டும் எழுதப்பட்டிருந்தது. அது பின்வருமாறு இருந்தது.

“நான் பத்து வருடங்களின் முன்னர் எழுதியதைப் போலவே, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு வெள்ளாள இயக்கம் என்பது சந்தேகத்திற்கிடமின்றி இப்பொழுது நிருபணமாகிறது. ஏனெனில் அவர்கள் யாழ்ப்பாணத்திற்கான தரைவழி பாதையாக வெள்ளைகாரன் போட்டு வெள்ளாளரிடம் ஒப்படைத்த யு9 வீதியைதான் திறக்க முயல்கிறார்கள்”

இவன் துண்டை கசக்கி எறிந்துவிட்டு, காறித்துப்பிவிட்டு புறப்பட்டான். ■

# SAMMY YATIM -- கொலை?

## அதுகள் உதுகள்!

### பொன் நமு




SAMMY YATIM - டொராண்டோவை கடந்த வாரங்களில் உலுக்கிவிட்ட சமீபத்திய கொலைகளில் ஒன்று. இன்றும் இது கொலையா அல்லது பொலிசாரின் நடவடிக்கை சரியானதா என முடிவுகள் வருவதற்கு முன்னரே சமூகத்தின் கண்களில் இந்த உயிரிழப்பு தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று என்ற நீதி வழங்கப்பட்டு வருகின்றது.

டொரோண்டோ போலீஸ் செய்தது குற்றமா? இது கொலையா? சமூகத்தின் வாயில் இன்றும் தொடர்ந்து வருகின்ற விவாதம்.

நாம் இந்த நகரத்தில் குடியிருக்கையில் எத்தனை கொலைகளைச் சந்தித்தோம். அவைகள் எவ்வாறு கொலைகள் ஆயின? அவை ஒவொன்றும் கொலையாளி, கொலைக்குற்றம் புரிந்தவர், சட்டம் ஒழுங்கை பராமரிக்கும் போலீஸ் துறை என மூன்று பிரிவினரை கொண்டதை நாம் அறிவோம்.

ஆனால் SAMMY YATIM என்ற இளைஞரின் உயிர் பறிப்பு சட்டத்தை பாதுகாக்க வேண்டிய போலீஸ் துறையால் நடாத்தப்பட்டு உள்ளது. அதற்காக போலீஸ் என்னவோ கொலை வெறியில் நடாத்திய குற்றம் என நாம் முடிவுக்கு வந்து விடுவதும் தவறு.

மறுமுனையில் இந்த கொலைக்கு உள்ளாகிய இளைஜன் கொலையுண்ட அன்று இரவு நடந்து கொண்ட நிலைமையில் வேறு ஒரு பேருந்து பிரயாணி பாதிக்கப்பட்டிருந்தால் நாம் இதே போலீஸ் துறையை கடுமையான நடவடிக்கை எடுக்கத் தவறியதற்காக கண்டிக்க முனைந்திருப்போம்.

ஆனாலும் இந்த நடவடிக்கை இரண்டு விடயங்களை எமக்கு சொல்கின்றது. ஏனைய நாட்டு நகரங்களில் இவை நடந்திருந்தால் நகரமே கலவரங்களால் கலங்கி இருக்கும். நாம் டொராண்டோவில் அமைதியோடு கருத்துப் போர் புரிகிறோமே தவிர தெருவுக்கு வந்து சட்டம் ஒழுங்கை குழப்பவில்லை.

அடுத்தது இறந்தவர் யார் அவரது இனம் என்ன என்பதைக் குறித்து அதிகமாகச் சர்ச்சை ஏற்படவில்லை. இறந்தவர் எம் நகரத்து வாசி என்றும், எமது போலீஸ் துறை செய்த நடவடிக்கை சரியா தவறா என்பதையே விவாதிக்கின்றோம்.

இந்த உயிரிழப்பு பற்றி விசாரணை நடாத்த தற்போது விசேட விசாரணைக் குழுவிடம் இது விடப்பட்டு இருக்கிறது. அந்தக் குழுவின் முடிவுகள் வரும்போது இந்த நகர வாசிகள் அனைவரையும் இக் குழுவின் முடிவுகள் நிட்சயம் திருப்திப்படுத்தாது.

மாறாக நாம் அமைதியாய் முடிவுகளை சந்தித்து, மாற்றம் விரும்புவோர் தொடர்ந்தும் அதற்காக உழைக்க முன்வரட்டும்.

ஒன்று மட்டும் உண்மை. இந்த உயிரிழப்பு தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதை நாம் அனைவரும் புரிவது நல்லது.

சமாதானத்திற்கான கனடியர்கள்...

மக்கள் மத்தியில் இத்தேவையின் முக்கியத்துவத்தைக் கருதி, “சமாதானத்திற்கான கனடியர்கள்“ தனது செயற்பாடுகளைத் துரிதப்படுத்தத் தீர்மானித்துள்ளது. இதன் அடிப்படையில் எமது அங்கத்தவர்கள் இங்கு வாழும் இலங்கையர்களுடன் கடந்த சில வாரங்களாகத் தொடர்பு கொண்டு, அவர்களது கருத்துக்களை உள்வாங்கி, ஓர் வேலைத் திட்டத்தைத் தயார் செய்யும் முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளோம். பூபாளம் வாசகர்களின் உயிரோட்டமான பங்களிப்பை வரவேற்கிறோம்.

ratnamgratnam@gmail.com

(416) 937 5985



# பரம் ஜி பார்வையில்...

## விதிகளை மீறும் விதிகள்

**ஜக்கிய அமெரிக்காவிற்கு அடிமைகளாக ஆபிரிக்காவில் இருந்து அழைத்து வரப்பட்ட கருப்பினத்தவர்கள் அந்த மண்ணில் தமக்கு மறுக்கப்பட்டு வந்த மனித உரிமைகளை பெற்று இயல்பு வாழ்க்கையை வாழும் வகையில் மார்ட்டின் லூதர் கிங் போன்ற பல கருப்பினத்தலைவர்களின் அயராத பல ஆண்டு கால உழைப்பின் பயனாக இன்று பல முன்னேற்றங்களை அடைந்திருக்கின்றனர்.**

போர்க்களம் தவிர்ந்த கொலைகள் தண்டனைக்குரியவை என்பது சமூக நியதி. ஆனால் சில வேளைகளில் அந்நியதியை விஞ்சும் வகையில் கொலை குற்றவாளிகள் என நம்பப்படும் பலர் நீதி துறையில் இருக்கின்ற சட்டங்களின் உதவி கொண்டு தண்டனை பெறாமல் காப்பாற்றப்படுவதையும் நாம் அடிக்கடி காணுகிறோம். சட்டத்துறையில் விதிகளை மீறவல்ல பல விதிகள் இருப்பதனாலேயே அவை சாத்தியமாகின்றன.

நீதி பரிபாலனங்களில் உலகின் முன்னோடியாக விளங்கும் வல்லரசு நாடான ஜக்கிய அமெரிக்காவின் புளோரிடா மாநில நீதி மன்று ஒன்று அண்மையில் வழங்கிய ஒரு கொலைக்குற்றம் தொடர்பான தீர்ப்பானது, அந்நாட்டின் சில மாநிலங்களில் நடைமுறையில் இருந்து வரும் நீதி பரிபாலன விதிமுறை சட்டங்கள் சிலவற்றை மாற்றி அமைக்க வேண்டிய தேவைகளின் கட்டாயத்தை மீளவும் உறுதிப்படுத்தி உள்ளது.

2012ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26ம் திகதி, புளோரிடா மாநிலத்தில் உள்ள சான்போர்டு நகரின் குடியிருப்பு பகுதி ஒன்றில் சுற்றுப்புற பாதுகாவலனான, வெள்ளையின ஜோர்ஜ் சிம்மர்மன் என்பவன், பதினேழு வயதே நிரம்பிய ட்ரேவான் மாட்டின் எனும் கருப்பின நிராயுதபாணியை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்திருந்தான். சிம்மர்மனுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கின் பஞ்சாயத்தில் அமர்த்தப்பட்டிருந்த பெரும்பான்மை வெள்ளையின பெண் அங்கத்தவர்களால் சந்தேக நபரான ஜோர்ஜ் சிம்மர்மன் குற்றமற்றவனாக இனம் காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டான்.

ட்ரேவோன் மார்ட்டின் கருப்பினத்தவன், சுற்றுப்புற காவலன் ஜோர்ஜ் சிம்மர்மனுக்கு கருப்பினத்தின் மீதிருந்த காழ்ப்புணர்வு காரணமாக இருந்த வீணான சந்தேகங்களால் ட்ரேவோனை பின்தொடர முற்படுமுன் தொலைபேசியில் அழைத்து போலீஸ் உடன் தனது நடவடிக்கைகள் பற்றி தெரியப்படுத்துகையில், ட்ரேவோனை பின் தொடரவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டிருந்தும் அவற்றை கருத்தில் கொள்ளாது பின்தொடர்ந்து சென்று தகராறினை உருவாக்கியதன் விளைவால் நிராயுதபாணி ட்ரேவோன் சுட்டு கொலை செய்தமை எப்படி நீதியாகும் என்பதே நடுநிலமையாக சிந்திப்பவர்களதும் பெருமளவில் கருப்பினத்தவர்களினதும் விடை காண முடியாத கேள்வியாகவிருந்தது.

சுற்று சூழல் காவலனாக கடமையாற்றும் தனது குடியிருப்பு பகுதிக்குள் அடிக்கடி நடைபெற்று வரும் குற்ற செயல்களை, பெருமளவில் கருப்பினத்தவர்களால் செய்யப்படுபவை, தடுத்து அவற்றை அறவே இல்லாமல் செய்ய வேண்டும் என முனைப்புடன் செயல்பட்டு வந்த சிம்மர்மன், கொலை நடந்த அன்று மாலை, பொழுது சாயும் வேளையில், அப்பகுதியால் சந்தேகத்துக்கிடமாக நடந்து சென்று கொண்டிருந்த ட்றேவோன் மார்ட்டினை பின்தொடர்ந்து தனது கடமையை செய்யும் வகையில் விசாரிக்க முற்படுகையில் இருவரிடையிலும் ஏற்பட்ட தர்க்கம் கைகலப்பானது.

தன்மேல் வீணான சந்தேகம் கொண்டு பின் தொடர்ந்து வந்த சிம்மர்மன்மீது உண்டான கோபத்தில் ட்றேவோன் மார்ட்டின் ஜோர்ஜ் சிம்மர்மனை தாக்கி காயம் விளைவிக்க முற்பட்டபோது உண்டான மரண பயத்தில் தற்பாதுகாப்பு கருதி தன்னுடன் வைத்திருந்த கைத்துப்பாக்கியால் சிம்மர்மன் ட்றேவோனை சுட்டு கொன்றமை புளோரிடாவில் இருக்கின்ற தற்பாதுப்பு (stand your Ground) சட்ட விதிகளுக்கமைய இருப்பதனால் ஜோர்ஜ் சிம்மர்மன் குற்றமற்றவன் என்பதாக அப்பஞ்சாயத்து அங்கத்தவர்கள் தீர்ப்பளித்திருந்தனர்.

நீதி மன்றத்தில் இரு தரப்பினரும் வழங்கிய வாதப் பிரதிவாதங்கள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில், அம்மாநில நீதிபரிபாலன சட்ட விதிகளுக்கு அமைய ஜோர்ஜ் சிம்மர்மன் சுற்றவாளியாக காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டபோதும் வழக்கம்போல, அத்தீர்ப்புக்கு காரணம் இனப்பாகுபாடு பார்க்கும் வெள்ளை இனத்தவருக்கு சாதகமான சட்ட விதிகளும், அவ்வழக்கில் பஞ்சாயத்திற்காக அமர்த்தப்பட்டிருந்த வெள்ளையின பெண் அங்கத்தர்களும்தான் காரணம் என ஒரு சாராரும், முக்கியமாக கருப்பினத்தவர்கள், இல்லை அம்மாநிலத்தில் இருக்கின்ற சட்ட விதிகள்தான் அவனை விடுவித்தன என இன்னொரு சாராருமாக ஊடகங்களில் தர்க்கங்கள் புரிந்ததனை காணக்கூடியதாக இருந்தது.

காலம் காலமாக கருப்பு வெள்ளை இனத்தவர் இடையில் இருந்து வரும் வெறுப்பு உணர்வுகளை அதிகரிக்க வைத்து அதனால் பழிக்குப்பழி வாங்கும் உணர்வில் வன்முறை கலவரங்கள் வெடித்து நாட்டின் பல பகுதிகளிலும் அப்பாவிகள் கொல்லப்படவும் பொது சொத்துக்கள் தீக்கிரையாக வைக்கும் விதத்தில் அவ்வழக்கின் தீர்ப்பு இருந்த போதும், இம்முறை கருப்பினத்தவர்கள் முன்பு நடைபெற்றவை போன்ற மோசமான கலவர நிலமைகள் உருவாகி விடாமல் பார்த்து கொண்டதுடன் அமைதியான பேரணிகள் மூலம் தமது அதிருப்திகளை கண்ணியமாக எடுத்து சொல்லி தமது நாட்டில் இருக்கும் மோசமான சில சட்ட விதிகளில் மாற்றங்கள் கொண்டுவர வேண்டி அரசுக்கு தொடர்ந்து அழுத்தங்கள் கொடுக்கின்றன.

ஜக்கிய அமெரிக்காவிற்கு அடிமைகளாக ஆபிரிக்காவில் இருந்து அழைத்து வரப்பட்ட கருப்பினத்தவர்கள் அந்த மண்ணில் தமக்கு மறுக்கப்பட்டு வந்த மனித உரிமைகளை பெற்று இயல்பு வாழ்க்கையை வாழும் வகையில் மார்ட்டின் லூதர் கிங் போன்ற பல கருப்பினத்தலைவர்களின் அயராத பல ஆண்டு கால உழைப்பின் பயனாக இன்று பல முன்னேற்றங்களை அடைந்திருக்கின்றனர். ஆனாலும் வறுமை இருக்கும் இடத்தில் வயிற்று பிழைப்பிற்காக வன்மங்களும் இருக்கும் என்பதற்கு இணங்க கருப்பினத்தவர்கள் மத்தியில் பெருமளவில் நடைபெறும் குற்றச்செயல்களே அவ்வினத்திற்கு பாதகமாகவும் இருந்து விடுகின்றது எனலாம்.

ஒரு சமுதாயத்தில் செல்வமும் வறுமையும் இருப்பது சகஜமே. அவற்றிற்கு பல காரணங்கள் இருக்கலாம். விளையாட்டு மற்றும் கலைத்துறைகள் வழியாகவும் கல்வி மற்றும் கடும் உழைப்பின் துணை கொண்டும் இன்று கருப்பினத்தவர்கள் பொருளாதார சுபீட்சத்தினை பெறுமளவில் பெற்று முன்னேறுவதை நாம் அந்த மண்ணில் காணக்கூடியதாக இருக்கின்றது. அவற்றினை மூலதனமாக கொண்டு கருப்பு இனம் முழுவதும் முன்னேறுவதை கைவிட்டு இன்னமும் தமது இனத்திற்குள் பெருமனவில் இருக்கின்ற நியாயங்களற்ற குற்ற செயல்களுக்கு அடிமைத்தனத்தை ஆதாரமாக காட்டுவது கோழைத்தனம் என்பதனை அவர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.

ஜோர்ஜ் சிம்மர்மனை காப்பாற்றிய தற்பாதுகாப்பு சட்டத்தால் அதிகளவில் காப்பாற்றப்படுவது குற்ற செயல்கள் மலிந்து கிடக்கும் கருப்பின சமூகத்தவர்கள் தாம் என்பதாக புளோரிடாவில் எடுக்கப்பட்ட ஒரு புள்ளிவிபர கணக்கு அறியத்தருகின்றது. துர்ரதிர்ஸ்ட வசமாக நடந்து விட்ட ட்ரேவோன் மார்டினது கொலையினை தலைவிதியாக எடுத்து அதற்கு பிராயச்சித்தமாக சட்டத்துறையில் இருக்கின்ற பலவிதிகளை மீறும் விதிகளை பரிசீலித்து அநியாயமாக பறிக்கப்படும் பல மனித உயிர்களுக்கு நீதி கிடைக்கும் நிலை அங்கு வரவேண்டும்.

பார்வைகள் தொடரும்..

---

## தோழர் குமரனின் நினைவுகளை பகிர்தல் நிகழ்வு

மறைந்த தோழர் குமரன் (வி. பொன்னுத்துரை) அரம்ப காலங்களில் இலங்கை கம்யூனிச கட்சி (மாஸ்கோ பிரிவு), செந்தமிழர் இயக்கம், காந்தீயம் ஆகிய அமைப்புக்களில் செயற்பட்டவராகவும் பின்னர் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் அரம்ப கால உறுப்பினராகவும் அதன் மத்திய குழுவிலும் பங்காற்றியவராவார். இவர் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தில் நிகழ்ந்த உட்கட்சி போராட்டத்தில் முக்கிய பாத்திரத்தை வகித்து தள மாநாட்டை நடத்துவதற்கு காரணமாக இருந்தவர்களில் ஒருவர்.

அன்னாரின் நினைவுகளை பகிரும் நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காலம் : 18-08-2013 ஞாயிற்றுக் கிழமை மாலை 3.00 மணி

இடம்: GTA SQUARE MALL, 2nd Floor,
5215 FINCH AVE, SCARBOROUGH, ONT, M1S OC2, CANADA

தொடர்புகளுக்கு:

சீலன் : 416 804 8905 திலீபன் : 647 883 8859

போத்தார்: 514 827 8392

# இலக்கியத்தைப் பின்னும் கூட்டம்

**அசை**

**சிவதாசன்**

அமைதி! அமைதி! தலைப்பைப் பார்த்து அதீத கற்பனைகளுக்கெல்லாம் இடம் கொடுக்க வேண்டாம்.

சில வருடங்களுக்கு முன்னர் கனடாவில் தமிழ் எழுத்தாளர் ஒருவர் மாரடைப்பால் இறந்து போனார். "அவர் இறந்ததற்குக் காரணம் என்ன தெரியுமா?" என்று நண்பர் ஒருவர் கேட்டுவிட்டு பதிலையும், இயல்பான நகைச்சுவையோடு, அவரே சொன்னார். "எழுத்தாளர் தான் எழுதிய புத்தகத்தைப் புரட்டி வாசிக்கத் தொடங்கியதும் அவருக்கு மாரடைப்பு வந்து விட்டது".

சில நாட்களுக்கு முன் முக நூலிலும் நண்பர் ஒருவர் "எமது எழுத்தாளர்களில் பலர் வாசகரில்லா எழுத்தாளர்கள்" என்று சிலேடையாகக் குறிப்பிட்டிருந்தார்.

வாசிப்புப் பழக்கம் தமிழரிடையே அருகி வருகிறது என்று செய்தி வந்தால் அதற்கு காரணம் எழுத்தாளர்களும் தான். அதற்கு முக்கிய காரணம் நேர்மையான, துணிச்சலான, முதுகு சொறியாத விமர்சகர்கள் இல்லாமையே.

கைலாசபதி, சிவத்தம்பி காலம் ஈழத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு பொற்காலம் தான். மார்க்சீய இடதுசாரி அளவு கோலுக்குப் புறம்பானவற்றை அவர்கள் ஒதுக்கினார்கள் என்றொரு குற்றச்சாட்டு அவர்கள் மீது இருந்தது. இருப்பினும் அவர்களிடம் இந்த முதுகு சொறியும் பழக்கம் இருக்கவில்லை. நல்ல இலக்கியங்களுக்கு அவர்கள் உரைகல்லாக இருந்தார்கள். அதே போல மார்க்சீய முகாமுக்கு வெளியால் இருந்த விமர்சகர்களில் மு.தளையசிங்கமும் நேர்மையான, துணிச்சலான விமர்சகர். இவர்களது நெற்றிக்கண்களிலிருந்து தப்ப முடியாது என்பதற்காகவே பலர் எழுதவில்லை. இவ் விமர்சகர்கள் நல்ல நல்ல இலக்கியங்களையும், நல்ல எழுத்தாளர்களையும் மட்டுமல்ல நல்ல வாசகர்களையும் உருவாக்கித் தந்தார்கள்.விமர்சகர்கள் இல்லாத குறை இப்போது தெரிகிறது.

வார இறுதியில் மண்டபம் கிடைக்கும் என்பதை அறிந்த பின்னர் தான் அன் நாளைக் குறி வைத்து புத்தகம் எழுதி வெளியீடு செய்கிறார்கள். அச்சகத்தில் அவசரம் அவசரமாக இருபத்தைந்து பிரதிகளைக் கோணல் மாணலாக வெட்டி எடுத்து வந்து புதிய கனவான் ஆடையுடன் வந்திருக்கும் விற்பனை முகவரின் பணப் பொதியை அபகரிப்பதற்காக முதுகுகள் புண்ணாகும் வரை சொறிந்து - ஒரு புத்தகம் விடுகிறார்கள். எழுத்தாளரின் குடும்பம், ஆஸ்தான விசுவாசிகள், "சரியில்லை, கண்ட இடத்தில் முகத்தைச் சுளிப்பார்" என்பதற்காக முகத்தை காட்ட வரும் நித்திய மண்டபம் நிரப்பிகள் என ஒரு முப்பது பேர் வந்தாலே எழுத்தாளர் அடுத்த புத்தகத்துக்கான தலைப்பைக் குறித்துக் கொள்வார். தனது நூலைத் தானே வாசித்து சுய இன்பம் பெறுவதைத் தவிர தனது நூலை யார் வாசிக்கிறார்கள், எப்படியாக விமர்சிக்கப் படுகிறது என்பது பற்றிய எந்தவித அக்கறையும் இல்லாது அடுத்த புத்தகம் வெளியிடும் திட்டங்கள் தீட்டப்பட்டுவிடும்.

இலக்கியத்தைச் சமூக மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தக் கூடாதென்பதல்ல. அது நல்லதொரு கருவி தான். ஆனால் இத் தளங்களில் அது பொதுவாகவே சமூகத்தைக் கூறுபோடும் கூரிய ஆயுதமாகவே பயன்படுத்தப் படுகிறது.

நண்பர் சொன்னது போல பல வாசகர்கள் இன்னமும் உயிர் தப்பி வாழ்வதற்கு இப் புத்தகங்களை வாசிக்காமல் இருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

இந்த இலட்சணத்தில் இலக்கியச் சந்திப்புகள் வேறு! கழைக் கூத்தாடிகள் ஊர் ஊராக tour போவது போல இலக்கியத்தின் பேரில். நரை முடி- கதராடை- ஜோல்னாப்பை அடையாளங்களை வலிந்து வரித்துக்கொண்டு இச் சந்திப்புக்கு வருபவர்களில் பெரும்பாலோர் (இங்கு பாலினத்தைக் குறிக்கவில்லை) தங்களை activists (இந்த ஆங்கிலச் சொல்லுக்கு கூகிளின் மூலம் மொழி மாற்ற முயன்றேன். கிடைத்தது "செயல் திறனாளர்" !) ஆகவே இனங்காட்டிக் கொள்வார்கள். ஏழை இலக்கியத்துக்கு இங்கு இரண்டாமிடம் தான்.

இலக்கியத்தைச் சமூக மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தக் கூடாதென்பதல்ல. அது நல்லதொரு கருவி தான். ஆனால் இத் தளங்களில் அது பொதுவாகவே சமூகத்தைக் கூறுபோடும் கூரிய ஆயுதமாகவே பயன்படுத்தப் படுகிறது. சமூகத்தின் அழகினை வரைந்து காட்டும் தூரிகையாகவும் இலக்கியம் பயன்படும். அது இங்கு நடைபெறுவது குறைவு.

பயிரிடாத தரையில் களை குடிகொள்வது வழக்கம். ஈழத்தமிழ் இலக்கியத்தரை களை இழந்து காணப்படுவதற்குக் காரணம் களைகள் அதிகமானது தான். நல்ல விமர்சனமே நல்ல களை கொல்லி. அது நல்ல இலக்கியத்தைப் பின்னவும் (weave) வல்லது. அது போல் களை இலக்கியத்தைப் பின்னி எடுக்கவும் வல்லது.

இப்போது எமக்குத் தேவை - இலக்கியத்தைப் "பின்னும்" கூட்டமே.

# மத ஸ்தலங்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும்

## (வவுனியன் இலங்கையிலிருந்து...)



இலங்கையில் போருக்கு பிந்திய காலப்பகுதியில் மத ஸ்தலங்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. இது இலங்கை ஒரு பல்லின சமூகமாக இணைந்த வாழுதலுக்கு பெரும் தடையாக அமையும் விடயம் ஆகும். சிறப்பாக அதிகப்படியாக முஸ்லீம் மத ஸ்தலங்கள் மீதான தாக்குதல்களே அதிகரித்து வருகின்றன. மேலும் இந்துக் கோவில்களும் தாக்குதலுக்கு உள்ளானது போல் பௌத்த கோவில்களும் தாக்குதலுக்கு(பௌதிக தாக்குதல் என்பதற்கு அப்பால் உளவியல் தாக்குதல்) உள்ளாக்கப் பட்டிருக்கின்றன. புத்த கோவில்கள் தாக்கு தலுக்கு உள்ளாக்கப் பட்டிருப்பதைவிட உருவாக்கப்பட்டன என்பதே உண்மை நிலை ஆகும். இதுவே இவ் கோவில்கள் ஏனைய மத, இன மக்களால் பௌதிக ரீதியில்லாமல் உளவியல் வெறுப்பிற்கு உள்ளாகி இருக்கின்றன. மத, இன நல்லிணக்கத்துடன் இலங்கையராக வாழுதல் என்று விரும்பும் யாரும் இவற்றை வரவேற்க மாட்டார்கள்.

எப்படி புலிகளின் காலத்தில் தமிழ் பிரதேசங்களில் நடைபெற்ற குற்றச் செயல்களுக்கு (சிறப்பாக கொலை, ஆள்கடத்தல்களுக்கு) புலிகள் பொறுப்புக் கூற வேண்டியவர்களாக இருந்தார் களோ அதேயளவு பொறுப்பு இன்று அரசாங்கத்திற்கும் இருக்கின்றது. அது கிறீஸ் பூதமாக இருக்கலாம், பள்ளி வாசல்கள் மீதான தாக்குதல்களாக இருக்கலாம், இந்துக்கோவில்கள் மீதான தாக்குதல்களாக இருக்கலாம், குடியேற்றங்களாக இருக்கலாம் ஏன் வலிந்து நிறுவப்படும் பௌத்த கோவில்களாக இருக்கலாம்.

இவை எல்லாவற்றிற்கும் இலங்கை அரசே பொறுப்பு கூற வேண்டிய நிலையிலேயே இருக்கின்றது. இவ் நிகழ்வுகள் நடைபெறும்போது முத்தரப்பும் பொறுப்புடன் நடந்து கொள்ளாமல் உணர்ச்சிவசப்பட்டு இனவாத, மதவாத அடிப்படையில் அறிக்கைகளை விடுவதும், செயற்படுவதும் வேணும் என்றால் தமது பிழைப்பு அரசியலை நடாத்த உதவுமே தவிர இன ஐக்கியம், மத நல்லிணக்கத்திறகு உதவாது.

சிங்கள மக்கள் மத்தியில் இருக்கும் இனத் தீவிரவாதிகளான பொது பல சேனாவாக இருக்கட்டும் ஜாதிக ஹெல உறுமயவாக இருக்கட்டும் இன்ன பிற சிங்களப் பேரினவாத அமைப்புக்களாக இருக்கட்டும் இனவாத செயற்பாட்டை நிறுத்த வேண்டும் அல்லது இவற்றின் செயற்பாடுகளை தடைசெய்ய வேண்டி பொறுப்பு இலங்கை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.


மறு புறத்தில் தமிழர் தரப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சிறப்பாக சுரேஸ் பிரேமசந்திரன் போன்றவர்களின் இனவாதம் நிறைந்த மறுப்பு அறிக்கைகள் அவர்களின் தேர்தல் வெற்றிக்கான உசுப்பேத்தலை ஏற்படுத்துவதற்கு மட்டுமே உதவலாம். மாறாக தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்க்க உதவாது. முஸ்லீம் மக்களைப் பொறுத்தவரையில் ஒரு தரப்பினர் ஒன்றும் நடைவில்லை என்று எல்லாவற்றையும் மூடி மறைக்க முற்படுவதும், இன்னொரு தரப்பினர் மத நம்பிகையை வைத்து மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயலாது ஜிகாத் பேசுவதும் நல்லதல்ல. இவை எல்லாவற்றிற்கும் அப்பால் சகல இனங்களிலும் பிரச்னையின் உண்மைத் தன்மையை அறிந்து மத நம்பிகையாளர்கள், இன உணர்வாளர்கள் மத்தியில் எவ்வாறு மத, இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தலாம் என்று முயற்சிப்பதை இங்கு கவனத்தில் எடுத்தல் வேண்டும். ஆனால் இன்னமும் மத, இன நல்லிணகத்தை குழப்பும், இதில் குளிர்காய நினைக்கும் சக்திகளே பலமாகவும் மறுதரப்பினர் பலவீனமாகவும் காணப்படுவது வருந்தத்தக்கது.

**Basement For Rent**

newly renovated 2 bedroom basement, 1 full washroom, kitchen, living room, washer,dryer

intersection morningside/sheppard

contact: 416 520 5883





கறிவேப்பிலை, வல்லாரை, பசளி, அறுகம்புல்

எங்களிடம் சொறெல் (தேசிக்காய் சுவையுள்ள சலாட் இலை), பிளடி டொக் (கீரை வகை மரக்கறி), சண்சோக் (நீரிழிவு நோய்க்காரர்கள் உண்ணக் கூடிய சூரியகாந்தி இனக் கிழங்கு), பஷன் பழக் கன்று, லெமன் கிராஸ் (தேநீரில் கலந்து குடிக்கக் கூடிய, கறிகளுக்குப் போடக் கூடிய தேசிக்காய் சுவையுள்ள புல்) போன்ற இன்னும் பல கன்றுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

விரைவில் வேப்பங்கன்று, கற்பூரவள்ளி கிடைக்கும்.

Seeds Of Asia
1345 Morningside ave #8
(North of Sheppard)
416 284 4004

உங்கள் வைபவங்களுக்கான
கேக் பெட்டிகள்

திருமணம், பிறந்த நாள், திருமண நினைவு நாள் உட்பட்ட உங்கள் மகிழ்வுக் கொண்டாட்டங்களில், நினைவாக வழங்கப்படும் றிச் கேக் பெட்டிகள்

விதம் விதமான வடிவங்களில்
மிகவும் மலிவான விலைகளில்

ஆடம்பர வடிவமைப்புகள்
Luxurious and Elegant Designs
உங்கள் விருப்பத்திற்கேற்ற வடிவமைப்புகள்
Fully Personalised/Customised
உயர்தரக் காகித அட்டைகள்
Premium Paper Cardstock available

கேக் அலங்கார வடிமைப்பாளர்களுக்கு
(Cake Decorating Designers)
ஊக்குவிப்புப் பரிசில்கள்!
இலவச விளம்பரம்!
உங்கள் வாடிக்கையாளர்களுக்கு காட்டக் கூடிய மாதிரி வடிவங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

Palm Print
416 284 9545
palmprint.ca
1345 Morningside ave #8
(North of Sheppard)







# WINNERS

## INSURANCE AND INVESTMENT SERVICES

**பூரணஆயுட்காப்புறுதி, கொடிய நோய்க்கான காப்புறுதிக் கட்டணங்கள் மீண்டும் அதிகரிக்கின்றன. குறுகியகால (TERM) காப்புறுதிக் கட்டணங்கள் என்றும் இல்லாத அளவுக்கு குறைந்துள்ளன!! மேலும் தாமதிக்காமல் இன்றே உங்களுக்குத் தேவையான காப்புறுதியை பெற்றுக்கொள்ளுங்கள்!!**

**NO BODY CAN BEAT OUR RATES ON LIFE & MORTGAGE INSURANCE**

COMPARE OUR RATES - ஒப்பிட்டுபாருங்கள் எமது கட்டணங்களை

TERM (குறுகியகால காப்புறுதி) INSURANCE RATES **

| | $250,000/= | | | | $500,000/= | | | | $1,000,000/= | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| AGE | TERM 10 | | TERM 20 | | TERM 10 | | TERM 20 | | TERM 10 | | TERM 20 | |
| | MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE |
| 25 | 12.37 | 9.23 | 16.00 | 12.60 | 18.00 | 12.15 | 26.90 | 18.90 | 28.35 | 17.10 | 46.80 | 30.40 |
| 35 | 12.15 | 10.13 | 17.61 | 14.17 | 18.54 | 15.03 | 28.89 | 21.60 | 30.15 | 24.30 | 52.65 | 37.89 |
| 45 | 22.05 | 16.15 | 35.38 | 26.78 | 33.39 | 22.77 | 62.16 | 46.35 | 60.75 | 39.15 | 116.82 | 84.15 |

| | WHOLE LIFE ( பூரண ஆயுள் காப்புறுதி ) INSURANCE RATES** | | | | | |
|---|---|---|---|---|---|---|
| AGE | $100,000/= | | $250,000/= | | $500,000/= | |
| | MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE |
| 20 | 36.67 | 32.58 | 68.54 | 55.42 | 124.58 | 98.75 |
| 25 | 42.43 | 36.00 | 82.29 | 67.50 | 151.25 | 123.33 |
| 30 | 47.64 | 40.76 | 98.54 | 86.86 | 184.17 | 157.81 |
| 35 | 57.78 | 48.24 | 126.46 | 109.87 | 241.25 | 206.40 |
| 40 | 73.26 | 60.57 | 163.96 | 132.66 | 313.75 | 254.13 |
| 45 | 97.11 | 78.66 | 213.75 | 180.63 | | |
| 50 | 119.42 | 100.35 | 257.71 | 226.88 | | |

**NEW REVISED RATES**

| 20 வருடங்களில் கட்டிமுடிந்தபின்பும் இருக்கும் பூரண ஆயுள் காப்புறுதி** | | | | | |
|---|---|---|---|---|---|
| $100,000/= | | $250,000/= | | $500,000/= | |
| MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE |
| 56.63 | 48.47 | 125.21 | 106.93 | 222.79 | 178.15 |
| 65.06 | 56.21 | 148.81 | 128.83 | 268.71 | 215.56 |
| 78.91 | 69.30 | 181.76 | 158.80 | 332.06 | 282.74 |
| 90.98 | 79.74 | 221.94 | 188.35 | 416.67 | 351.45 |
| 114.03 | 94.86 | 268.50 | 227.03 | | |
| 140.94 | 115.74 | 342.23 | 279.23 | | |
| 171.27 | 140.58 | | | | |

**மேலும் மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி (85 வயது மட்டும், $300,000/= ), CRITICAL ILLNESS, DISABILITY, MEDICAL , மற்றும் பிரயாணத்துக்கான காப்புறுதிகளும் எம்மிடம் மிகவும் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.**

**MORTGAGE** க்கான காப்புறுதிகள் **வங்கிகளிலும் பார்க்க மிகவும் குறைந்த கட்டணத்தில்** எம்மிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

உங்கள் முதலீட்டு திட்டங்களுக்கும் (RRSP. PENSION PLANS,TFSA), குழந்தைகளுக்கான முதலீட்டுத் திட்டங்களுக்கும் (RESP) மேலும் உங்களது தற்போதய காப்புறுதி, PENSION PLAN போன்றவை உங்களுக்கு போதுமானதா! சிறந்ததா! என்பனபற்றிய ஆலோசனைகளுக்கும்



**அழையுங்கள் RUBAN 416 953 8036**

E:mail : **winnersinsurance@bell.net**
Web : **winnersinsurance.com**

**15 YEARS IN CANADIAN INSURANCE & INVESTMENT INDUSTRY**

Canada Life · Manulife Financial For your future · INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · SSQ Financial Group · Empire Life · Desjardins · Sun Life Financial

** SOME CONDITIONS APPLY. ALL RATES ARE NON SMOKER RATES & SUBJECT TO CHANGE WITHOUT NOTICE. RATES ARE QUOTED AS OF 2nd. July 2013.

# தலைக்கறுப்புக் காட்டாத அஞ்ஞாத வாசம்

'என்னடா, கியூறியஸ், கொஞ்சக் காலமாகத் தலைக்கறுப்பைக் காணேலை?'

அஞ்ஞாதவாசம் செய்யும் கியூறியஸைக் காண்போர் கேட்கும் போதெல்லாம் உள்ளூர ஒரே குஷி.

அட, இன்னமும் சாயம் பூசுவதற்கு மயிர் இருக்கிறதே என்ற மகிழ்ச்சி தான்.

கேட்பவர்கள் ஒன்றும் சாயம் பூசிய மயிர் பற்றிக் கவலைப்படுபவர்களும் அல்லர். கியூறியஸின் அறு(சு)வையைக் காணோம் என்பது தான் அவர்கள் கவலை. பனங் காட்டிற்கூடாய் (பனை யாழ்ப்பாணத்தில் மட்டும் தான் வளரும், எனவே பனை மரம் என்றால் அது யாழ்ப்பாணியின் தேசிய சொத்து, சின்னம் என்ற எண்ணத்தில் திரியும் யாள்ப்பாணிகள் நிறைய உண்டு) தெரியும் உதயசூரியனின் விடியலும் போய், விடியலின் ராகம் பூபாளமும் போன பின்னால், என்ன முகப்புத்தகத்திலா நேரடி வர்ணனை செய்ய முடியும்? எனவே தலைக்கறுப்பைக் காட்டாமல் கியூறியஸ் அஞ்ஞாத வாசம் சென்றனன்.

அப்படி ஒன்றும் திரை கடல் ஓடித் திரவியம் எதையும் தேடப் போகவில்லை. பங்கருக்குள் ஒளிந்து அஞ்ஞாதவாசம் செய்யவுமில்லை. ஒரு மூன்று மாதம் அறுசுவை வாசகர்களிடம் தப்பிய, சும்மா தலை(க் கறுப்பைக்) காட்டாத அஞ்ஞாத வாசம் மட்டும் தான்.

அதிக பட்சமாய் நாற்பத்தைந்து பேர் கூடும் இலக்கிய, அரசியல் கூட்டங்களுக்குக் கூடத் தலை காட்டாமல்!

பிறகென்ன, கியூறியஸ் இல்லாததால், அந்தக் கூட்டங்கள் எல்லாம் நாற்பத்து நான்கு பேருடன் கூடி அரசியல் தீர்வுகள் கண்டன. ஈழம் அமைத்தன. இலக்கியம் படைத்தன. சந்தித்தன. விருதுகளும் கொடுத்தன. மறக்காமல் விமர்சனமும் செய்தன. தப்பாமல் கூட்ட முடிவில் ஒன்பது அணிகளும் மோதி, மீண்டும் சந்திப்பதாய் முடிவு செய்து, வீடு ஏகி, முகப்புத்தகக் களத்திலும் வலைப் பக்கங்களிலும் குடுமிப்பிடிச் சண்டையைத் தொடர்ந்தன.

மொத்தத்தில், கண்ணை மூடிப் பால் குடிக்கும் பூனை உலகம் இருண்டிருப்பதாய் நினைப்பது போல, உலகைப் புரட்டிய மகிழ்வில் திளைத்தன.

எல்லாருக்குமே உலகம் தங்களைச் சுற்றிச் சுழல்வதான நினைப்பு.

கியூறியஸ் அஞ்ஞாத வாசம் சென்றதால் உலகம் ஒன்றும் இருண்டு போய் விடவில்லை. கியூறியஸின் உலகமும் இருண்டு விடவில்லை.



**பேராறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி**

இலக்கியச் சந்திப்புகளிலும், விருது விழாக்களிலும் கியூறியஸ் 'இருட்டடி'ப்புச் செய்யப்பட்டாலும், கியூறியஸை சந்திப்புகளுக்கு அழைக்க ஆட்களா இல்லை?

நோர்வேயில் இருந்து வந்த இரண்டு பள்ளி நண்பர்களைச் சந்திப்பதற்காய், மரண வீட்டு நிலையமொன்றில் வேறு மரண வீட்டுக்கு வந்த கியூறியஸின் இலக்கிய நண்பரைச் சந்தித்த பள்ளி நண்பன் தொல்லைபேசி இலக்கம் வாங்கி... முப்பத்து மூன்று வருடங்களின் பின்னால், கியூறியஸின் அஞ்ஞாத வாசம் கலைத்து... நாடு கடந்த தமிழீழப் பேரரசின் இலாகா இல்லாத மந்திரியாக உள்ள பள்ளி நண்பனின் மில்லியன் டொலர் மாளிகையின் நிலக்கீழ் அறையில்... கியூறியஸைச் சந்தித்த பள்ளித் தோழர்களும் 'அட, நீ இப்பவும் அப்படியே இருக்கிறாயடா' என்று மனம் புழுங்கிக் கொண்டார்கள். ஸ்கைப்பில் வந்து கதைத்த கொழும்பு வாழ் நண்பனும் 'அட, ஜிம்முக்குப் போறனியாக்கும்' என்று பொறாமைப்பட, 'போடா, இதெல்லாம் வேலை வெட்டியில்லாதவன் தூக்கும் பார உருளைகளால் வந்ததன்று, மண்வெட்டி தூக்கித் தோட்டம் கொத்திய உடல்வாகு' என்று தெளிவுபடுத்த...

மொட்டை விழுந்து, ஆங்காங்கே தென்படும் மயிரிழைகளுக்கும் தப்பாமல் சாயம் பூசி, குடும்ப வாழ்வின் துயரம் துரிதப்படுத்தும் முதுமையில் வாடி நின்றவர்கள், கருகருவென்று நிறைந்திருக்கும் கியூறியஸின் இளமையின் இரகசியத்தை அக்கறையுடன் விசாரித்துக் கொண்டார்கள். அந்த இளமையின் பின்னால், நரைதிரை மூப்பொரு வடிவம் உண்டு என்பதைத் தெளிவுபடுத்தினாலும், 'உனக்கு கொட்டுண்டு போகாமல் இருக்குத் தானே' என்று வேறு ஆறுதல் கூறுகிறார்கள்.

பள்ளிக்காலத்திலேயே மொட்டை என்று எங்களால் அன்புடன் அழைக்கப்பட்ட நண்பன், அவுஸ்திரேலியாவிலிருந்து ஜமெய்க்கா, கோஸ்டா ரிக்கா வரைக்கும் வந்து கனடா வராமலே போயிருந்தான். ஒரு நோர்வே நண்பன் அவனோடு அங்கெல்லாம் சுற்றி விட்டு எங்களிடம் வந்திருந்தான்.

இவர்களின் சிரைச்சேதம், கணிதமும் சமூகக் கல்வியும் கற்பித்த ஆசிரியர்களை 'மொட்டை' என்று இவர்கள் பட்டம் வைத்து பழித்ததற்கான இயற்கையின் பழிவாங்கலாகக் கூட இருக்கலாம்.

அதற்கு கற்பனைக் கதை வேறு புனைந்திருந்தார்கள். குடித்து விட்டுப் படுத்திருந்த இருவரையும் கடவுள் தட்டி எழுப்பி, 'பக்தர்காள், உங்கள் வேண்டுதல் என்னவோ?' என்று விசாரிக்க, வெறியில் இருந்த இருவரும் 'எங்களுக்கு ஒரு மயிரும் வேண்டாம், படுக்க விடு' என்றதற்கு, கடவுள் 'அப்படியே ஆகட்டும், பக்தர்காள்' என்று அருள் பாலித்ததாகக் கதை இயற்றியிருந்தார்கள்.

ஆசிரியர்களின் பழி இருக்கட்டும், ஜடாமுடிக் கடவுள் சும்மா இருப்பாரா, மொட்டை விழுந்ததற்குத் தன்னைக் காரணம் காட்டிப் பொய்க்கதைகள் புனைந்ததற்கு?

பார்ட்டியில் குடித்து மயங்கிய எல்லோரும், அதிகாலை இரண்டு மணிக்கு 'எங்களுக்கு ஒரு பியரும் வேண்டாம், படுக்க விடு' என்று பசுமை நிறைந்த நினைவுகளோடு பிரிந்தார்கள்.

தமிழனுக்கும் தலைக்கறுப்புக்கும் என்னவோ பெரிய தொடர்பு இருக்கிறது. தலைக் கறுப்பை மறைத்துத் திரிபவன் ஏதோ ஏமாற்றுக்காரன், தீய நடத்தைக் காரன், அவமானத்தை மறைக்க, ஊரார் கண்ணில் படாமல் திரிய விரும்புபவன் என்பது தான் தமிழன் முடிவு.

நாட்டில் உள்ளவர்கள் வரலாற்று நாயகர்களை காட்டுக்கு அஞ்ஞாத வாசம் அனுப்பியது அந்தக் காலம். பாண்டவர்களும் இராம, லக்குமணர்களும் இப்படியாகத் தான் காடு புக்கினர். காட்டில் வாழ்ந்த வரலாற்று நாயகர்கள் நாட்டில் உள்ளவர்களை தலைக்கறுப்புக் காட்டாமல் அஞ்ஞாதவாசம் அனுப்பியது இந்தக் காலம்.

தாசி வீடு புக்கும் தலையாரிகள் இருளிலும் தலைக்கறுப்புத் தெரியாமல், தலைக்குத் துண்டோடு, ஏதோ ஆவிகள் உலவியது போல, வெள்ளை வேட்டியும் தலையில் துண்டுமாய் போவது தமிழ்ப்படப் பாரம்பரியம்.

ஊருக்கே தெரிந்த தாசி வீட்டுக்குப் போகும்போது, எதுக்கடா வெட்கம்?

பின்னால் காத்திருப்பவன் ஆளைத் தெரிந்தால், 'ஓ, அண்ணன் பலே கில்லாடி, உள்ளுக்கை போனால், சட்டுப் புட்டென்று காரியத்தை முடிச்சுட்டு வெளியில வந்திடுவார்' என்று அண்ணன் பெருமை பேச மாட்டானா?

அல்லது கடன்காரன். வாங்கிய கடனை அடைக்க முடியாமல், கடன் கொடுத்தவன் துரத்திப் பிடிக்கக் கூடும் என்ற பயத்தில் தலைக்குத் துண்டு போடுவோரும் உண்டு.

அது அங்கே! வாங்கிய கடனை அடைக்காவிட்டால் ஊருக்கே தெரியும் என்ற பயம்.

கனடாவில் கடன் வாங்கியவன் தலை நிமிர்ந்து திரிய, கடன் கொடுத்தவன் தான் துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று ஓடித் திரிகிறான்.

அதிலும் வங்கிகளில் கடன் எடுத்து வங்குரோத்தானவர்களுக்கு இருக்கும் தில் யாருக்குமே இருப்பதில்லை. கடன் அட்டை மோசடி செய்து சிறை மீண்ட செம்மல்களும் அவ்வாறே என்க.

மொத்தத்தில் கடன் வாங்குவது என்பது கொடுக்காமல் விடுவதற்கு என்பது தான் புலன் பெயர் தமிழன் முடிவு.

ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை பேச முடியாவிட்டாலும், கனடாவில் இந்த மோசடிகளில் அனுபவஸ்தர்கள் அதிகம்.

கொஞ்ச நாளைக்கு முன்னால் யாரோ தங்கப் பவுணாய் கடன் வாங்கியது ஞாபகம். பிறகு ஈயார் தேட்டை தீயார் கொண்டு, பெருந்தொகையாய் அந்தத் தங்கம் தீயார் கைச் சேர்ந்ததாயும் கதைகள் பல.

தங்கம் வாங்கியவர்களின் கதையும் தலைக்குப் போட்ட துண்டோடு முடிந்தது.

இதனால் கியூறியஸ் சக தமிழனிடம் கடன் வாங்குவதுமில்லை. கொடுப்பதுமில்லை.

காரணம், வாங்கினால், வட்டி கொடுத்து மாளாது.

கொடுத்தால் திரும்பி வாங்கத் தெரியாது. கடன் வாங்கியவன் தன் கஷ்டத்தைச் சொல்லியழ, இன்னமும் கடன் கொடுத்து... எதற்கு வீண் தொல்லை?

இப்படியாக தன் தலைக்குத் துண்டு போடாமல், அஞ்ஞாதவாச காலத்தில் தலைக்கறுப்பைக் காட்டிக் கொண்டு தான் கியூறியஸ் நடமாடித் திரிந்தாலும், கண்டவுடன் இந்தத் தலைக் கறுப்புக் கதை தான் நண்பர்களுக்கு வருகிறது.

எழுதித் தொலைத்துத் தான் என்ன என்று அஞ்ஞாதவாசம் போன கியூறியஸின் தலைக் கறுப்பைக் கண்ட நண்பர்கள், ஈரச்சாக்கோடு வந்து ஒரே அமுக்காய் அமுக்கி, 'மவனே, இந்த வாட்டி நீ தப்ப முடியாது' என்று மடக்கி விட்டார்கள்.

சுற்றம் சூழ குண்டுகள் விழுந்து, மக்கள் எல்லாம் அங்கம் சிதைந்து, உயிர்கள் புதைந்த போதும், ஊர் உலகத்தில் என்ன நடக்கிறது என்ற கவலையில்லாமல், தப்பாமல் தாடி மழித்து, தலைக்குச் சாயம் பூசி தலைக்கறுப்பு பளபளக்க வெளியே வந்தவர்கள், 'ஈரச்சாக்கு'க் கட்டில் பாடையாக... தலையில் துண்டோடு ஊர்வலமாய் போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

இலக்கியக் கூட்டங்களில் 'இருட்டடி'ப்புச் செய்யப்பட்டாலும்... கியூறியஸ்க்கு தன் தலைக்கறுப்புப் பற்றி எந்தப் பிரச்சனையும் இல்லை...

ஈரச் சாக்குப் போட்டு அமுக்கியவர்கள், கௌபீனத்தை உருவி, தலைக்குத் துண்டு போடாத வரைக்கும்!

**Cell Tel Mobility**

நிறுவனத்துக்கு அருகேயுள்ள

வியாபார நிலையம் வாடகைக்கு உண்டு

தொடர்புகளுக்கு (416) 999-4126

2637 Eglinton Avenue East, Scarborough



WHO WANTS TO BE AN INSURANCE AGENT?

Become an Insurance Advisor

We provide you with Exceptional Service:

- Life Licensing Qualification program
- Free Seminars and workshops for career development
- Free product and sales training
- Providing best advice and knowledge in the field of financial industry
- Competitive compensation packages
- Ongoing training and support
- Mentoring and motivational support by professionals

உயர் கல்வியே உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் வழங்கும் அதிஉன்னத கொடை

RESP

- கனடிய அரசினால் வழங்கப்படும் மானியம் 20% - 40%
- காப்புறுதி நிறுவனம் வழங்கும் விசேட சலுகை 15%
- கனடிய கல்வி மானியமாக வருடம் 500 டொலர்
- இவை அனைத்தையும் பெறுவதற்கு RESP திட்டத்தை இன்றே ஆரம்பியுங்கள்

MEDICAL INSURANCE FOR SUPER VISA 100% REFUND IF VISA DENIED

கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி

நோய் ஏற்படாதுவிட்டால் கட்டிய பணம் முழுவதையும் மீளப்பெறுங்கள்.

வயோதிபர்களுக்கான காப்புறுதி

- மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை
- உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்

- digi Media -

Life100
INSURANCE & INVESTMENTS INC.

சிறீதரன் துரைராஜா
CLU, CHS

LIFE INSURANCE • CRITICAL ILLNESS
GROUP INSURANCE • HEALTH & DENTAL
MORTGAGE INSURANCE • RRSP • RESP

Direct: 416.918.9771
Business: 416.321.2500
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca

MDRT
Member of Million Dollar Round Table

Are you getting Million Dollar advice?